
KALKI 17.11.91 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு
கல்கி
குழந்தை வளர்ப்பு:
அப்பாவுக்கும் பொறுப்பு




உங்களுக்குத் தேவை அதிக ஊட்டச்சத்துள்ள

புதிய காம்ப்ளான்® விட்டாமில்க்(T)

உங்களுக்குள் இன்னொரு புதிய உயிர், உங்கள குழந்தை வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த முக்கிய நேரத்தில் உங்கள் ஆரோக்கியத்திற்கும், சிசுவின் வளர்ச்சிக்கும் போதுமான கூடுதல் ஊட்டச்சத்துக்கள் தேவை.

காம்ப்ளான் – விட்டாமில்க் உங்களுக்கும், பிறக்கப்போகும் உங்கள் குழந்தைக்கும், தேவையான ஊட்டச்சத்துக்களையும் மற்றும் காம்ப்ளானின் எல்லா நற்பயன்களையும் கொண்டது. இதில் ஃபாலிக் ஆஸிடு, பால் புரதம் (22.2 கிராம்), வைட்டமின்கள் A, B_6 மற்றும் C, இரும்புச் சத்து, அயோடின், கால்ஷியம், ஸிங்க் மற்றும் மக்னீஷியம், தேவையான அளவில் அடங்கியுள்ளது.



ரெகுலர் * சாக்லேட்

தினமும் 2 கப்புகள்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

GL/V/P/91/R-TAM

"'ஜெ'க்காக ரகசியக் கூட்டங்கள் நடத்தினேன்"



– புது அமைச்சர் விஸ்வநாதன்

குடியாத்தத்தில் 1966 இல், ஒரு தி.மு.க. கூட்டம். அண்ணா உரையாற்ற விருக்கிறார். அவர் பேசும் முன்பு பலர் பேசினாலும், ஓர் இளைஞர் பேசுவதை மட்டும் அண்ணா ரசித்துக் கேட்கிறார். இந்தக் கூட்டம் நடந்து சில நாட்கள் கழித்துக் கட்சிக்காரர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார் அண்ணா. ''குடியாத்தத்தில் ஓர் இளைஞர் பேசியதைக் கேட்டேன். ரொம்பப் பிரமாதமாக இருந்தது. அவனைச் சமயம் வரும்போது சட்ட மன்றம், நாடாளுமன்றம் என்று எதாவது ஒன்றுக்கு அனுப்பலாம். யாரய்யா அவன்?'' என்று கேட்கிறார். உடனே அருகிலிருந்த மைனர் மோசஸ், ''அவன் சட்டக் கல்லூரியில் என் தோழன் தான். பெயர் ஜி. விஸ்வனாதன்'' என்று சொல்கிறார்.

''அண்ணாவை நான் கவர்ந்தது இப்படித்தான். 1967 இல் என்னை வந்தவாசி தொகுதியில் நிறுத்திப் பாராளுமன்றத்துக்கு அனுப்பினார் அண்ணா'' என்கிறார் உணவு மந்திரியாகப் பொறுப்பேற்றுள்ள ஜி. விஸ்வனாதன். அரசு விருந்தினர் விடுதியில் சாரி, சாரியாக வந்து மாலையிடும் தொண்டர்களை உபசரித்துக் கொண்டே நம்மோடும் பேசுகிறார். அடுத்தவர் காதுக்குக் கேட்காத மெதுவான குரல்.

அமைச்சருக்குச் சொந்த ஊர் குடியாத்தம். உள்ளூரில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, சென்னை லயோலாவுக்கு வந்து விட்டார். இளங்கலை, முதுகலைப் பட்டங்களை அங்கு முடித்தார்.

''கல்லூரியில் படிக்கும் போது சென்னையில் நடக்கும் தி.மு.க. கூட்டங்களுக்குச் செல்வேன். அனைத்துக் கல்லூரிப் பேச்சுப் போட்டியில் பல முறை பங்கு கொண்டவன். இதனால் எனக்கு 'மாணவ நாவலர்' என்று நண்பர்கள் வட்டாரத்தில் பெயர் உண்டு. லயோலாவில் படிப்பை முடித்த பிறகு, சட்டக் கல்லூரியில் இரண்டு வருடம். அங்குதான் என் அரசியல் உணர்வுகள், கொழுந்து விட்டன'' என்கிறார் அமைச்சர்.

1967 முதல், 1977 வரை பாராளுமன்றத்தில் இருந்ததால், இந்திரா காந்தி முதற்கொண்டு பல காங்கிரஸ் தலைவர்கள் இவருக்குப் பரிச்சயம். தவிர வேறுபல கட்சிகளைச் சேர்ந்த சிறந்த தலைவர்களுடன் பழகும் வாய்ப்பும் கிடைத்தது.


''ஒரு முறை லோகியா, என்னைக் கூப்பிட்டார். 'ஏன் இளைஞனே என்னுடன் பேசமாட்டேனென்கிறாய்?' என்று கேட்டார். நான் உடனே 'நீங்கள் ஒரு ஹிந்தி வெறியர்' என்றேன். உடனே அவர் 'நான் ஹிந்தி வெறியன்தானே தவிர தமிழுக்கு எதிரி அல்ல', ஒவ்வொருவரும் அவர் தாய் மொழி மேல் பற்று கொள்ள வேண்டும் என்று அரை மணிநேரம்

விளக்கம் சொல்லிவிட்டுப் போனார். இது போல பல சம்பவங்கள்'' என்று நினைவு கூர்கிறார் அமைச்சர்.

படித்து முடித்தபின் யு.பி.எஸ்.சி. பரீட்சை எழுதினார். போலீஸில் செலக்ட் ஆயிற்று. ஆனால் இவர் அப்பா தடுத்து விட்டார். இன்று 51 வயதாகிறது அமைச்சருக்கு. மனைவி பெயர் ராஜேஸ்வரி. நான்கு மகன்கள். ''நான் ஒரு வெஜிடேரியன். அமைச்சரவையிலேயே நான் மட்டும் தான் வெஜிடேரியன்'' என்று சிரித்துக் கொண்டே கூறுகிறார்.

''எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பித்து மூன்று வருடங்கள் கழித்துத்தான் சேர்ந்தேன். தி.மு.க.வில் இருந்து கொண்டே அரிசி பேர ஊழலின் போது 'ப.வு.ச. மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று அறிக்கை விட்டவன் நான். அது போலவே வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் கலைஞர் ஸ்டிரைக்கைத் தூண்டிவிட்டு, பல தொந்தரவுகளை நிர்வாகத்துக்குக் கொடுத்தார். அப்போதும் அதை எதிர்த்துப் போராடியிருக்கிறேன்'' என்கிறார் அமைச்சர்.

சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இடையில் ஒரு முறை, எம்.ஜி.ஆர் பச்சை குத்திக் கொள்ளச் சொன்னதை எதிர்த்துக் கட்சியை விட்டு வெளியேறி ஜனதாவில் சில காலம் இருந்திருக்கிறார் அமைச்சர். 1984 இல் வேலூரில்



''மாப்ளே! நீங்க ஹெல்த் இன்ஸ்பெக்டரா இருக்கலாம். அதுக்காக எங்க வீட்டுத் தலை தீபாவளி பட்சணத்தை "லேப்"புக்கு அனுப்பணும்னு அடம் பிடிக்கிறது கொஞ்சமும் நல்லால்லே!''

''இத பாருங்க! நீங்க தொடர்கதை எழுத்தாளரா இருக்கலாம். அதுக்காகப் போன வருஷ தீபாவளி பட்சணத்தை எனக்குக் குடுக்கறது சுத்தமா சரியில்லே!''

- வேதாரண்யம் வேதமூர்த்தி

ஒரு பொறியியல் கல்லூரியை ஆரம்பித்தார்.

''இரண்டு வருட தி.மு.க. ஆட்சியில் என் கல்லூரிக்கு எல்லாவித இடைஞ்சல்களையும் கொடுத்தது அரசு. இதற்குக் காரணம், சட்ட மன்றத்தில் எங்கள் தலைவி அவமானப்படுத்தப் பட்டதைக் கண்டித்து, நான் கருணாநிதி கொடும்பாவியை எரித்ததுதான்.''

எம்.ஜி.ஆர். இருக்கும்போதே ஜெ.வை மிகத் தீவிரமாக ஆதரித்தவர்களுள் இவரும் ஒருவர். ''குறிப்பாக எம்.ஜி.ஆர் நோய் வாய்ப்பட்ட பிறகு, கட்சியில் உள்ள மற்ற பெருந் தலைவர்கள் ஜெ.யைத் தனிமைப் படுத்தப் பார்த்தார்கள். அப்போதெல்லாம், நான், செங்கோட்டையன் போன்றோர் ரகசியக் கூட்டங்கள் நடத்தி, திட்டங்கள் வகுத்திருக்கிறோம்'' என்கிறார் விஸ்வநாதன்.

பதவியேற்ற அடுத்த நாளே ஏராளமான நியாய விலைக் கடைகளுக்குத் திடீர் விஸிட் செய்த அமைச்சரிடம், ''உணவு அமைச்சராகப் பொறுப்பேற்றபின் உங்கள் முன்உள்ள உடனடி சவால் என்ன?'' என்று கேட்டோம்.

''அத்தியாவசியப் பொருட்கள் எந்த விதத் தட்டுப்பாடுமின்றி மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்பதுதான் எனது முதல் குறிக்கோள். 22,000 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. இவற்றில் ஏதாவது பிரச்னை என்றால், அரசின் கௌரவமும், ஆளும் கட்சியின் நற்பெயரும், பாதிக்கப்படுகிறது. விநியோக முறைகளைச் சீர் படுத்துவதற்காக விரைவில் அதிகாரிகளைச் சந்திக்கவிருக்கிறேன்'' என்றார்.

அபாயங்களை நன்றாகப் புரிந்து வைத்திருப்பதே இவருடைய பெரிய பலம் அல்லவா?

சந்திப்பு : ப்ரியன்

படம் : ராஜன்

டெலிபோனில் பேசும் போது :

1. முகத்தில் புன்னகை இல்லா விட்டாலும் பேச்சில் கனிவும் இனிமையும் திகழட்டும்!

2. உரக்கப் பேசுதல் நாகரிகமல்ல; அமைதியான குரலுடன் பணிவும் சேர்ந்து கொண்டால் கேட்பவருக்கு உங்கள் மீது மதிப்பு ஏற்படும்.

3. பேசுவதற்கு முன் மனத்திற்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டு பேச்சை சுருங்கச் சொல்லி முடித்துக் கொள்ளுதல் நலம்; உங்கள் டெலிபோனை மற்றவர்களும் கூப்பிட்டுக் கொண்டிருக்கலாமல்லவா?

4. இந்த நம்பரிலிருந்து இன்னார் பேசுகிறேன் என்பதை முன்னுரையாகக் கொண்டு பேச்சைத் துவக்குதல் சாலச் சிறந்தது.

5. பல விஷயங்களுக்குத் தபால் கார்டே போதும்; 15 பைசாவில் முடிக்க வேண்டியதை 1 ரூபாய் டெலிபோன் காலில் பேசி வீணடிப்பது நல்லதன்றே!

- சந்திரிகா, குன்னூர்.



பஸ்ஸில் செல்லும் பெண்களுக்கு...

1. பஸ் தூரத்தில் வரும்போதே டிரைவர் யார் என்பதைக் கவனியுங்கள். இந்த டிரைவர் பஸ்ஸை எங்கே நிறுத்துவார் என்பதைக் (பழக்கம் காரணமாக) கணித்து எல்லோருக்கும் முன் நீங்கள் பஸ்ஸில் ஏறலாம்.

2. பஸ் ஏறுமுன் சரியான சில்லறையை உள்ளங்கையில் வைத்துக் கொள்ளுங்கள்.

3. பஸ்ஸில் உட்கார இடம் கிடைக்கவில்லை எனில், ரெகுலராக பஸ்ஸில் வரும் ஒரு பெண்மணியிடம் கைப்பை, குடை ஆகியவற்றைக் கொடுக்கலாம்.

4. ஒரு சீட்டில் நீங்கள் மட்டுமே இருக்கிறீர்கள். உங்கள் அருகே ஒரு வயதானவர் நின்று கொண்டு வந்தால் சற்று நகர்ந்து அவரை உட்காரச் சொல்லலாம். சங்கோஜமாக இருந்தால் உங்கள் கைப்பையை இருவருக்கும் இடையே வைத்துக் கொள்ளலாம்.

5. கர்ப்பிணிப் பெண்களுக்கும், கைக் குழந்தை வைத்திருப்பவர்களுக்கும் தாமதமின்றி எழுந்து இடம் கொடுங்கள்.

6. உங்களுக்கு முன் சீட்டில் ஒரு பெண்மணியும் உங்கள் சீட்டில் நீங்களும் பயணம் செய்கிறீர்கள். நீங்கள் முன் சீட்டில் சென்று அமர்ந்து, நின்று கொண்டு வரும் ஆண்களுக்காக உங்கள் இருக்கையை விட்டுக் கொடுக்கலாம். இதனால் உங்கள் மதிப்பு பஸ்ஸில் உயரும்.

- 'சத்யசூர்யா', திருவெண்ணெய்நல்லூர்.

அடுத்த ஒலிம்பிக்ஸுக்கு அட்டகாச ஏற்பாடுகள்!

ஹிட்லர் காலத்தில் பெர்லினில் ஒரு ஒலிம்பிக்ஸ் நடந்தது. அதற்குப் போட்டியாக ஸ்பெயின் நாட்டில் 'People's Olympics' என்ற விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அந்த நிகழ்ச்சிகள் ஆரம்பிப்பதற்கு முன்னால், ஸ்பெயின் நாட்டு ராணுவத் தலைவர் ஜெனரல் ஃப்ராங்கோ கிளர்ச்சியைத் தூண்டிவிட, உள்நாட்டு யுத்தம் தொடங்கிவிட்டது. போட்டி நிமித்தம் பார்ஸிலோனா நகருக்கு வந்திருந்த ஆறாயிரம் விளையாட்டு வீரர்களும் இருபதாயிரம் பார்வையாளர்களும் தலை தப்பினால் போதும் என்று ஓடி விட்டனர்.

ஆனால் 1936 இல் பீப்புள்ஸ் ஒலிம்பிக்ஸ் நடத்துவதற்காக அமைக்கப் பட்ட ஸ்டேடியம் மற்றும் இதர வசதிகள் அழியாமல் காப்பாற்றப்பட்டன. 'இந்த வசதிகள் எங்களுக்கு ஏற்கெனவே இருப்பதால் 1992 ஒலிம்பிக்ஸை நடத்த நாங்கள் ஏற்கெனவே அறுபது சதவிகிதத் தயார் நிலையில் உள்ளோம்' என்று ஸ்பெயின் கூற, அந்த அம்சத்தையும் கருத்தில் கொண்டு அவ்வாய்ப்பு அந்நாட்டுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கடற்கரையையொட்டிய ஒரு சிறு குன்றின் உச்சியில் உள்ள பழைய Mont Juic ஸ்டேடியம் புதுப்பிக்கப்பட்டுப் பொலிகிறது. தொடக்க விழாவும் முடிவு விழாவும் இங்கே நடைபெறும். அதன் அருகிலேயே 17,000 பேர் அமரக்கூடிய புதிய அரங்கம் கட்டப்பட்டுள்ளது. பல விதமான விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான 44 நிலைக்களன்கள் தயார் நிலையில் உள்ளன.

உபயோகமற்றுப் போன பழைய தொழிற்சாலைகளும் கிடங்குகளும் அமைந்துள்ள பகுதியை முற்றிலுமாக நவீனமயமாக்கி, விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கான 'ஒலிம்பிக் கிராமம்' உருவாக்கப்பட்டுள்ளது. கடற்கரையையொட்டி அமைந்துள்ள இந்தக் 'கிராமத்தில்' சுமார் இருபதாயிரம் 'அபார்ட்மெண்ட்'கள் கட்டப்பட்டுள்ளன. (இவை ஒலிம்பிக்ஸ் முடிந்ததும் தனியாருக்கு விற்கப்பட்டுவிடும். முக்கால் வாசி 'அபார்ட்மெண்ட்'கள் ஏற்கெனவே விலை போய் விட்டன.)

இப் பகுதியில் கடல் அலைகள் சீற்றத்துடன் மோதுவதைத் தவிர்க்க, கடலுக்கடியில் தடை அமைக்கப்பட்டுள்ளது. இத் தடை, செங்குத்தாக எழும் அலைகளைப் பரவலாக்கிவிடும்.

ஒலிம்பிக்ஸ் சமயத்தில் நகருக்குள் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கப் புறநகர்ப் பகுதியில் 27.5 மைல் அளவுக்குப் புதிய சாலைகள் போடப் பட்டுள்ளன. பொதுத் துறை வாகன வசதிகள் தாராளமாக இருக்கும். சுரங்கங்களில் இயங்கும் கன்வேயர் பெல்ட் போல, 14,000 மக்களை இடம் விட்டு இடம் அழைத்துப் போகும் பிரும்மாண்டமான திறந்தவெளி எஸ்கலேட்டர்கள் மாண்ட் ஜுயிக் ஸ்டேடியத்தை நோக்கிப் போய்வந்த வண்ணமிருக்கும்.

☛ பல்வேறு நாடுகள் ஒலிம்பிக்ஸையொட்டி வெளியிட்ட தபால் தலைகள்



மூன்றரை பில்லியன் மக்கள் பார்ஸிலோனா ஒலிம்பிக்ஸை டீ.வி.யில் காண்பார்கள் - உலகெங்குமிருந்து 4,00,000 பேர் நேரில் பார்க்க வருவார்கள். பார்வையாளர்களுக்குத் தங்கும் வசதி, ஹோட்டல்கள் தவிர, தனியார் வீடுகளிலும் செய்யப்பட்டிருக்கிறது. படுக்க இடமும் காலை உணவும் (Bed + breakfast) நியாயமான கட்டணத்துக்குப் பெற முடியும்.

ஒலிம்பிக் கமிட்டியினர், இதர விளையாட்டுத் துறை அதிகாரிகள், அவர்களது உறவினர்கள் என்று ஏ ர ா ள ம ா ன வி.ஐ.பிக்கள் ஏற்கெனவே பார்ஸிலோனாவின் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் 'அட்வான்ஸ் புக்கிங்' செய்து விட்டனர். விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கான டிக்கெட்டுகளில் பெரும்பகுதியையும் இந்த வி.ஐ.பி.க்களே வாங்கிக் கொண்டு விட்டனர் என்ற புகாரும் இருக்கிறது!

ஆரம்ப தின விழா டிக்கெட்டின் விலை 400 டாலர்! இதர நிகழ்ச்சி டிக்கெட்டுகள், 27 டாலருக்குக் கிடைக்கும். ஸ்பானிஷ் மக்களுக்கு எண்பது சதவிகிதம் டிக்கெட்டுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வளவு பேர் அவற்றை வாங்க முன்வரவில்லை. கிட்டத்தட்ட ஒரு வருடம் முன்பே திட்டமிட்டு டிக்கெட் வாங்கிப் பழக்கமில்லையாம்!

பார்ஸிலோனா ஒலிம்பிக்ஸின் சின்னம் 'கோபி' என்ற 'நவீன'த் தோற்றமுடைய நாய்க்குட்டி. Javier Marsical என்பவர் இதனை வடிவமைத்துள்ளார். இச் சின்னம் உருவாக்கப்பட்டதும் கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. உலகப் புகழ் பெறும் அளவுக்குக் 'கோபி' கவர்ச்சியாக இல்லை என்று ஒரு நாளிதழ் தலையங்கம் கூட எழுதியது!

ஆனால் ஸ்பெயின் நாட்டுக் குழந்தைகள் ஏகமனதாகக் 'கோபி'யை அங்கீகரித்துவிட்டதால் அதையே சின்னமாக்கத் தீர்மானிக்கப்பட்டது.

– நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்.









அன்புள்ள அமுதா அக்கா,



என்னைப் 'புலம்பல்மொழி மங்கை' என்று ஒரு முறை எழுதினாய்... நினைவிருக்கா...? என்னைக் கூட தூக்கிச் சாப்பிட்டுவிடும் அளவுக்கு நேற்று ஆபீசில் லஞ்ச் அவரின் போது புலம்பினாள் கிரிஜா!

கிரிஜாவும் அவள் புருஷனும் இரண்டு நாட்களாகப் பேசிக்கொள்வதில்லையாம். காரணம் : மூன்று தினங்களுக்கு முன் இரவுச் சாப்பாட்டுக்கு அவள் வாழைத்தண்டு பொறியல் செய்திருக்கிறாள். ''இதெல்லாம் ஒரு பொறியலில் சேர்த்தியா? வாழைக்காயோ, கத்திரிக்காயோ செய்யறதுக்கு என்ன....'' என்று அவன் குரல் உயர்த்தியிருக்கிறான். ''ஏன்! இதுக்கென்ன குறைச்சல்? பாடுபட்டுத்தானே இதையும் செய்திருக்கேன்....'' என்று அவள் கத்த, இவன் பதிலுக்கு ஏதோ பேச, பேச்சு முற்றிப்போய், பேச்சு வார்த்தை இன்மையில் கொண்டு விட்டிருக்கிறது!

கிரிஜாவின் கோபமெல்லாம் தன் புருஷன் அந்த வாழைத்தண்டு பொறியலை இன்னும் 'கொஞ்சம்' போடச் சொல்லிச் சாப்பிட்டு விட்டு சண்டையும் பிடித்தானே என்பதுதான்!

அந் நாளில் நம் பாட்டி, தாத்தாவுக்குப் பயந்து பயந்து சமைத்ததும் அவர் ஒரு நாளைப் போல் திட்டிக் கொண்டே சாப்பிட்டதும் என் நினைவுக்கு வந்தன.

இப்படி 'அன்ன விசாரம் அதுவே விசாரம்' என்று இருப்பவர்களைப் பார்த்தால் இவர்கள் சாப்பிடுவதற்காக உயிர் வாழ்கிறார்களா? உயிர் வாழ்வதற்காகச் சாப்பிடுகிறார்களா? என்று சந்தேகம் வந்து விடுகிறது.

சமையல் செய்வது ஓர் இயந்திர கதியான வேலை இல்லையே! அதுவும் ஒரு கலை. அதைச் செய்பவருக்குத் தன் விருப்பத்தையும் கற்பனையையும் உபயோகிக்க ஓரளவு சுதந்திரம் வேண்டாமா...? உணவின் சுவை நாள் தவறாது பிரமாத தரத்தில் அமைய வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்...? எந்த ஒரு கலைப் படைப்பிலும் இது சாத்தியம் இல்லையே.

'எங்க பேரனுக்குச் சாப்பாடெல்லாம் ரொம்ப 'கரெக்டா' இருக்கணும் இல்லைன்னா அவன் அப்பன் மாதிரியே அவனுக்குக் கோபம் வந்துடும்' என்று கிரிஜாவின் மாமியார் பெருமையடித்துக் கொள்கிறாளாம்.

''அவன் முன்னாடியே அப்படிப் பேசறதால அவன் அப்படிக் கோபப் படறதையே ஒரு பெருமையா நினைக்கிறான்... என்ன செய்யறதுன்னே புரியல்லை'' என்று புலம்பித் தள்ளி விட்டாள் கிரிஜா.

கடைசியா ஒரு பெரிய 'ஜோக்'கும் சொன்னாள் : ''நல்ல காலம் அம்மு -! ராத்திரியில தூங்கறதுன்னு ஒரு வழக்கம் ஏற்பட்டிருக்கு. இல்லாவிட்டால் அந்த எட்டு மணி நேரத்தில் இன்னும் ஒரு வேளைச் சாப்பாடும் ஒரு வேளைகாப்பிடிபன் கடைவிரிப்பும் நடத்த வேண்டியிருக்குமே!''

இந்த நகைச்சுவை உணர்வுதான் கிரிஜாவுக்குப் பெரிய பலம்!

அன்புடன்,

-அம்மு



ராம்ஜியின் கேள்விகள் : திரையுலகின் பதில்கள்!

அபஸ்வரம் ராம்ஜியின் புதுமையான மெல்லிசை நிகழ்ச்சி ஷோ டைம். ராம்ஜி மேடையில் கேள்விகள் கேட்க, சினிமா நட்சத்திரங்கள் மேடையிலுள்ள திரையில் தோன்றி பதிலளிக்கிறார்கள். (பதில்கள் ஏற்கனவே வீடியோ எடுக்கப்பட்டவை). ஸாம்பிள்கள் :

கேள்வி : உங்களுக்கு செண்டிமெண்ட் நம்பிக்கையெல்லாம் உண்டா?

சத்யராஜ் : இல்லீங்க. 1977 இல் சினிமா வாய்ப்பு தேடி கோயம்பத்தூர்ல இருந்து மெட்ராஸ் வந்தபோது, கோமல்சுவாமிநாதனின் நாடகம் ஒன்றில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மேக்-அப் மேன் பான்-சேக்கைத் தொட்டு நெற்றியில் பொட்டு வைத்தார். சில விநாடிகளிலேயே, வியர்த்தது என்று சொல்லி, அந்தப் பொட்டை நான் அழித்துவிட்டேன். உடனே அந்த மேக் அப்மேன் சொன்னார், ''என்னங்க பொட்டை அழிச்சிட்டீங்க, அபசகுனமா? நீங்க நடிகனாகவே முடியாது'' என்றார். இன்றைக்கு என் நிலைமை உங்களுக்குத் தெரியும். தேவர் பிலிம்ஸ் படத்தில் அவர்கள் வழக்கப்படி, 'வெற்றி! வெற்றி!' என்று முதல் வசனம் பேசி நடித்தேன். படம் ஓடவேயில்லை.

கேள்வி : எம்.ஜி.ஆர். சம்பந்தப்பட்ட மறக்க முடியாத அனுபவம் ஒன்றைக் கூறுங்களேன்.

எம். எஸ். விஸ்வநாதன் : உலகம் சுற்றும் வாலிபன் படத்துக்கு இசையமைத்த போது, நான் போட்ட ஒவ்வொரு பாட்டையும் ''நன்றாக இல்லை'', ''நன்றாக இல்லை'' என்று சொல்லிக் கொண்டே வந்தார். ஏறத்தாழப் பத்து பாடல்களை ரிஜெக்ட் செய்துவிட்ட நிலையில், வாத்







இயக்காரர்களுக்கு அளித்த ஊதியத் தொகை ஆயிரக் கணக்கில் போய்க் கொண்டிருந்தது. 'என்னடா! எதைப் போட்டாலும் நன்றாயில்லை' என்கிறாரே இவர் என்று எனக்கு ஒரே வெறுப்பாகிவிட்டது. திடீரென ஒரு நாள், ''என்னங்க பணம் வேணாமா?'' என்று எம்.ஜி.ஆர். கேட்க, ''என் பாட்டுதான் உங்களுக்கு ஒன்னுகூட பிடிக்கலையே!'' என்று நான் அங்கலாய்க்க, தம்மை ஆபீசில் வந்து பார்க்கும்படி கூறிவிட்டுப் புறப்பட்டுப் போய் விட்டார். ஆபீசுக்குப் போனதும், ''பாடல்கள் எல்லாம் பிரமாதம்'' என்று கூறி, பணம் தந்தார். ''அப்போ, ஏன் நன்றாக இல்லைன்னு சொன்னீங்க....'' என்று குழப்பத்துடன் கேட்டேன். ''அப்படிச் சொன்னால்தான் நீங்க இன்னும் நல்ல மெட்டுகளைப் போடுவீங்க என்ற எண்ணம் எனக்கு'' என்றார். உடனே, ''ஒரு கலைஞனுக்குப் பணத்தைவிட, பாராட்டு தான் மனதுக்கு உற்சாகமளிக்கும் டானிக். நீங்க 'நல்லா இருக்குன்னு' சொல்லியிருந்தா, இதைவிடச் சிறப்பா டியூன் போட்டிருக்க முடியும்னு நான் நினைக்கிறேன்'' என்றேன். எம்.ஜி.ஆர். சிரித்தார்.

கேள்வி : நீங்கள் எடுக்கும் படங்கள், நடிக்கும் படங்களை விட நன்றாக இருக்கின்றனவே. இது எப்படி?

கமல்ஹாசன் : கமல் காசு வாங்கிக்கிட்டு நடிக்கிற போது ஒழுங்காச் செய்யறதில்லை; காசு போட்டுப் படம் எடுக்கற போது ஒழுங்காய்ச் செய்யறான் என்று ஒரு எண்ணத்தை ஏற்படுத்தற வம்பு வேலை இது. நான் எடுத்த படங்கள் ராஜபார்வை, விக்ரம், சத்யா, கடமை கண்ணியம் கட்டுப்பாடு, அபூர்வ சகோதரர்கள், குணா முதலியவை. நான் திரையுலகில் நுழைந்தது டெக்னிஷியனாகவும் டைரக்டராகவும் விளங்கும் ஆசையால்தான். நான் நடிக்கும் படங்களை விட, எடுக்கும் படங்களில் டெக்னிகல் விஷயங்களில் தாராளமாய்க் கவனம் செலுத்த முடிகிறது. எம்.ஜி.ஆர் நடித்த பல படங்களையும் விட அவர் எடுத்த நாடோடி மன்னனும், அடிமைப் பெண்ணும், உலகம் சுற்றும் வாலிபனும் வித்தியாசமாய் அமைந்து முத்திரை பதிக்கவில்லையா? அதிலிருந்து நான் கற்றுக் கொண்ட பாடம் இது! அதுவுமின்றி, வித்தியாசமான முயற்சிகளை எல்லாம், நான் மற்ற தயாரிப்பாளர்கள் செலவில் செய்து பார்ப்பதை அவர்கள் விரும்ப மாட்டார்கள்.

தொகுப்பு : ஜூலி

பொன் விழா ஆண்டு தங்க நகைப் பரிசுத் திட்டம் - 9

பாதை அமைத்த பாடல்



சங்கீத சீசன் நெருங்குகிறதே!
அரங்கிலோ அல்லது சினிமாவிலோ

பாடப்பட்ட ஏதேனும் ஒரு பாடல் உங்களிடம் அல்லது உங்கள் நெருங்கிய நண்பர் - உறவினரிடம் ஒரு பாதிப்பை உருவாக்கி வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியதா? அது குறித்துத் தபால் கார்டில் எழுதுங்கள். ரசமாக எழுதப்பட்ட சிறந்த நிகழ்ச்சிக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை பரிசு. பிரசுரமாகும் இதர துணுக்குகளுக்குச் சன்மானம். ''பாதை அமைத்த பாடல்'' என்று தலைப்புத் தந்து கல்கி காரியாலயம் சென்னை 600 032 என்ற விலாசத்துக்கு எழுதி அனுப்ப முடிவு தேதி 25.11.91

எங்கள் நிதித்திட்டங்களுக்கான

ஏஜெண்டாகும்

பொன்னான வாய்ப்பைபெறுங்கள்!

இந்தியன் பேங்க் ம்யூச்சுவல் ஃபண்டின் (Indian Bank Mutual Fund) நிதித்திட்டங்கள் உங்கள் கனவை நனவாக்கும் திட்டங்கள். **இந்த் ரத்னா**, **சுவர்ண புஷ்பா**, **இந்த் 88 A**, **இந்த் ஜோதி**, **இந்த் ஸாகர்** மற்றும் **இந்த் மோதி** ஆகியவை பெரும் வரவேற்பைப் பெற்ற திட்டங்களாகும். 1990-ல் துவங்கிய இந்த நிதித்திட்டங்களில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் ரூ. 400 கோடிக்கும் மேலாக முதலீடு செய்து பயன் பெற்றுள்ளனர். இப்போது மேலும் பல புதிய நிதித்திட்டங்களை இந்தியன் பேங்க் ம்யூச்சுவல் ஃபண்ட் அறிமுகப் படுத்தவுள்ளது. தனது ஏஜெண்டுகளின் எண்ணிக்கையையும் விரிவாக்கவுள்ளது. வாருங்கள்! இந்தியாவின் அதிக வரவேற்புகளைப் பெற்ற இந்தியன் வங்கியின் ம்யூச்சுவல் ஃபண்டில் பங்கேற்பீர்!

உரிய கமிஷனையும் பெறுவீர்! நீங்கள் LIC, UTI போன்ற நிதிநிறுவனங்களின் ஏஜெண்டாக இருந்தாலும் விண்ணப்பிக்கலாம்.

உங்களது விவரங்களை கீழ்கண்டவடிவில் எங்கள் கார்ப்பொரேட் அலுவலகத்திற்கு அனுப்ப கடைசி தேதி 1-12-191.

a) பெயர் மற்றும் முகவரி b) தந்தையார் பெயர்/கணவரின் பெயர் (திருமணமானவரானால்) c) வயது d) ஆண்/பெண் e) தகுதி f) முன் அனுபவம் (மற்ற நிதிநிறுவனங்களின் ஏஜெண்ட் போன்ற விவரங்கள்) g) இரண்டு குறிப்புரைகள் (References) h) மற்ற விவரங்கள் i) கையொப்பம் j) விண்ணப்பத்தாளுடன் இந்தியன் வங்கி கிளை மேனேஜர் அல்லது கெஜட் ஆஃபிஸர் ஒருவர் சான்றிட்ட பாஸ்போர்ட் அளவு ஃபோட்டோ (ஏஜெண்டுகளின் நியமனம் இந்தியன் பேங்க் ம்யூச்சுவல் ஃபண்டின் விதிமுறைகளுக்கு உட்பட்டது)

இந்தியன் பாங்க்

பரஸ்பர நிதி

முக்கிய பொறுப்பாளர் : இந்தியன் பாங்க்

உங்கள் செல்வச் செழிப்பின் சிற்பி

1063:2012 TM



பாவம்,
சறுக்கி
விழுந்திட்டாரு...
இல்லாட்டி
இவருதான்
முதல்ல
போயிருப்பாரு!
நரசிம்மராவ்
நானும்
போகலே,
மாநாடும்
நடக்கலே...
கொழும்பு
சார்க் நாடுகள்
அவன் போனா
என்ன, வந்தா
என்ன?
சும்மா
ஒண்ணும்
பண்ணிக்க
முடியாது!
ஊழல்கள்
பதவி
நீக்கம்
ரஜினிகாந்த்
மம்முட்டி
மணி ரத்னம்
தளபதி!
தளபதி!
தளபதி!
தளபதி!
DIRECTOR

சார்க் மாநாட்டில் ஒரு சறுக்கல்!

கொழும்புவில் நடைபெறவிருந்த சார்க் மாநாடு கடைசி நிமிஷத்தில் காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டதற்கு இந்தியாவே காரணம் என்ற கருத்து நிலவுவதானது நமக்குப் பெரிய அதிர்ச்சியைத் தருகிறது. இந்திய அரசு இதை மறுத்து விட்ட போதிலும் நம்புவதற்கு யாரும் தயாராக இல்லை!

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களே மாநாடுகளுக்கு நேரில் வந்து கலந்து கொண்டு பேச வேண்டும் என்றும், உச்ச மட்டத்தில் ஏக மனதாக முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் ஒரு மரபு. என்றாலும், இந்த மரபு முன்பு மீறப்பட்ட தருணங்கள் உண்டு. ஒரு சமயம் பாகிஸ்தான் அதிபரும் மற்றொரு சமயம் இலங்கையின் ஜனாதிபதியும் வராமல் இருந்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் அவர்களுக்கு அடுத்த மட்டத்தில் உள்ளவர்கள்தான் வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். தற்போது பூட்டான் மன்னர் உள்நாட்டு நிலவரம் காரணமாக வர இயலவில்லை எனில், அவருக்குப் பதில் ஓர் உயர்தரப் பிரதிநிதியை அனுப்பச் செய்து மாநாட்டை நடத்தியிருக்கலாம். ஆனால் இந்தத் தடவை மட்டும் மரபு மீறப்படுவதை இந்தியா விரும்பவில்லை என்பதாகத் தெரிய வருகிறது! இதன் அடிப்படையில் சார்க் அமைப்பின் இன்றையத் தலைவர் - மாலத் தீவுகளின் ஜனாதிபதி கயூம் - மாநாட்டை ரத்து செய்து விட்டார். பிரேமதாசா உள்நாட்டில் பரிகாசத்துக்கு உள்ளாகியிருக்கிறார். சார்க் அமைப்பின் அடுத்த தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படவிருந்த அவருக்கு இந்தியா மீது வெறுப்பும் கோபமும் (வெளிக்காட்டிக் கொள்ளாவிட்டாலும்) பொங்குவது இயல்பே.

இலங்கை அரசு இந்த மாநாட்டை முன்னிட்டு விருந்தினரை வரவேற்கவும் அவர்கள் பாதுகாப்புக்காகவும் சுமார் ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டிருக்கிறது. இந்தப் பொருளாதார நஷ்டம் ஒருபுறமிருக்க, அதைவிடப் பெரிய நஷ்டம் தலைவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியாமல் போனதுதான். முதல் நாள் கூட, 'திட்டத்தில் மாற்றம் ஏதுமில்லை; மாநாடு செல்வேன்' என்று கூறிக் கொண்டிருந்த பாரதப் பிரதமர், திடுமென்று பயணத்தை ரத்து செய்தது நமக்கு - நம் தேசத்துக்கு - நஷ்டம்தான். இதே நேரத்தில் மாநாடு நடக்காவிட்டாலும் பாதகமில்லை; இலங்கைக்கு ஏமாற்றம் அளிப்பதைத் தவிர்ப்போம்' என்று கூறிக் கொண்டு வேறு சில நாட்டுத் தலைவர்கள் பயணத்தை ரத்து செய்யாமல் தொடர்வது கவனிக்கத்தக்கது.

நமது நாட்டை நாலாபுறமும் ஆபத்துக்கள் சூழ்ந்து கொண்டு ஊடுருவலும் நடக்கும் போது, சார்க் மாநாடு போன்ற கூட்டங்களில் நம் பிரதமர் இதர தலைவர்களுடன் மனம் விட்டுப் பேசி, மனச்சாட்சியை உசுப்பி விட்டு பிரச்னைகளுக்குத் தீர்வு காண முயற்சி செய்யலாம். மாநாட்டில் எல்லாப் பிரச்னைகளுக்கும் ஏகமனதான முடிவு காண்பது சாத்தியமில்லைதான். என்றாலும் - அதிகாரபூர்வமான அறிக்கை ஒருபுறமிருக்க - அந்தரங்கமாகப் பேசவும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் வாய்ப்புக்கள் நிறையவே உண்டு. ஒரு நல்ல சந்தர்ப்பம் கை நழுவ விடப்பட்டுள்ளது.

அரசியல் தவிர பொருளாதார நோக்கிலும் சார்க் மாநாடு பயன்தரக் கூடும். சர்வதேசச் சந்தையில் போட்டியிடுவதை விட வட்டார அளவில் வர்த்தகம் பெருக்குவது எளிது. நமது பிரதமர் இதையெல்லாம் யோசித்து மாநாடு ரத்தாகாமல் இருக்கத் தமது செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்க வேண்டுமே தவிர, ரத்தாவதை எளிதாக்கியிருக்கவே கூடாது. பாகிஸ்தானும் பங்களாதேஷும், 'இந்தியாதான் காலைவாரி விட்டு விட்டது' என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்ட இடமளித்து விட்டதானது, ''ராஜதந்திரம் என்றால் கிலோ என்ன விலை?'' என்று கேட்பதற்கு ஒப்பாகும்.

ருஷ்யாவும் அமெரிக்காவும் கைகுலுக்குகின்றன. இஸ்ரேலுடன் பேச்சு வார்த்தை நடத்த அராபியர்கள் கூடத் தயாராகி வருகின்றனர். நாமோ நட்புறவுகளை முறித்துக் கொண்டு நிற்கிறோம்!



கல்கி 50

1991
நவம்பர் 17
மலர் : 50
இதழ் : 16
பிரஜோத்பத்தி
கார்த்திகை 1

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிட்டி பாப்பா. - பாரதியார்.

Continued on back page col 3
Continued on back page col 1
iow.

Pak cricket tour off

From Vinod Sharma

ISLAMABAD, Oct. 27

e laste-minute cancellation
Pakistan cricket te
has been recei
disappointmen
politicians had
ing to queer the
"atrocities" in K
fact, hardliners
Pakistan have co
in forcing the situ
the series being
threat reportedly
Shiv Sena and the
dent in which the pi
was vandalised prov
in the arm of certain g
here to Pakistani side's
part from the Jamaat
the Prime Minister of
mir" (POK), Abdul Qa

called Indian connections, not on
did Benazir write a le
Minister N

ur to come through.
ket fan, he is also
the opposition for
e as his "failure"
shmir question in
luded Common-
vernment meet-

uncement came
ard of Control
(BCCP), the
nderstood to
on the more
g the Pakis-
home. Any
itani side,
iated the
malising
countries
ral ex-
building

think

Thr
Sec

N
Three
shifted
They ar
atesan
Mr L
cadre 19
Ministry
tion, ha
Ministr
Virendr
be new
ramme
Mr K
present
ment of
of Dep
Energy
from M
1958),
Oct. 31
Mr J
sently
of Wat



மாநகர் காரியாலயம் முன்பு பத்திரிகையாளர் சாலை மறியல் போராட்டம்

"பம்பாயில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக இந்திய அணி விளையாடினால் பம்பாய் வாங்கடே ஸ்டேடியமே பற்றி எரியும்'' என்று முழக்கமிட்டார் பால் தாக்கரே!

ஒவ்வொரு ஆண்டும் விஜயதசமி சமயத்தில் பம்பாயின் புகழ்பெற்ற சிவாஜி பார்க்கில் ஒரு மாபெரும் கூட்டத்தில் பேசுவது சிவசேனா அதிபரின் வழக்கம். அப்போது விவாதத்திற்கு இடம்தரும் பிரச்னைகள் சிலவற்றை எழுப்புவது பழக்கம். இந்த முறை கிரிக்கெட் அவர் கையில் சிக்கியது.

இவ்வளவுக்கும் ஷார்ஜாவில் முதல் மேட்சில் இந்தியா பாகிஸ்தானை வென்றிருந்தது. பம்பாயின் கிரிக்கெட் ரசிகர்களோ இங்கு வரப் போகும் மாட்சை ஆவலாக எதிர்நோக்கியிருந்தனர். இந்த முழக்கம் பம்பாய்வாசிகளுக்கு இடி போல வந்தது.

''எச்சரிக்கையையும் மீறி அக்டோபர் 28 ஆம் தேதியன்று மாட்ச் நடந்தால் அன்று பம்பாயில் பந்த் நடக்கும்'' என்று அறிவித்தது சிவசேனா. பம்பாய் கிரிக்கெட் போர்டைச் சேர்ந்த மாதவ் மந்திரி ''நாங்கள் டிக்கெட்டுக்களை அச்சிட்டு விட்டோம். கிரிக்கெட் கிரௌண்டைச் சீர்படுத்தவும் நிறையப் பணம் செலவழித்துள்ளோம். மாட்ச் நடக்காவிடில் எங்களுக்குப் பெரு நஷ்டம் ஏற்படும்'' என்றார். இரண்டு, மூன்று நாட்கள் இது விஷயத்தில் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருந்த பம்பாய் அரசு, பின்னர் ''இது கிரிக்கெட் போர்டு தீர்மானிக்க வேண்டிய விஷயம். அவர்கள் மாட்ச் நடத்தினால் நாங்கள் ஒத்துழைப்பு கொடுக்கத் தயார்'' என்றது.

சிவசேனா எம். எல். சி. பிரமோத் நவால்கர், ''எங்கள் தலைவர் ஒன்றை அறிவித்து விட்டால், அதற்கு மறுபேச்சு இல்லை. அதன்படி நடப்பது எங்கள் கடமை'' என்றார். சட்டமன்றத்தில், எதிர்க்

பத்திரிகை சுதந்திரம் பற்றி எரிகிறது!

கட்சித் தலைவரும் சிவசேனாவைச் சேர்ந்தவருமான மனோகர் ஜோஷியை முதல்வர் நாயக் இது பற்றிப் பேச அழைத்த போது தமக்கு இப்போது நேரமில்லை என மறுத்து விட்டார்! கிரிக்கெட் ஸ்டேடியத்தின் வாசலில் ''பாகிஸ்தான் கிரிக்கெட்காரர்களே, உங்களுக்கு இந்துஸ்தானில் நுழைய வாய்ப்பில்லை'' என்ற ஒரு பெரிய பானரை சிவசேனா கட்டித் தொங்க விட்டது. இதற்கிடையில் பம்பாயின் சில முக்கிய புள்ளிகள் ''அரசியலையும் விளையாட்டையும் ஒன்று கலக்கக் கூடாது. உண்மையில் இத்தகைய விளையாட்டுக்கள் நம் நாட்டைப் பலப்படுத்த உதவும்'' என்று அறிக்கை விட்டனர்.

''இவ்வளவு நாட்கள் இவர்கள் தென்னாப்பிரிக்கக் கிரிக்கெட் குழுவை அண்ட விடாமல் இருந்தார்களே, அது அரசியல் இல்லையா? தேசாபிமானமும், தன்மானமும் உள்ள இந்தியர்கள் இந்த மாட்ச் நடக்க விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று தன் தொண்டர்களுக்கு அறைகூவல் விட்டார் பால்தாக்கரே.

இதற்கிடையில் இருபது சிவசேனா தொண்டர்கள் அக்டோபர் 21ம் தேதி, கிரிக்கெட் கிரௌண்டில் வேலை செய்யும் ஆட்கள் போல நடித்து, அங்கு இருந்த பல போலீஸ்காரர்களுக்கு 'டிமிக்கி' கொடுத்து விட்டு வாங்கடே ஸ்டேடியத்தின் பிட்சை அரிவாளால் கொத்தியும் கறுப்பு பெயிண்ட் அடித்தும் சேதப்படுத்தி விட்டனர். இதனால் கவலையுற்ற நாயக், அமைச்சரவையைக் கூட்டி ஆலோசித்தார். பின்னர் தில்லி தலைவர்களையும் கலந்தாலோசிக்க விரைந்தார்.

பத்திரிகையாளர்கள் கூட்டம் ஒன்றில் பேசிய தாக்கரே, ''நான் சட்டம், ஒழுங்கைக் குலைக்க முயற்சி செய்கிறேன் என்கிறார்களே, பஞ்சாப்பில் 27 பாங்குகள் நீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும் தினம் கொலை, கொள்ளை, வன்முறை. இவ்வளவிற்கும் பாகிஸ்தான்தான் காரணம் - இவர்களிடம் நமக்கென்ன குலாவல்'' என்றார். வட இந்தியாவை இந்தச் சமயத்தில் உலுக்கிய பூகம்பத்தை விட இந்த விஷயம் பம்பாயை உலுக்கிக் கொண்டிருந்தது.

டெல்லியிலிருந்து திட்டவட்டமான முடிவுகள் எதுவுமின்றி நாயக் திரும்ப, இதற்கிடையில் பாகிஸ்தானே இந்தியப் பயணத்தை ரத்து செய்து விட்டது. ஆனால் விஷயம் இதோடு முடியவில்லை.

இரண்டு ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கும் 'மகாநகர்' என்ற மராத்திய மாலை நாளிதழில் அதன் ஆசிரியர் நிகில் வாக்ளே ''பால் தாக்கரேயின் சிவாஜி பார்க் முழக்கம் அவரது ரசிகர்களுக்கிடையே கைத்தட்டல்கள் பெறலாம். ஆனால் அது சிறந்த அரசியல் ஆகி விடாது. கிரிக்கெட் மாட்ச் நடக்க விடவில்லை என்றால் பஞ்சாப் வன்முறையாளர்கள் ஒடுங்கி விடுவார்களா? சிவசேனா கட்சிக்குள் பல பிரச்னைகள் உள்ளன. ஒழுக்கமின்மை நிலவுகிறது. ராஜ்ய சபா தேர்தலில் 'கிராஸ் வோட்டிங்' நடந்தது. இப்போது பி.ஜே.பி. கட்சி வேறு தன் செல்வாக்கில் சிவசேனாவை விஞ்சிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் ஈடுகட்டி தன் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ளத்தான் கிரிக்கெட் பிரச்னையைக் கண்டுபிடித்தார், பால்தாக்கரே'' என்று எழுதினார்.

இதனால் ஆத்திரமடைந்த சிவசேனா தொண்டர்கள் 'மகாநகர்' பத்திரிகையின் அலுவலகத்திற்குள் புகுந்து, அங்குள்ள அச்சு இயந்திரம், மேஜை, நாற்காலிகளை உடைத்து அங்கு வேலை செய்யும் இருவரையும் நன்கு தாக்கி விட்டார்கள். ''இதனால் நான் மிரண்டு விட மாட்டேன்! என்



பால்தாக்கரே : ''ஸ்டேடியம் பற்றி எரியும்''

நிகில் வாக்ளே : ''பத்திரிகை சுதந்திரம் பற்றி எரிந்தது''




பத்திரிகை தொடர்ந்து பிரசுரமாகும்'' என்றார் வாக்ளே.

இந்த வன்முறையை எதிர்த்துப் பத்திரிகையாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஓர் ஊர்வலம் நடத்தினர். ஊர்வலம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த போது நான்கு பத்திரிகையாளர்களைச் சிலர் மாதுங்கா ரோடில் தாக்கினர். தாக்குண்டவர்களில் இருவர் பெண்கள். பெண் பத்திரிகையாளர்களை இரும்புத் தடியால் அடித்த கொடுமை அனைவரையும் உலுக்கியது. மணிமாலாவுக்கு தலையிலும், கையிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு ஆபரேஷன் நடக்கவிருக்கிறது. மணிமாலா பீகாரில் நடக்கும் அநீதிகளைப் பிட்டு வைத்தமைக்காக, பி.யு.சி. எல். - இந்தியா டுடே பரிசையும்; ராஜஸ்தான் மந்திரி ஒருவர் தன் மைனர் பெண்ணைச் சிறு வயதில் மணமுடிக்க முயன்றதைக் கண்டுபிடித்து வெளியிட்டதற்காக ''ஜன ஜகரான் பத்ரிகா'' பரிசையும் பெற்றவர். எதற்கும் அஞ்சா மன உறுதி படைத்தவர்.

பத்திரிகையாளர் ஒன்றாகச் சென்று நாயக்கைச் சந்தித்து இதுபற்றி விவாதித்தனர். ஒவ்வொரு செய்தித்தாளிலும் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். ''ஒரு ஜனநாயக நாட்டில் குண்டர்களின் வன்முறை, கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்க முடியாது. மக்களுக்கு உண்மையை எடுத்துச் சொல்ல நாங்கள் தொடர்ந்து கடமை ஆற்றுவோம். எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமை'' என்பதே அந்த அறிக்கை.

அரசியல் கிரிக்கெட் தொடர்கிறது. 'டிரா'வில் முடியாது என்பது நிச்சயம்!

- ராஜீவி நரசிம்மன்



❑ கம்பதாசன், ஒரு சினிமாவுக்குப் பாடல் எழுதும் போது, ''முகமது சந்திரபிம்பமோ!'' என்று பல்லவியை எழுதினார்.

அந்தச் சமயம் அதே சினிமா கம்பெனியில் வேலை செய்யும் ஒரு ஆள் அந்தப் பக்கம் வந்தார். ''முகமது சந்திரபிம்பமோ, என்றால் ஏக சூரிய பிம்பமோ?'' என்று கேட்டு விட்டுப் போய் விட்டார்!

கம்பதாசன் கோபப்படவில்லை. உடனே யோசித்து ''வதனமே சந்திரபிம்பமோ!'' என்று மாற்றினார்.

பி. யு. சின்னப்பா குரலில் அந்தப் பாட்டு அந்நாளில் மிகப் பிரபலமடைந்தது.

- 'உலக மகா எழுத்தாளர்கள்' நூலிலிருந்து
சைதை ஆர். முரளி



❑ ஸ்பெயின் நாட்டில் புதுமையான பந்தயம். அகில உலக நத்தைகள் ஓட்டப் போட்டி! உலகெங்கிலுமிருந்து சுமார் இருநூறு நத்தைகள் ஓட்டப் பந்தயத்தில் கலந்துக் கொண்டன. ஸ்பெயின், போர்த்துகல் ஆகிய இரு நாடுகளின் நத்தைகள் முதல் பரிசைச் சமமாகப் பகிர்ந்துக் கொண்டன, எழுபது செண்டி மீட்டர் தூரத்தை ஐந்து நிமிடங்களில் 'ஓடி'!

- ராய்ட்டர் செய்தி
- ஸி. சண்முகசுந்தரம்

டாக்டர் பதில்கள் :



ஹார்மோன் சிகிச்சை ஆபத்தானதா?

O என். ரவிகுமார், சென்னை - 53.

OO எனக்குப் பின் பிறந்த குழந்தை நீலநிறமாக இருந்தது என்றும், இறந்து பிறந்தது என்றும் அம்மா கூறினார்கள். எதனால் சிசுக்கள் நீல நிறத்தை அடைகின்றன. அவ்வாறாயின் அவை உயிர் வாழ வாய்ப்புண்டா?

O டாக்டர் பிரேமா இராஜேந்திரன், சென்னை - 4.

OO குழந்தை நீலமாகப் பிறப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. நஞ்சுக்கொடி குழந்தையை மிக இறுக்கமாகச் சுற்றியிருக்கலாம் அல்லது மிக நெருங்கிய உறவில் திருமணம் புரிந்து கொண்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு இருதய நோய் இருந்தால் அது நீலமாகப் பிறப்பதற்கு வாய்ப்பு உண்டு. இவையல்லாமல் நீண்ட நேரம் பிரசவ வலி இருந்து, குழந்தை வெளியே வர முடியாமல் மிகவும் சிரமப்படும்போதும் அது நீலநிறமாக மாறிவிடக் கூடும். மேற்கூறிய அனைத்திலும் அதனதன் தீவிரத்தைப் பொறுத்தே குழந்தை இறப்பதும் பிழைப்பதும் சாத்தியம்.

O என். காஞ்சனா துர்கா, சேலம் 1.

OO ஹார்மோன்களைச் செயற்கை முறையில் தயாரிக்க முடியுமா? உடலில் ஒரு ஹார்மோன் குறைந்தால் அதனைச் செயற்கை முறையில் உடலில் செலுத்தி அக்குறைபாட்டை ஈடுசெய்யலாமா? அபாயம் உண்டா?

O டாக்டர். சுகந்தி இராஜகோபால், சென்னை.

OO ஹார்மோன்களைச் செயற்கை முறையில் தயாரிக்க முடியும். தைராய்ட் போன்ற சுரப்பிகள் வேலை செய்யாவிடில் அவை உற்பத்தி செய்யும் நீரை, நோயாளிகளுக்கு ஹார்மோன் மாத்திரைகள் மூலம் கொடுத்து ஈடுசெய்ய முடியும். கருத்தரிப் புக்கு உதவும் ஹார்மோன்கள் குறைவு பட்டால் அவற்றை ஊசி மூலம் உடலில் செலுத்திக் கருத்தரிப்புக்கு உதவ முடியும். டாக்டர் மேற்பார்வையில் நடந்தால் அபாயமில்லை.

O க. கோகுலகிருஷ்ணன், விசலூர்

OO அதிகமான காற்றைச் சுவாசிக்கும் போது மூச்சுத் திணறல் ஏற்படுகின்றது. அதே போல் துர்நாற்றத்தைச் சுவாசிக்கும் போது மூக்கை மூடிக் கொள்கிறோமே ஏன்?

O டாக்டர். ஆனந்த், சென்னை - 4.

OO சுவாசிப்பதற்குத் தேவையான காற்றின் அளவினை விட வெளியே அதிவேகமாக வீசுகின்ற காற்று நுரையீரலுக்குள் துரிதமாக அமுத்தப்படுவதால் சீராகச் சுவாசிக்க முடியாமல் திணறல் ஏற்படுகின்றது. உதாரணமாக ஊர்திகளில் வேகமாகச் செல்லும் போதும், பிறந்த குழந்தையை வேகமாகச் சுழலும் மின்விசிறிக்குக் கீழே படுக்க வைத்தாலும் மூச்சுத் திணறல் ஏற்படும். நாசியில் ஆல்பேக்டரி வெஸ்டிபியூல்ஸ் என்ற மிக நுண்ணிய பாகங்கள் உள்ளன. எவ்வித மணமாயினும் சரி, அது குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு மேல் காற்றில் பரவியிருக்குமாயின், ஆல்பேக்டரி வெஸ்டிபியூல்ஸ் அதை உணர்ந்து மூளைக்கு எட்டச் செய்கின்றன. துர்நாற்றமும் சரி, நறுமணமும் சரி, காற்றில் பரவும் வேகத்திற்கேற்ப, அளவிற்கேற்ப துரிதமாக உணரப்படுகின்றன. ஆனால் மணத்தினைக் கிரகிக்கும் சக்தி மனிதனுக்கு மனிதன் வேறுபடலாம்; வயதுக்கு ஏற்பவும் வேறுபடலாம்.

தொகுப்பு : கீதாமோஹன்

வட்டமேஜை

விவசாயிகளை வாட்டும் தக்காளி விலை!

◆ 'வாழ்க்கையில் வெற்றிபெற...' என்மரின் அறிவுரைகள் படித்தேன். நான் என்ன நினைக்கிறேனென்றால் வாழ்க்கையில் வெற்றி பெற... கல்கி படித்தாலே போதும்...!

உளுந்தூர்பேட்டை, பா. சிவகுமார்.

◆ வட்டமேஜையில் 'பஸ் டிக்கெட்' பற்றி ஒரு வாசகர் குறிப்பிட்டிருந்தார். குறளை அச்சடித்தால் சிறப்புத்தான். ஆனால் கண்டக்டரின் எச்சிலோடு அது உறவாட வேண்டி வருமே! டிக்கெட்டின் பின்புறம் விளம்பரங்களை வெளியிடலாம். அதனால் அரசுக்கு வருமானம் கூடுமே!

சென்னை - 84, பொடுகி.

◆ கல்கி - பொன்விழா போட்டியில் ரூ. 1000 முதல் பரிசு பெற்ற 'சுழற்சி' நாடகம், எழுதிய ஆர். இராசேந்திரன் அறிமுகத்திலேயே சுடர் முகம் காட்டியிருக்கிறார். பாராட்டுக்கள்!

திருக்குவளை, பத்மாவெற்றி.

◆ தஞ்சாவூர் நகராட்சி, மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து விலைக்கு வாங்கிப் பொது மக்களுக்கு விநியோகம் செய்கிறது. இதனால் தஞ்சாவூரில் வசிக்கும் சாதாரண மக்கள் (இரு மாதங்களில் 50 யூனிட் உபயோகிப்பவர்கள்) தஞ்சாவூரில் இருந்தால் ரூ 50.00 ம் மற்ற இடங்களில் ரூ 27.50ம் கட்ட வேண்டும். அதாவது 80 சதவீதம் அதிகம். தஞ்சாவூர் நகராட்சி மின் விநியோகத்தில் 80சதவீதம் இலாபம் ஈட்டுகிறது. இது முறையா? தமிழக அரசு இதனைக் கவனிக்குமா?

தஞ்சாவூர், கே. செல்வம்.

◆ 'ஞான வெளியில்...' முதற் பரிசுக் கவிதையில் மனோதத்துவப் பாடங்கள் புலனாயின. ஆன்ம பரிசோதனைக்குட்படத் தூண்டும் அக்கவிதையில், கவிதையை எழுதியவர் பெயருக்கொப்ப, தத்துவங்களே மேலோங்கி நின்றன.

தக்கலை, லீலா இராம்.

◆ முன்னாள் முதல்வர் கருணாநிதியை மகிழ்விக்கப் புதிதாகக் கண்டு பிடிக்கப் பட்ட பாசிப் பயறுக்கு, அவரது தாயாரின் பெயரை, 'அஞ்சுகம் பாசிப் பயறு' என்று வைத்தனர். அதே போல இப்போதும் பர்கூரில் தொடங்கப்படவிருக்கும் கூட்டுறவு நூற்பாலைக்கு முதல்வரின் தாயார் சந்தியாவின் பெயர் வைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். சந்தியா போக்குவரத்துக் கழகம் துவக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர். சட்டமன்றத்தில் ஒரு உறுப்பினர், தர்மபுரி மாவட்டத்தின் பெயரை மாற்றி அதற்கு 'வேதபுரி மாவட்டம்' என்று பெயரிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்! இப்படிப்பட்ட பெயர் சூட்டல்களும், பெயர் மாற்றங்களும் தேவைதானா?

சிறுமுகை, ஜி. கதிரேசன்.

◆ தீபாவளிச் சிறப்பிதழில் வெளியான எட்டு டானிக் கட்டுரைகள் அருமை!

சென்னை - 15, ராஜேஷ்.

◆ சில காலம் முன் கூடை ரூ. 230க்கு விற்ற தக்காளி இன்று கூடை ரூ. 10. தக்காளி விலை ஏற்றத்தை நம்பி திண்டுக்கல் - வேடசந்தூர் - பழனி வட்ட விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் மூன்று, நாலு ஏக்கர் தக்காளி பயிர் செய்து விட்டு இன்று விலை குறைவால் அல்லல் படுகிறார்கள். தக்காளி, நட்ட 60 நாளில் காய்க்க ஆரம்பித்துவிடும். தக்காளி விலை ஒரே சீராக இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். தக்காளி விலை குறைந்த நாளில் அதைப் பதப்படுத்தி 'ஜாம்' செய்யும் தொழிற்கூடம் எங்கள் பகுதியில் ஆரம்பித்தால் தக்காளி நடும் விவசாயிகளின் வாட்டத்தைப் போக்கலாம்.

வேடசந்தூர், . வி. நாகசுந்தரம்.

◆ கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் கேரள அருவிக் கோலமும், மனத்துக்கு நிறைவாக ஆந்திர வேங்கடநாதன் காட்சியும் - நெஞ்சுக்கு நிறைவாக வாசகர்க்குத் தீபாவளி விருந்தளித்த தங்களுக்குப் பாராட்டுக்கள்!

ஈரோடு, டி. சந்திரன்.

◆ தேஹ்ரி அணைத் திட்டம் குறித்துத் தாங்கள் எழுதியுள்ள தலையங்கக் கருத்துகள் மிகப் பொருத்தமே! ஆனால், இயற்கை அன்னை எவ்வளவு எச்சரிக்கை சிக்னல்கள் கொடுத்தாலும் நமது ஆட்சியாளர்கள் மற்றும் அரசியல் வாதிகள் திருந்துவார்களா என்பது சந்தேகமே. வல்லுனர்கள் என்ன முடிவு எடுத்தாலும், அது ஆட்சியாளர்களின் முன் வலுவிழந்து விடுகிறதே! மக்கள் இயக்கம் ஒன்றே தேஹ்ரி அணைத் திட்டத்தைத் தடுக்க இயலும்.

கோவை, கே.ஆர். விஜயா.

சம்பந்தம் பேசத் தகுதி...

''வணக்கம் சார்'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தார் சந்தானம்.

வேஷ்டி, ஜிப்பா உடையில் முகத்தில் கண்ணாடியும், தலையில் எண்ணி விடலாம் போன்ற முடியுடன் வந்தவரைப் புரியாமல் பார்த்தார்.

''என் பெயர் குமாரசாமி.''

''சந்தோஷம்! நீங்க யாருன்னு தெரியலியே?''

''கரெக்ட். என் பெயரைச் சொன்னால் தெரியாதுதான். ஆனால் என் பையன் பெயரைச் சொன்னால் 'டக்'குனு விளங்கிடும். நான் சந்திரனோட அப்பா.''

''எந்த சந்...'' என்று கேட்கப் போன சந்தானம் அவரைப் புரிந்து கொண்டதும் சட்டென முகம் மாறினார்.







அவரின் ஒரே மகள் பானுவின் மனத்தைக் கவர்ந்த காதலன் சந்திரன்.

விஷயம் வெளியான ஒரு வாரமாய் வீட்டின் அமைதி கெட்டுப் போனது. பானுவோ தன் காதலில் பிடிவாதமாய் இருக்கிறாள்.

''இப்ப எதுக்கு வந்திருக்கீங்க?'' என்றார் சந்தானம் விறைப்பாய்.

''குழந்தைங்க திருமண விஷயமா பேசிட்டுப் போகலாம்னு தான் வந்தேன்'' என்றபடி சந்தானத்தின் அருகிலிருந்த கூடைச் சேரில் தானாகவே அமர்ந்தார்.

''அது நடக்காத காரியம்!''

கிருஷ்ணா

"ஏன்?"

"நீங்க என்ன ஜாதி, நாங்க என்ன ஜாதின்னு தெரியுமில்லே!"

"உலகத்துல இரண்டே இரண்டு ஜாதிதான் இருக்கு. ஒண்ணு ஆண் ஜாதி. இன்னொண்ணு பெண் ஜாதி."

"பேசறதுக்கும், எழுதறதுக்கும் நல்லாத்தான் இருக்கும். பாராட்டு கூட கிடைக்கும் மேடையிலே பேசினால்" என்று புதுக் குரல் கேட்கவும் திரும்பிப் பார்த்தார் குமாரசாமி.

"அடேடே, நீங்கதான் பானுவோட அம்மாவா இருக்கணும். வணக்கம் சம்பந்தியம்மா."

"சம்பந்தியம்மாவா?" என்றாள் சுலோசனா முகத்தைச் சுளித்தபடி.

"ஆமாம்மா! அது சரி ஜாதியைப் பற்றி ஏதோ சொன்னீங்களே! ஆஸ்பத்திரியிலே ஆயா குழந்தையை மாத்தியிருந்தால் யார் பெத்த குழந்தையோ, எந்த ஜாதியிலே பிறந்தவளோதானே உங்க குழந்தையாய் வளர்ந்திருக்கும்."

"இது குதர்க்கவாதம். இப்படி, தானாக ஒருத்தனைக் காதலிக்கறதும், கல்யாணம் பண்ணிக்கறதுமா இருந்தால் பெத்தவங்க நாங்க எதுக்கு? இதுக்காகவா கஷ்டப்பட்டு பெத்து, வளர்த்துச் சீராட்டினோம். நன்றிக் கடன் வேண்டாம்?"

"அப்படிப் பார்த்தால், மலடிங்கற அவமானம் உங்களுக்கு வர விடாமல் உதவின பானுவுக்கு நீங்கதான் நன்றி செலுத்தணும்" என்று குமாரசாமி சொன்னதும் வாயடைத்துப் போனாள் சுலோசனா.

"சின்ன வயசிலேயிருந்து தோளிலும், மார்பிலும் தூக்கி, பாசத்தைப் பொழிஞ்சு, அவ ஆசைப்பட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்து, கண்மணியா வளர்த்ததெல்லாம் கூட சுயநலம்தானா?"

"உண்மைதான் சந்தானம். ஆனால் அதைப் பிரதி உபகாரம்னு சொல்லலாம்."

"என்ன சொல்றீங்க?"

"அவ உங்க மடியிலே தவழ்ந்த போதும், பிஞ்சுக் கால்களால் மார்பில் மிதிச்ச போதும், அப்பா, அம்மான்னு மழலையில் அழைத்தபோதும் நீங்க அடைஞ்சீங்களே ஆனந்தம், அதுக்குக் கைமாறாக அவ மேலே அன்பு செலுத்தினீங்க. ஜஸ்ட் பிரதியுபகாரம்தான்!"

"நீங்க சொல்றது வேடிக்கையா இருக்கு!"

"நீங்க செய்யறதும்தான். பானு, சாதாரண பொம்மை, சாக்லேட் கேட்ட போது தயங்காமல் வாங்கிக் கொடுத்த நீங்க அவ வாழ்க்கைத் துணையைத் தானே தேர்ந்தெடுத்த போது மட்டும் ஏன் கோபப் படறீங்க?"

"அவளே அவ கணவனைத் தேர்ந்தெடுத்துக்கிட்டா, பெத்தவங்கன்னு நாங்க எதுக்கு?"



❑ குஜராத் மாநிலத்தில் வித்தல் தாஸ் என்பவர் நல்ல ஆரோக்கிய நிலையில் இன்ஷ்யூரன்ஸ் பாலிசி எடுத்தார். பத்தே மாதங்களில் திடீரென்று நோய் கண்டு இறந்து விட்டார். அவ்வளவு குறுகிய காலத்துக்குள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை வழங்க இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு மனம் வரவில்லை. அவருடைய ஃபைல்களைக் குடைந்த போது, ஒரு ஆயுர்வேத வைத்தியர் அவர் வாழைப் பழம் சாப்பிடக் கூடாது என்று அறிவுரை வழங்கியிருந்தது தெரிந்தது. அதை மீறி அவர் வாழைப் பழம் சாப்பிட்டதால்தான் வியாதி வந்து மரணமடைந்ததாகவும், தாங்கள் பொறுப்பல்லவென்றும், எனினும் மனிதாபிமான அடிப்படையில் ஒரு சிறு தொகை அளிப்பதாகவும் விதவைக்குக் கடிதம் எழுதினார்கள். புத்திசாலியான அப் பெண், நேரடியாக ராஜ் கோட் மாவட்ட நுகர்வோர் நலப் பாதுகாப்பு மன்றத்தில் புகார் செய்தாள். அம் மன்றம் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனின் போக்குக்குக் கடுமையான கண்டனம் தெரிவித்து முழுத் தொகையையும் உடனடியாக அளிக்க உத்தரவிட்டது.

ஆதாரம் : "பிசினஸ் இந்தியா"

தகவல் : அ. ஷண்முக சுந்தரம்.

''இது ஒரு நல்ல கேள்வி. முதலில் திறந்த மனசோட அவ சொல்றதைக் கேளுங்க. காதல் என்பது கெட்ட வார்த்தை மாதிரி பதறாதீங்க. அவ ஆசைப்படற பையனைப் பற்றி நல்லா விசாரிங்க. பையன் கெட்டவனா நல்லவனா, பழக்கம் வழக்கம் எப்படி, மது, மாது, சிகரெட் உண்டான்னுல்லாம் விசாரிங்க. அவனுக்கு நோய் ஏதாவது இருக்கான்னு கூட கட்டாயம் விசாரிக்கணும். முடிந்தால் இரத்தப் பிரிவு கூட பார்க்கலாம். கெட்டவனாகத் தெரிந்தால் உங்க பெண்ணிடம் எடுத்துச் சொல்லுங்க. நம்ம குழந்தைகளும் படிச்ச வங்கதான். புரிஞ்சுக்கற வயசுல உள்ள வங்கதான். நல்லவனாகத் தெரிந்தால் பச்சைக் கொடி காட்டிட வேண்டியது தானே.''

''அப்ப ஜாதி?''

''நானும், நீங்களும் ஒரே ஜாதியிலே பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டு என்னத்தைச் சாதிச்சுட்டோம் இதுவரை? உங்க ஒரே பொண்ணோட மனசு . சந்தோஷப்படறது முக்கியமா இல்லை ஜாதி முக்கியமா?''

''ஊரிலே நாலு பேரு ஏதாலும் சொல்லுவாங்களே?''

''ஊரிலே ஆயிரம் பேரு ஆயிரம் சொல்லுவாங்க. நீங்க கஷ்டத்துல இருந்த காலத்துல இந்த நாலு பேரா வந்து உதவி னாங்க?'' என்று கேட்டவரை வியப்புடன் பார்த்தார் சந்தானம்.

''பானு, உங்க குடும்ப விவரம் முழுதும் சொல்லிட்டா. நீங்க எப்படி கஷ்டப் பட்டீங்க ஒரு காலத்துல, எப்படி படிப் படியா முன்னேறி இப்ப ஓரளவு வசதியா இருக்கீங்கன்னும் தெரியும். அதனாலதான் எனக்கும் உங்க சம்பந்தம் பிடிச்சது. ஏன்னா நானும் உங்களை மாதிரிதான் வாழ்க்கையிலே அடிபட்டு முன்னேறியவன். நம்ம சம்பந்தம் பண்ணிக்க இந்தத் தகுதி போதாதா? என் பையனோ இப்ப பாங்குல ஆபீசரா இருக்கான். சொந்த வீடும் கட்டிட்டான். உங்க பொண்ணு மேலே உயிரையே வைச்சிருக்கான். அப்புறம் என்ன பிரச்னை?'' என்று தெளிவாகப் பேசிய வரை யோசனையுடன் பார்த்தார் சந்தானம்.

''சுலோசனா நம்ம பொண்ணு பானு எங்கே?'' என்றார் மனைவியின் பக்கம் திரும்பி.

''உள்ளே அறையிலே இருக்கா.''

''கூட்டிட்டு வா. அவ வருங்கால மாமனார் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கட்டும். அப்படியே சம்பந்திக்கு டிபன், காப்பி கொண்டா'' என்று புன்னகையுடன் சொன்ன சந்தானத்தின் கையைப் பற்றிச் சந்தோஷத்துடன் குலுக்கினார் குமாரசாமி.



16

திங்கட்கிழமை காலை நல்லதம்பியுடன் வைரமூர்த்தியின் ஆபீஸுக்கு ரகுராமன் வந்தான்.

''உங்களை வைரமூர்த்தி எதிர்பார்த்துகிட்டு இருக்கிறார்'' என்று உள்ளே நல்லதம்பியை அழைத்துச் சென்றான்.

திரும்பியதும் ரகுராமனிடம், ''பேரு நல்லதம்பின்னீங்க இவர், 'வா ரங்கதுரை'ன்னு சொல்லி வரவேற்கிறாரே'' என்றாள்!

''அப்படியா?'' என்று வியப்புடன் அவளை ஏறிட்டுப் பார்த்தான் ரகுராமன்.

''நல்லதம்பிக்கு வைரமூர்த்தியை ஏற்கனவே தெரியும்னா சொல்றீங்க?'' குரலை அடக்கி நிர்மலா கேட்டாள்.

''இதெல்லாம் விவரமாய்ப் பேச வேண்டிய சமாசாரம் நிர்மலா.... சாயந்திரம் வீட்டுக்கு வரட்டுமா?''

''நிச்சியம் வாங்க ரகு.''

ரகுராமன் தன் வேலைகளைக் கவனிக்கப் புறப்பட்டான்.

''நல்லதம்பியை அவரே உங்க வீட்டில் கொண்டு வந்து விட்டுடறாராம். வைரம் உங்களிடம் சொல்லச் சொன்னார்,'' என்று கூறி புன்னகையுடன் அவனை அனுப்பி வைத்தாள் நிர்மலா.

கையில் பைப்புடன், தங்க பிரேம் உள்ள மூக்குக் கண்ணாடியைப் போட்ட வைரமூர்த்தியின் தோரணையைப் பார்த்து நல்லதம்பி சிறிது நேரம் என்ன சொல்வது என்று திகைத்துவிட்டார். கடைசியாய் வைரமூர்த்திதான் பேச்சைத் தொடங்கினார்.

''நீ எதுக்காக இங்கே என்னைப் பாக்க வந்தே?''

''என்னடா இது? நான் வாஷிங்டன் வந்து எத்தனை நாள்தான் சும்மா இருக்கிறது? நம்ம திட்டத்தைப்பற்றிப் பேச வேணாமா?'' விவரமாய்ச் சொல்லு....''

''ரத்னச் சுருக்கமா சொல்லிடறேன்'' என்று சிரித்துவிட்டுத் தொடர்ந்தார் வைரம். ''நம்ம திட்டத்தின் கடைசிப் படியை வைத்தியநாதனை விட்டுச் செய்யச் சொல்லணும்... நான் ரகுராமனைப் பய முறுத்தி வைச்சிருக்கேன். உன் வேலை என்னன்னா....''

''என்ன?'' நல்லதம்பி.

''வைத்தியநாதனுடன் அந்த பூர்ணம் அம்மா இல்லாதபோது தனியா பேசணும்... நம்ம திட்டத்துக்கு வைத்தியநாதன் இசைய லேன்னா ரகுராமன் கதி என்ன ஆகும்னு நீ எடுத்துச் சொல்லிப் பயமுறுத்தணும்.''

''வைத்தியநாதன் இதுக்கெல்லாம் மசிவார்னு நீ எப்படி நினைக்கிறே?''

''ரொம்ப சுலபம்.... வைத்தியநாதனைப் பற்றி நான் சொல்லப் போற விஷயத்தைக் கவனமாய்க் கேள்... அதை வைச்சி அவரைச் சுலப மாய்ப் பயமுறுத்தலாம்'' என்றார் வைரமூர்த்தி.

அடுத்த சில நிமிடங்கள் வைத்தியநாதனை எப்படி மடக்க வேண் டும் என்பதற்கான வழியை நல்லதம்பியிடம் மெதுவான குரலில் சொன்னார். முன்னொருநாள் ரகுராமனிடம் விவரித்த அதே திட்டம்தான்.

''வைரம், உனக்கிருக்கிற மூளைக்கு நீ பேராசிரியர் ஆனது மட்டுமில்லை நோபல் பரிசு கூட வாங்கலாம்,'' என்றார் நல்லதம்பி.

''அதுல ஒரே ஒரு தகராறுதான்.''

''என்ன?''

''சரித்திர ஆராய்ச்சிக்கு நோபல் பரிசு கிடையாது'' என்று சொல்லிச் சிரித்தார் வைரமூர்த்தி.

''ஜகன்னாதன் எப்ப வரப் போறான்... அதைச் சொல்லாம விட்டுட்டியே?''

''அவன் வரவே போறதில்லே... அதுக்கு நான் வழி செஞ்சிட்டேன்'' என்று சொல்லிவிட்டுக் குரூரமாய்ச் சிரித்தார் வைரமூர்த்தி.

''அப்படின்னா... அவனை... அவனை நீ....'' நல்லதம்பி வார்த்தைகளை முடிக்கவில்லை. வைரமூர்த்தி குறுக்கிட்டார்;

''வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதடா.''

நல்லதம்பிக்கு நம்பிக்கை குறைந்தது. 'இன்னைக்கி ஜகன்னாதனைத் தீர்த்துக்கட்டுற இவன், நாளைக்கு என்னையே தீர்க்கமாட்டானா?' என்ற எண்ணம் எழுந்தது.

''சரி, சரி... வா.... நாம போய் லஞ்ச் சாப்பிட்டுட்டு வருவோம்'' என்று வைரமூர்த்தி சொன்னதும் இருவரும் புறப்பட்டார்கள்.

17

அன்று மாலை ஐந்து மணி அடித்ததும் ரகுராமன் நேராக நிர்மலாவின் வீட்டுக்குப் புறப்பட்டான்.

கதவைத் திறந்த நிர்மலா ''வாங்க, ரகு....'' என்றாள்.


இருவரும் சமையலறைப் பக்கம் போனார்கள். நிர்மலா டீ போட எல்லாவற்றையும் எடுத்து வைத்தாள். ரகுராமன் உதவினான்.

''இது என்ன ரகு.... இது பெரிய மர்மக்கதை போலப் போகிறதே... யார் இந்த வைரமூர்த்தி? அவருடைய திட்டம் தான் என்ன?''

ரகுராமன் அவளுக்கு வைரமூர்த்தியின் துணிச்சலான திட்டத்தை விவரித்தான். கடைசியில், ''இதில் ரங்கதுரைக்கு - அதான் நல்லதம்பிக்கு - என்ன வேஷம்னு தான் புரியலே'' என்றான்.

''இப்ப நாம என்ன செய்யலாம்?''

ராசன்





''என் 'கிரீன் கார்டு' பற்றி எனக்குக் கவலையில்லை. வைரமூர்த்தியின் திட்டத்தில் நான் இனி எந்தப் பங்கையும் ஏற்ப தாயில்லை. எஃப். பி. ஐ. அதிகாரிகளுக்குச் சொல்லலாம் என்று இருக்கிறேன்.''

''எஃப். பி. ஐக்கு ஏன் சொல்ல வேண்டும்? மியூசியம் அதிகாரிகளிடம் சொன்னால் என்ன? வாஷிங்டன் டி.சி. போலீஸிடம் சொன்னால் என்ன?''

''சொல்லலாம், நிர்மலா. ஆனால்... வைரமூர்த்தியும், ரங்கதுரையும் இந்தியாவிலேயும் இதுபோல கொள்ளை, கள்ளக் கடத்தல் செய்திருக்கலாமே! இதை எல்லாம் எஃப். பி. ஐ உடனடியாய்க் கண்டு பிடிக்க முடியும்.''

''நீண்ட வடுக்காரனும் இந்தியனாயிற்றே. அவனும் வைரமூர்த்தி, ரங்கதுரை இவர்களுடன் குற்றங்கள் செய்தவனாகத்தான் இருக்க வேண்டும்.'' நிர்மலாவின் உடலில் சிறு நடுக்கம் ஏற்பட்டது.

''வாஷிங்டன், டி.சியிலுள்ள இந்தியத் தூதரகத்தாரை அணுகினால் என்ன? அவர்களும் வைரமூர்த்தி போன்ற குற்றவாளிகள் இந்தியா திரும்பி நீதி விசாரணைக்குட்பட உதவி செய்யலாமே'' என்றாள்.

''அதுவும் நல்ல யோசனைதான்... ஆனால்.''

''ரகு இத்தனை நாளாய் நான் சொல்லாத ஒன்று இப்போது சொல்ல வேண்டியிருக்கிறது. நீங்கள் மனம் திறந்து என்னிடம் சொல்லியது போல் நானும் சொல்லி விடுகிறேன். இது வேறு யாருக்கும் தெரியவே கூடாது.... சரியா?'' பீடிகை போட்டாள் நிர்மலா.

''சரி....''

''ரகு, நான் இந்திய அரசின் 'சென்ட்ரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷனி'ல் வேலை பார்ப்பவள். அதன் தொடர்பில் தான் இங்கு வந்தேன். இப்போது இந்திய தூதரகத்துக்குத் தினமும் அரை நாள் போய் வருவதும் இந்தக் காரணத்துக்காகத்தான்.''

''அப்பா! ரேஷன் கடையிலேர்ந்து அரைக் கிலோ ரவை கூடுதலா வாங்கிட்டு வரட்டுமா?''

''ஏண்டா?''

''அந்தக் கடை புழுன்னா நம்ம கோழி விரும்பிச் சாப்பிடும்!''

- ஞா. ஞானமுத்து



ரகுராமன் பதில் பேச சில நிமிடங்கள் ஆயின.

''அப்படியென்றால் வைரமூர்த்தி, ரங்கதுரை, ஜக்கின்னு சொன்னியே அந்த நீண்ட வடுக்காரன் இவங்களெல்லாம் கள்ளக் கடத்தல் ஆசாமிகள்னு உனக்கு ஏற்கெனவே தெரியுமா?''

''ரங்கதுரை, ஜக்கி என்னும் ஜகன்னாதன் இவங்களைப் புது டில்லியிலிருந்த போது ஃபைல்களிலே படத்தில் பார்த்தேன்; இங்க வந்த பிறகுதான் தரிசனம் கிடைச்சது. ஆனா வைரமூர்த்தின்னு இங்கிருக்கிறவரைப் படத்தில் கூட நான் பார்த்ததில்லை - அதுதான் இன்னும் குழப்பமாய் இருக்கு.''

''நீ சொல்றதைப் பார்த்தா நம்ம வேலை ரொம்பச் சுலபமாய் முடிஞ்சிடும்னு நினைக்கிறேன்.''

''அதுதான் இல்லை, ரகு. எஃப். பி. ஐ, இந்தியத் தூதரகம் மற்றும் 'இண்டர்போல்' மூலமாய்க் கூட இவங்களைப் பிடிக்க நமக்கு தக்க ஆதாரம் வேணும்..... ஆதாரங்கள் இதுவரை கிடைக்காததால்தானே இவங்க இன்னமும் வெளிநாட்டிலேயும் வந்து வேலையைக் காட்டப் பாக்கறாங்க. அதனாலே.....''

''அதனாலே?''

''இவங்களைக் கண்காணிப்பிலே வைக்கும்படி ஏற்பாடுகள் செய்வோம். நீங்க வைரமூர்த்தியின் திட்டப்படி கொஞ்சம் ஆடுங்க.... தக்க சமயம் வர்றப்போ ஆதாரத்தோடு மூணு பேரையும் அமுக்கிடுவோம்'' என்றாள் நிர்மலா.

''நிர்மலா... நீ சி.பி.ஐ தோரணையில் கச்சிதமாய்ச் சொல்லிட்டே.... எப்படியோ நீ என் பக்கம் இருக்கிறது எனக்கு ரொம்பத் திருப்தி....''

'எப்பவும் உங்க பக்கம் இருக்க விரும்புகிறேன், ரகு' என்று அவள் மனத்தில் சொல்லிக் கொண்டாள்.

''தேங்க்ஸ், ரகு. இப்பவே எஃப். பி. ஐ. ஆபீஸுக்கு நீங்க போன் பண்ணுங்க... ஆனா நான் சி.பி.ஐன்னு சொல்லாதீங்க....'' என்று துரிதப்படுத்தினாள்.

ரகுராமன் ஃபோன் எண்களைச் சுழற்ற....

''ஹலோ எஃப். பி. ஐ.... ஏஜண்ட் வார்னர் ஹியர்.''

ரகுராமனின் குரல் ராபர்ட்வார்னரின் காதில் தேனாக விழுந்தது. முதல் நாள் 'இண்டர்போல்' கொடுத்த செய்திக்கு இவ்வளவு சீக்கிரம் துப்பு கிடைக்கும் என்று ராபர்ட் நினைக்கவேயில்லை. தான் ஒரு துரும்பு கூட அசைக்காமல் துப்பு

தயாரிப்பாளர் : நான் ஹீரோவாகவும், என்னோட வொய்ப் ஹீரோயின்னாகவும், என்னோட சின்ன வீடு வில்லியாகவும்...

இயக்குனர் : அதாவது நீங்க தயாரிக்கப் போகும் படம் லோ-பட்ஜெட் படம் என்கிறீங்க.

- எஸ். எஸ். முருகையா



தன்னை நாடி வருவதை எந்தத் துப்பறியும் அதிகாரிதான் விரும்பமாட்டார்?

ரகுராமனிடம் எல்லா விவரங்களையும் வாங்கிக் கொண்ட ராபர்ட், ரகுராமனை எப்போது சந்திக்க முடியும் என்று கேட்டான். மறுநாள் காலை எட்டு மணிக்கு ரகுராமனை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வரச் சொல்லிவிட்டு இன்னுமொரு விஷயத்தையும் ராபர்ட் சொன்னான்.

''நீங்கள் கவனமாய் இருக்க வேண்டும். இந்தக் குற்றவாளிகள் தங்கள் திட்டப்படியே எல்லாம் நடப்பதாய் எண்ண வேண்டும்... சமயம் வரும்போது நாங்கள் பிடித்து விடுவோம்.''

எஃப்.பி. ஐ.,சி. பி. ஐ. எல்லோருமே பேசுவது ஒரே மொழி - என்று ரகுராமன் நினைத்துக் கொண்டான்.

ஃபோனை வைத்த ராபர்ட்,ரகுராமன் கூறியதுடன் முதல் நாள் இன்டர்போல் கொடுத்திருந்த தகவல் குறிப்புகளை ஒப்பு நோக்க அதை மீண்டும் எடுத்துப் பார்த்தான்:

எஃப். பி. ஐ. கேட்டிருந்த இந்திய ஆள் பற்றிய விவரம் :

பெயர் : ஜகன்னாதன்

ஊர் : மட்ராஸ், இந்தியா.

தொழில் : கொள்ளை, கள்ளக் கடத்தல்.

• சிறைவாசம் : இதுவரை இல்லை. போதிய அத்தாட்சி கிடைக்கவில்லை.

எடை, உயரம் : ஆறு அடி ஒரு அங்குலம் (186 சென்டி மீட்டர்) 200-210 பவுண்ட் (91-95 கிலோ)

பேசும் மொழிகள் : தமிழ், இந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு.

ஜகன்னாதனுக்கு இரண்டு கூட்டாளிகள் : குருமூர்த்தி, ரங்கதுரை - எல்லோருமே சென்னையைச் சேர்ந்தவர்கள். மிகவும் சாமர்த்தியமானவர்கள். ஜகன்னாதன் அமெரிக்காவில் இருப்பதாய் எஃப். பி. ஐ. சொன்னதிலிருந்து தெரிகிறது. மற்ற இருவருமே சென்னையில் இல்லை. பிரான்சு தேசத்திலும் இல்லை. எங்கே என்று தெரியவில்லை. தெரிந்தால் 'இன்டர்போல்' பின்னால் அறிவிக்கும்.

ராபர்ட் யோசனையில் ஆழ்ந்தான். தன் திட்டங்களைத் தாளில் எழுத ஆரம்பித்தான்.

18

மதிய உணவை முடித்துக் கொண்டு, வைரமூர்த்தியும் ரங்கதுரையும் சிவப்பு 'வோல்வோ' காரில் வைரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தார்கள்.

''ரங்கதுரை, உனக்கு 'பாத்ரூம்' போகணும்னு சொன்னியே... அதோ அந்த அறைக்குள்ளே போனா இடது புறம் ஒரு ரூம் இருக்கு அதுதான்....'' என்று வைரமூர்த்தி கையைக் காட்டினார்.

ரங்கதுரை பார்வையிலிருந்து மறைந்ததும் வைரமூர்த்தி அவசர அவசரமாக இன்னொரு அறையின் பூட்டைத் திறந்தார். உள்ளே போய் ஐந்து நிமிடங்களில் வெளியே வந்து மீண்டும் அறைக் கதவைப் பூட்டினார். அதைப் பார்த்துக் கொண்டே வந்துவிட்ட ரங்கதுரை,

''என்னடா வைரம் அங்கே என்ன மறைச்சு வைச்சிருக்கே?'' என்று கேட்டுவிட்டார்.

வைரமூர்த்தி சில நிமிடங்கள் மௌனமாய் யோசித்தார். பிறகு, ''ரங்கதுரை... இந்த அறைக்குள் நான் ஒண்ணை மறைச்சுத்தான் வைச்சிருக்கேன்... உனக்குக் காட்டறேன்.... ஆனா இந்த விஷயத்தை உன் உயிர் போனாலும் யார் கிட்டேயும் சொல்லிடக்கூடாது'' என்றார். வைரமூர்த்தியின் குரல் கடுமையாக இருந்தது.

ரங்கதுரையை உள்ளே போகச் சொன்னார். தானும் உள்ளே நுழைந்தார்.

அறை பெரும்பாலும் இருட்டாக இருந்தது. சிறிய 'நைட் லாம்ப்' ஒன்று எரிந்து கொண்டு இருந்தது. விளக்கொளியில் அங்கேயிருந்த சோபாவில் ஒரு உருவம் உட்கார்ந்திருந்தது. அறையில் சன்னல்கள் மூடப்பட்டிருந்தன.

(தொடரும்)

போட்டிக் கதை - 12

காணிக்கை

வீடே களைகட்டி விட்டது. இன்னும் பத்து நாட்களில் அறுபதாம் கல்யாணம் சிவ ராமனுக்கு. பரோடா நந்தினி, பம்பாய் அருண், பெங்களூர் ராஜா எல்லோரும் குடும்ப சகிதம் வந்து விட்டார்கள். அம்மா பாரேதியைச் சுற்றி அமர்ந்து அரட்டை.

''அம்மாவைப் பா ரே ன். கன்னம் சிவந்து... ஒரே வெட்கம். அடுத்த வாரம் கல்யாணம்னு...'' என்றான் ராஜா.

கடைசிப் பையன் என்ற சுவாதீனத்தில் உரிமையாய்க் கிண்டலடித்தான்.

''ச்சீ.... என்னது இது. அம்மான்னு மரி யாதை இல்லாமே.'' என்றாள் அவன் மனைவி.

''நாங்க எல்லாம் அவ்வளவு சுதந்திரம்... அம்மா.. அப்பான்னு பயந்து... பயந்து வளரலே....'' என்றாள் நந்தினி. மூத்தவள். மாப்பிள்ளை இன்னும் நான்கு நாட்களில் கிளம்பி வருவார்.

அருண் பொறுப்பாய்ச் சாமான் பட்டி யலைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''கணக்குப் பார்த்தாக்க. தூள் கிளப்பிட லாம். வேணும்னா... ஹனிமூன் கூட அனுப் பிரலாம்! ரெண்டாந் தடவை...'' என்றான்.

''..முதல் தடவையே போகல்லே...'' என்றாள் பாரேதி மெல்ல.

''ஏன். உன்னை வேலூர் கூட்டிக்கிட்டுப் போகலியா? எனக்குக் கல்யாணமானதும் உடனே அங்கேதானே டிரான்ஸ்பர் ஆச்சு...'' என்றார் சிவராமன்.

''போதும்.. உங்க வேலூர் புராணம்....'' என்றாள் பாரேதி.

''குறையே வேணாம்மா... இப்ப சொல்லு - ஊட்டியா.. கொடைக்கானலா... எங்கே போகணும்?''

''சொல்லு பாரு... உன் வாரிசுகள் மூணு பேரும் ஆளுக்குப் பத்தாயிரம் போட்டு... ஜாம்ஜாம்னு இந்தக் கல்யாணத்தை நடத்தப் போறாங்களாம்...'' என்றார் சிவராமன்.

''போதும். வழியாதீங்க. எதுக்கு வீணா வெட்டிச் செலவு. சி க் க ன ம ா.... ஏதாவது கோவில்ல அர்ச்சனை பண்ணி... வீட்டுல வடை பாயசம் பண்ணா போறாதா?''

''போம்மா... உன்னோட முதல் கல்யா ணத்துக்கே நாங்க வர முடியலே... அறுபதாம் கல்யாணமாவது வீடியோ எடுத்து தூள் கிளப் பலாம்னா....'' என்றான் ராஜா சிரிக்காமல்.

எல்லோரும் ஒவென்று சிரித்தனர்.

''பாத்திக்கு... என்ன?'' என்றது நரேன்.

ரிஷபன்

''பாத்திக்கு... டும்... டும்.. கல்யாணம்.''

''நேக்கு?''

''உனக்கும்தான். அதே முகூர்த்தத்துல... நல்ல பெரிய பொண்ணா பார்த்து... உன்னை இடுப்புல வச்சுண்டு சாதம் ஊட்டற மாதிரி...''

''விளையாடாதேடா.. குழந்தைகிட்ட.... நீ இங்கே வாம்மா... உனக்கும் கல்யாணம் ஆச்சே.. அப்ப.. காது குத்தி.. தலை எல்லாம் மொட்டை அடிச்சு...'' என்றாள் பாரேதி.

''எனக்கு கக்கு வேணும்..'' என்றது உடனே.

பாரேதி எழுந்து உள்ளே போனாள்.

அருணும் ராஜாவும் தனியாக ஒதுங்கி னார்கள்.

''செலவைப் பத்திக் கவலையே படாதே. கையில ட்வெண்டி கொண்டு வந் திருக்கேன்...'' என்றான் ராஜா.

''நீ வேற... நானும் ஃபிஃப்டீன் வச்சி ருக்கேன். ஆனா அவ்வளவு ஆகாது. அப்ப டியே முடிஞ்சதுன்னா திருப்பதி போயிட்டு வரலாம். வேன் வச்சண்டு...''

''நம்ம சாஸ்திரிகளைப் பார்த்துட்டியா? என்ன சொன்னார்?''

''அவசரமே வேணாம். முதல் நாள் வந்தா கூட போதும், சாமான் எல்லாம்... சமையலுக்கு ஆள் ஏற்பாடு பண்ணிட்டா ராம்... பால், தயிர், விறகுன்னு லிஸ்ட்டே போட்டுக் கொடுத்துட்டார்.''

''இன்விடேஷன் பிரிண்ட் பண்ண வேணாம்னு அடிக்க சொல்லிட்டாரே அப்பா. என்றான் ராஜா மனத் தாங்கலுடன்.

''எனக்கு ரொம்ப வேண்டிய பிரஸ்காரன் ஒருத்தன் இருக்கான். ஹூம்... அட்டகாசமா அடிச்சுக் கொண்டு வந்திருப்பேன். இப்ப என்ன பண்றது. கார்டு போதும்னு நம்ம ரிலேட்டிவ்ஸ்க்குத்தானே உட்கார்ந்து எழுதியிருக்கார் அப்பா... பாவம்...''

''சரி... சரி... இன்னைக்கு என்ன ஸ்பெஷல்? அம்மா கையால பத்து நாள் திருப்தியா சாப்பாடு..''

இரண்டு பேரும் சமையலறைக்குள் போனார்கள்.



சிவராமன் வீட்டை விட்டுக் கிளம்பினார். மனசுக்குள் பெருமிதம் அப்பியிருந்தது.

வீட்டில் சும்மா அமர முடியவில்லை. இந்தச் சந்தோஷத்தை யாருடனாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் போல் மனசு பரபரத்தது.

சுந்தரம் வீட்டுக்குப் போனால் என்ன? பல வருஷ பழக்கம். ஒன்றாய் வேலை பார்த்தவர்கள். அதையும் மீறி எல்லா நல்லது கெட்டதுகளிலும் பங்கெடுத்துக் கொண்டவர்கள். நட்பின் இலக்கணம் போல வாழ்ந்தவர்கள்.

வீட்டு வாசலில் காலடி வைத்ததுமே சுந்தரத்தின் உற்சாகக் குரல் கேட்டது.

''வாடா....! எல்லோரும் வந்தாச்சா?''

''இன்னைக்குக் கார்த்தால டிரெயின்... வீடே ஒரே அமளி. பொண்ணு, புள்ளை, பேரன், பேத்தின்னு....'' என்றார் முகம் மலர.

உள்ளே திரும்பி மனைவிக்குக் குரல் கொடுத்தார் சுந்தரம்.

''இங்கே வா... மாப்பிள்ளை வந்திருக்கார்...''

''என்னடா... கிண்டலா?''

வசுமதி வெளியில் வந்து.. ''வாங்கோ மாமா...'' என்றாள்.

சுந்தரத்தின் நாலாவது பெண். இவளுக்குத் தான் திருமணம் ஆக வேண்டும். சுந்தரத்திற்கு நாலும் பெண்கள்.

''ஏண்டா... போன வாரம் யாரோ வந்து பொண்ணு பார்த்துட்டுப் போனாங்களே... என்ன பதில் வந்தது?''

சுந்தரம் பெருமூச்செறிந்தார்.

''பெண் மட்டுமா பார்த்தாங்க? என்னையும் பார்த்தாங்க. இந்த வீட்டையும் பார்த்தாங்க. நிறைஞ்ச வசதியோட வாழற இந்தக் குடும்பத்துல சம்பந்தம் வச்சுக்க முடியுமான்னு கொஞ்சம் பயந்துட்டாங்க...'' என்றார் வேதனைச் சிரிப்புடன்.

''என்னடா சொல்றே.. புரியலியே?''

''அவங்க நினைக்கிற அளவு என்னால சீர் செய்ய முடியலை. அவ்வளவுதான்.''

''ஓ...'' என்றார் சிவராமன்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வீடு திரும்பினார்.

பாகீரதி தண்ணீர் சொம்பினைக் கொண்டு வந்தாள். சிவராமன் தூங்கவில்லை.

''இப்படித் தலை மாட்டுல வச்சுட்டுப் போறேன். ஹால்ல குழந்தைகளோட படுத்துக்கணுமாம்.''

''கொஞ்சம் நில்லு. பாகீ... ஒரு விஷயம் பேசணும்.'' என்றார் அழுத்தமான குரலில்.

''என்னது?''

''இந்த அறுபதாம் கல்யாணம் விமரிசையா நடக்கலேன்னா வருத்தப்படுவியா?''

''என்னது... ஏ தா வ து உளறிண்டு.. பேசாம படுங்கோ.''

''இல்லே. பாகீ... நான் சீரியசா கேட்கறேன்... உனக்கு ஆசையா இருக்கா?''

பாகீரதி அவர் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். பிறகு சொன்னாள்.

''எனக்கு இப்ப எல்லாம் எந்த ஆசையும் இல்லே... அதெல்லாம் ஒரு காலம்.''

''நான் கேட்டதுக்கு இது பதில் இல்லே.''

''எனக்கு வருத்தம் இல்லே.''

''...நெஜம்மா?''

''நெஜம்தான். பொய் சொல்லுவாளா யாராவது.

''நம்ம சுந்தரம் வீட்டுக்குப் போயிருந்தேன்... வசுமதி கல்யாண விஷயமா... மனசு ஒடிஞ்சு போயிருக்கான்.''

புரிந்து விட்டது பாகீரதிக்கு.

''எனக்குச் சம்மதம்.. நீங்க நினைக்கிற படியே செய்யுங்கோ.''

சிவராமன் குழம்பினார்.

''நான் என்ன விஷயம்னே சொல்லலியே...''

''நம்ம கல்யாணத்துக்குப் பதிலா... அந்தப் பணத்துல. வசுமதி கல்யாணம்.. சரிதானா?''

''பாகீ...'' சிவராமனின் குரல் தழுதழுத்தது.

''வரட்டுமா... பாட்டியைத் தேடிண்டு... பசங்களே வந்துரும்.''

மூவரும் ஒருமித்து வந்து நின்றார்கள். சிவராமன் மெல்ல அவர்களை நிமிர்ந்து பார்த்தார்.

''என்னப்பா இது. எவ்வளவு ஆசையா நாங்க.. வந்தோம். திடீர்னு இப்படி..''

''யாரோ ஒருத்தருக்காக.. எங்க சந்தோஷத்தைக் கைவிடணுமா?''

''யாரோ இல்லைடா. நம்ம சுந்தரம்....''

❑ பிரபல ஆங்கில ஆசிரியரான தாக்கரே, ஒருநாள் ஒருவழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு



''ஸாரிப்பா.. அவர் உங்க சுந்தரம்தான். எங்களுக்கு நீங்கதான் முக்கியம்.'' என்றான் அருண்.

''எங்களுக்குச் செலவழிக்க எவ்வளவோ தேவைகள் இருக்குப்பா. ஆனா... உங்க ளோட அறுபதாம் கல்யாணம்னுதான் இந்தப் பணத்தைத் தொடாமே வச்சிருந்தேன்...''

''நானும்தான்பா.. இதை யாருக்கோ கொடுக்கிறதுல... எனக்கு இஷ்டம் இல் லைப்பா. இது தியாகம் இல்லே... அசட்டுத் தனம்.''

மாறி மாறி மூவரும் இறுகிய முகத்துடன் சேகவதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு இருந்தார் சிவராமன்.

''அப்படீன்னா...''

''ஆமாம்பா. ஸாரி. ஒண்ணு... உங்க அறுபதாம் கல்யாணம்.... இல்லே.. எதுவும் இல்லே...''

''எங்களை மன்னிச்சுருங்கப்பா. உங்க முடிவுல எங்களுக்கு விருப்பம் இல்லே..''

''சரிப்பா...'' என்றார் சிவராமன்.

''கோபம் எதுவும் இல்லையே... மனகல பட்டதைச் சொல்லிட்டோம்.''

''ம்ஹும்... நீங்க போங்கோ...'' என் றார்.

பாரேதி வந்து நின்றாள்.

''என்ன?... சாப்பிட வரலையா?''

''ம்....'' அவளைப் பார்த்தார்.

''விஷயம் தெரியுமா?''

''கேள்விப்பட்டேன்... அவரவர் நியா யம் அவரவர்க்கு...'' என்றாள்.

''அவங்களை சப்போர்ட் பண்றியா?''

''இல்லை... மனகல பட்டதைச் சொன் னேன்.''

''எல்லாருக்கும் மனசு இருக்கு... என் மனசு மட்டும் யாருக்கும் புரியலே...''

பாரேதி சிரித்தாள்.

''உங்க மனசு எனக்குப் புரியுது. ஆனா நான் என்ன செய்ய முடியும். நீங்க கேட்டே மறுத்துட்டாங்க. நான் சொன்னாலும் என்ன மரியாதை மிஞ்சியிருக்கும். கௌரவமா வாயை மூடிக்கிட்டு... ஒதுங்கி நிக்கிறேன். என்னைப் பொறுத்தவரை... முடிவு எடுக்க றது எப்பவுமே என் கையில இல்லையே...'' என்றாள் யதார்த்தமான குரலில்.

சுரீரென்று பட்டது சிவராமனுக்கு. வாஸ் தவம்தானே. கல்யாணம் பண்ணிக்கோ.. என்று குழந்தைகள்.. வேண்டாம் என்று கண வன். யார் எது சொன்னாலும் 'சரி' யென்று கேட்க அவள்....

''உன் பசங்ககிட்டே சொல்லிட்டு பாரதி.... எல்லா ஏற்பாட்டையும் பண்ணச் சொல்லி....'' என்றார் நிதானமாக.

''வேணாங்க... வேண்டா வெறுப்பா நீங்க ஒத்துக்க வேணாம்.''

''இல்லம்மா. பூரண சம்மதம்... சந்தோ ஷமாச் சொல்றேன். ஏற்பாடு செய்யச் சொல்லு....'' என்றார்.

சுந்தரம் மிகவும் நெகிழ்ந்து போய் சிவ ராமனின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

''டேய்... என்னடா இது.. இப்படி செஞ் சுட்டே. என்னால எப்படிடா திருப்பித் தர முடியும்.''

''உன்னை யாரு திருப்பித்தரச் சொன் னாங்க. வசுமதியும் என்னோட பொண்ணு மாதிரிடா. அவளுக்கு என்னோட ஆசீர்வாதம் இந்த இருபதாயிரம். போடா; மத்த ஏற்பாடு களைக் கவனி.''

''ஏதுரா... இவ்வளவு பணம்? பையன் யாரும் கொடுத்தானா?''

''அதெல்லாம் உனக்கு எதுக்கு?''

''சும்மா சொல்ரா...'' என்றார் சுந்தரம் உரிமையான குரலில்.

''என்னோட எல்ஐசி பாலிசி பேர்ல லோன் வாங்கினேன்.''

''ஏய்... வந்து... அப்புறம் உன் னோட....'' தடுமாறினார் சுந்தரம்.

''ஏன் நிறுத்திட்டே.... சொல்லேன்.. 'எனக்கு ஏதாவது ஆச்சுன்னா. பாரேதி என்ன பண்ணுவா?' அதுதானே...? ஒண்ணு எனக் குப் புரிஞ்சுடுத்து. நிச்சயமா அவ பசங்க அவளைக் கைவிடமாட்டாங்க. ஏன்னா... அவ.. அவங்களோட அம்மா.. அவளுக்குச் செலவழிக்கிறதுல கணக்குப் பார்க்க மாட் டாங்க. யார் முந்திக்கிட்டாலும்... சோறு போட துணை இருக்குன்னு தைரியம் வந்த தாலேதான் இந்த முடிவெடுத்தேன். இது என்னோட மனச்சாட்சிக்கு நான் கொடுத்த விலை. இல்லை.. காணிக்கை... சரி... ஏதோ ஒண்ணு. இப்ப என்ன அதைப் பத்தி... பொண்ணு கல்யாணத்துல ரெண்டு ஸ்வீட் உண்டோல்லியோ எனக்கு...'' என்றார் சிவ ராமன்.

சுந்தரம் பிரமித்துப் போய் அவரைப் பார்த்தார்.

பிச்சைக்காரி எதிர்ப்பட்டாள். தாக்கரே, தன் ஜேபியில் கையைப் போட்டதும், அந்த பிச்சைக்காரி, ''கடவுளின் அருள் தங்களை எப்பொழுதும் பின்தொடரட்டும்'' என்றாள்.

ஆனால் தாக்கரே, ஜேபியிலிருந்து பணம் எடுக்காமல், பொடி டப்பியைத்தான் எடுத்தார் என்று தெரிந்ததும், ''அப்படிப் பின்தொடரும் அவன் அருள் தங்களை எட்டிப் பிடிக்காதிருக்கட்டும்!'' என்று அவள் முடித்தாள்.

தகவல் : நாடோடி

காலில் சக்கரம் மனசில் உற்சாகம்

சில நாட்களுக்கு முன் காலில் ரோலர் ஸ்கேட்ஸ் அணிந்து பரதநாட்டியம் ஆடிய இளைஞரை டி.வி.யில் பார்த்தது நினைவிருக்கும். இவருக்கும் இன்னும் பல ரோலர் ஸ்கேட்டிங் வீரர்களுக்கும் முன்னோடி பெல்ஜியத்தைச் சேர்ந்த ஜோஸஃப் மெர்லின் என்ற வயலின் கலைஞர். கனவான்கள் நிறைந்த சபையில் ரோலர் ஸ்கேட்டிங் செய்தபடியே வயலின் வாசித்தார் மெர்லின்.

மெர்லின் உபயோகித்த ரோலர் ஸ்கேட்ஸ் பல மாற்றங்களை, அபிவிருத்திகளை அடைந்து இன்றைய வடிவத்தைப் பெற்றுள்ளது.

''ரோலர் ஸ்கேட்ஸின் அடிப்பகுதி உலோகத்தால் ஆனது. அதில் உள்ள ஒரு திருகை முடுக்கி, காலின் அளவுக்கேற்ப 'அட்ஜஸ்ட்' செய்து கொள்ளலாம். உருளைகள் 'பால் பேரிங்' அமைப்பில் இணைக்கப்பட்டிருப்பதால் வெகு சுலபமாகத் தரையில் சறுக்கிச் செல்ல முடியும். உருளைச் சக்கரங்கள் ரப்பர் அல்லது வேறு இழைகளாலோ உலோகத்தாலோ செய்யப்பட்டிருக்கும்...'' என்று விளக்குகிறார் வெங்கடேஷ்.

வெங்கடேஷ் இந்த விளையாட்டில் தேசிய சாம்பியன். தமிழ்நாடு ரோலர் ஸ்கேடிங் அஸோசியேஷன் நடத்திய பயிற்சி முகாமில் 'கோச்' பொறுப்பு. ஆறு முதல் பன்னிரண்டு வயது வரையிலான குழந்தைகள் காலில் சக்கரம் கட்டிக் கொண்டு கொஞ்சம் நகர்வதும் விழுவதும் எழுவதும் மீண்டும் 'விர்'ரென்று கிளம்புவதுமாக இருந்தனர். அவர்களைத் திருத்தியும், உற்சாகப்படுத்தியும் வழிகாட்டிய வெங்கடேஷ், ''விடாமல் முயற்சி செய்தால் இதோ இப்படி நீங்களும் சீக்கிரமே செய்ய முடியும்'' என்று கூறி, ராஜரத்தினம் ஸ்டேடியத்தின் பாஸ்கட்பால் கோர்ட்டை அனாயாசமாக 'சர்' என்று புயல் வேகத்தில் சுற்றி வந்தார். திடீரென்று ஒற்றைக் காலை மடக்கிக் கொண்டு உட்கார்ந்த வாக்கில் சறுக்கினார். மீண்டும் செங்குத்தாகி, உடலை முன்புறம் சாய்த்து, ஒரு காலைப் பின்புறமாய் உயர்த்தி, இரு கைகளையும் இறக்கைகள் போல் விரித்து 'ஏரோப்ளேன்' மாதிரி 'விர்' ரென்று பறந்தார்...!



விழுந்து...

பயிற்சிக்கு வந்திருந்த சிறுவர்களின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன. நமக்கோ வெங்கடேஷ் கூடவே 'பறப்பது' போன்ற உணர்வு!

''இந்த ஆண்டு எங்கள் அசோசியேஷன் நடத்திய பயிற்சி முகாமுக்கு அறுபத்தைந்து பேர் வந்தனர்'' என்கிறார் தமிழ்நாடு ரோலர் ஸ்கேட்டிங் அஸோசியேஷனின் செயலாளர் லட்சுமி. ''இந்த



☛ ....எழுந்து, பயிற்சி.

விளையாட்டு தமிழ்நாட்டில் மெள்ள மெள்ளத்தான் பாபுலராகிக் கொண்டிருக்கிறது. டெல்லியிலும் பெங்களூரிலும் சாலைகளிலேயே பலர் ரோலர் ஸ்கேட்ஸ் அணிந்து செல்வதைப் பார்க்கலாம்....'' என்கிறார்.

''ஒரு ஜோடி ரோலர் ஸ்கேட்ஸின் விலை இருநூற்றைம்பது முதல் ஐந்நூறு ரூபாய்க்குள் இருக்கும். இதனை வாங்கி, ஆண்டுக்கொரு முறை நடக்கும் முகாமில் ஆரம்பப் பயிற்சி பெற்றாலும் தொடர்ந்து பயிற்சி செய்ய இடம் வேண்டும் அல்லவா...? சென்னையில் ஐ. ஐ. டி. வளாகத்தில் ஒரே ஒரு 'ஸ்கேடிங் ரிங்க்'தான் உள்ளது. அங்கும் வெளியேயிருந்து வருபவர் பயிற்சி செய்ய முடியாது. இந்த நிலையில் இவ் விளையாட்டு எப்படி பிரபலம் அடையும்...?'' என்று கேட்கும் லட்சுமி, அரசாங்கம் தமிழ்நாட்டில் ஸ்கேட்டிங் ரிங்க் அமைக்க முன்வர வேண்டும் என்கிறார்.

இந்த நிலையில், கன்யாகுமரி மாவட்டத்தில், பல ஸ்கேட்டிங் முகாம்களில் பயிற்சி பெற்று, நூற்றுக்கும் அதிகமான பேர் சிறப்பாக ஸ்கேடிங் செய்கிறார்கள் என்ற தகவல் ஆச்சரியத்தை அளிக்கிறது.

– எஸ். சந்திரமௌலி

வண்ணப்படங்கள் : யோகா

சிவகாமியின் சபதம்

பத்தொன்பதாம் அத்தியாயம்
சுரங்க வழி

ஆயனர் அஜந்தா வர்ண ரகசியத்தில் மனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கையில், சக்கரவர்த்தி அசுவபாலரைப் பார்த்து, "என்ன யோகியாரே, யோகப் பயிற்சியெல்லாம் இப்போது எப்படியிருக்கிறது? இந்த வாதாபி மன்னர் வந்தாலும் வந்தார்; யோக சாதனத்தில் மனதைச் செலுத்தவே அவகாசம் இல்லாமல் போய்விட்டது!" என்று கூறி கண்களினால் சமிக்ஞை செய்யவே, அசுவபாலர் சக்கரவர்த்தியைப் பின் தொடர, இருவரும் வீட்டுக்குப் பின்னால் அரண்மனை உத்தியானவனத்தில் இருந்த யோக மண்டபத்துக்குச் சென்றார்கள்.

அவர்கள் போனதும், சிவகாமி கமலியைப் பார்த்து, "அக்கா! சக்கரவர்த்தி கற்ற கலை எல்லாம் போதாதென்று யோகக் கலை வேறு கற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கிறாரா?" என்று கேட்டாள். அதற்குக் கமலி, கண்ணை விஷமமாகச் சிமிட்டிக் கொண்டே இரகசியம் பேசும் குரலில், "யோகமாவது, மண்ணாங்கட்டியாவது; எல்லாம் மோசம்! அப்புறம் சொல்கிறேன்" என்றாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் மகேந்திர பல்லவர் யோக மண்டபத்திலிருந்து திரும்பி அந்த வீட்டின் வழியாக வெளியே சென்ற போது ஆயனர் சென்று குறுக்கிட்டு வணங்கி "பல்லவேந்திரா! இங்கே நாங்கள் வந்த காரியம் ஆகிவிட்டதல்லவா? இனி மண்டபப்பட்டுக்குத் திரும்பலாமா?" என்று இரக்கமான குரலில் கேட்டார்.

மகேந்திரர் புன்னகையுடன், "ஆயனரே! சிவகாமியின் அற்புத நடனத்துக்கு இன்னும் நான் வெகுமதிகள் அளிக்கவில்லையே? கொஞ்சம் பொறுத்திருங்கள். மேலும் மண்டபப்பட்டுக்கு நீங்கள் திரும்பிப் போகவேண்டிய அவசியமே நேராது. உங்களுடைய பழைய அரண்ய வீட்டுக்கே போகலாம்!" என்றார்.

ஆயனர் கவலை மிகுந்த குரலில், "பிரபு! ஒவ்வோரிடத்திலும் ஆரம்பித்த வேலை அப்படி அப்படியே நடுவில் நிற்கிறதே! இந்தத் துரதிர்ஷ்டசாலியின் பாக்கியம் போலிருக்கிறது. மண்டபப் பட்டில் ஆரம்பித்த திருப்பணியும் அப்படியே நின்றுவிட்டால்...." என்று கூறி வந்தபோது, மகேந்திர பல்லவர் குறுக்கிட்டு, "மகா சிற்பியாரே! மனித வாழ்க்கை அற்பமானது. இதில் நாம் ஒவ்வொருவரும் ஆரம்பித்த காரியத்தைப் பூர்த்தி செய்துவிட முடிகிறதா? நான் தொடங்கிய காரியங்களும் எத்தனையோ நடுவில் நின்றுதான் போயிருக்கின்றன. அதனால் என்ன? நமக்குப் பின்வரும் சந்ததிகள் நிறைவேற்றி வைப்பார்கள். அதற்காகக் கவலைப்பட வேண்டாம். மேலும் நமது அரண்மனையில் கூடிய சீக்கிரத்தில் ஒரு கல்யாணம் நடக்கப் போகிறது. அப்போது உம் குமாரி நாட்டியம் ஆட வேண்டியிருந்தாலும் இருக்கும்!" என்று கூறிவிட்டு, மேலே நடந்து சென்றவர், வாசற்படியண்டை சற்றுத் தயங்கி நின்று, "ஆயனரே! உங்கள் விருப்பத்துக்கு விரோதமாக இருக்கும்படி கட்டாயப்படுத்த நான் விரும்பவில்லை. உங்களுக்கு அவசியம் போக வேண்டுமானால், கோட்டை வாசல் கதவுகள் திறந்ததும் போய் வாருங்கள், தேவை ஏற்படும்போது சொல்லி அனுப்புகிறேன்" என்று கூறிவிட்டு, விரைந்து வாசற்படியைக் கடந்து சென்றார்.

சக்கரவர்த்தி போன பிறகு, சிவகாமி திடீரென்று தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழத் தொடங் கினாள். கமலி அவளுடைய தலையைத் தூக்கித் தன் மடியின் மீது போட்டுக் கொண்டு, ''என் கண்ணே! நீ ஏன் அழு கிறாய்? உனக்கு என்ன காரியம் ஆக வேண்டுமோ சொல்! எந்தப் பாடுபட் டாவது, உயிரைக் கொடுத்தாவது நான் செய்து கொடுக்கிறேன். நீ கண்ணீர் விட் டால் என் நெஞ்சு உடைந்துவிடும் போலி ருக்கிறது!'' என்றாள்.

சிவகாமி மறுமொழி சொல்லாமல் விம்மவே, ''அசடே! நீ எதற்காக அழு கிறாய் என்று எனக்குத் தெரியும். சக்கர வர்த்தி கலியாணத்தைப் பற்றிச் சொன்ன தற்காகத்தானே? அது எப்படி நடக்கும், சிவகாமி? மாமல்லர் உனக்கு வாக்குக் கொடுத்திருக்கும் போது, எப்படி நடக் கும்? இந்த மகேந்திர சக்கரவர்த்தி என்ன தான் சூழ்ச்சி செய்தாலும் மாமல்லர் வேறொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டார். மாமல்லரின் குணம் எனக்கு நன்றாய்த் தெரியும். அவ ரிடம் இந்தச் சக்கரவர்த்தியின் சூழ்ச்சி ஒன்றும் பலிக்காது!'' என்றாள் கமலி.

சென்ற சில நாளாகக் காஞ்சி நகரில் மாமல்லரின் விவாகத்தைப் பற்றிப் பலவித வதந்திகள் உலாவி வந்தன. பாண் டியனைப் புலிகேசியிடமிருந்து பிரிக்கும் பொருட்டு, பாண்டிய குமாரியை மாமல்ல ருக்குக் கலியாணம் செய்து கொள்வதாகச் சக்கரவர்த்தி ஓலை அனுப்பியிருக்கிறார் என்று சிலர் சொன்னார்கள். இன்னும் சிலர் வாதாபிச் சளுக்கர் குலத்திலேயே மாமல்ல ருக்குப் பெண் கொள்ளப் போவதாகப் பிரஸ்தாபித்தார்கள்.

இதெல்லாம் கமலியின் காதுக்கும் எட்டி யிருந்தபடியால், அவளுடைய மனமும் ஒருவாறு வேதனைப் பட்டுக் கொண் டிருந்தது. ஆகையினால்தான் மாமல்லரின் மன உறுதியைப் பற்றி அவ்வளவு வற் புறுத்தி, சிவகாமிக்கு அவள் தேறுதல் கூறினாள்.

ஆனால் சிவகாமி தேறுதல் அடைய வில்லை. மாமல்லரின் பெயரைக் கேட்ட பிறகு இன்னும் விசித்து அழலானாள். ''இல்லை, அக்கா, இல்லை! மாமல்லர் என்னை வெறுத்து விடுவார். என்னிடம் அவருக்கிருந்த ஆசையெல்லாம் விஷமாகி விடப் போகிறது. அவருக்கு அப்படித் துரோகம் செய்து விட்டேன், இந்தப் பாவி! முன்னமே ஒரு தடவை அவர் என்னை வீட்டிலேயே இருக்கச் சொல்லியிருக்க, நான் ஊர் சுற்றப் போய்விட்டேன். இப் போது என்னை மண்டபப்பட்டிலேயே இருக்கும்படி சொல்லியிருக்க, இங்கே நாட்டியம் ஆட வந்துவிட்டேன். அக்கா! அவர் பாண்டியனை வென்று விட்டு நேரே மண்டபப்பட்டுக்கு வருவார்! வந்து என் னைத் தேடுவார்! அங்கே என்னைக் காணா மற் போனால், அவருக்கு எப்படி இருக் கும்? நான் இங்கே புலிகேசிக்கு முன்னால் நாட்டியம் ஆடவந்துவிட்டேன் என்று கேள்விப்பட்டால் அவருக்கு என்னமாய் இருக்கும்? - ஆஹா! இந்தச் சக்கரவர்த்தி என்னை எப்படி வஞ்சித்து விட்டார்!'' என்று விம்மிக் கொண்டே கூறினாள் சிவகாமி.

கமலி சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தாள். ''சிவகாமி! இதற்கு ஏன் இவ்வளவு கவலை? கோட்டை வாசல் திறந்ததும் நீ போகலாம் என்றுதான் சக்கர வர்த்தியே சொல்லி விட்டாரே!'' என்றாள்.

''ஆஹா! அவருடைய சூழ்ச்சி உனக் குத் தெரியாது! எனக்காகவே கோட்டை வாசலை வெகு நாள் வரையில் சாத்தி வைத்திருப்பார், அக்கா! மாமல்லர் இங்கு வந்து சேரும் வரையில் திறக்கமாட்டார்! நீ வேணுமானால் பார்!'' என்று சிவகாமி விம்மினாள்.

''தங்கைச்சி! நீ கவலைப்படாதே! கோட்டை வாசல் திறக்கா விட்டால் போகட்டும்; நான் உன்னை எப்படியாவது வெளியே அனுப்பி வைக்கிறேன்!'' என்றாள் கமலி.

உடனே, சிவகாமி விம்மலை நிறுத்தி எழுந்து உட்கார்ந்து, ''அக்கா! நிஜமாகத் தானா? அது சாத்தியமா? என்று கேட்டாள்.

''நான் மனம் வைத்தால் எது தான் சாத்தியமாகாது? என்னை யார் என்று நினைத்தாய்? இந்த மகேந்திர சக்கரவர்த்தி யின் சூழ்ச்சியெல்லாம் என்னிடம் பலிக் குமா?''

''அக்கா! எப்படி என்று சொல்! எங்களை எவ்விதம் வெளியில் அனுப்பி வைப்பாய்?'' என்று சிவகாமி பரபரப் புடன் கேட்க, கமலி அவள் காதண்டைத் தன் வாயை வைத்து, ''சுரங்க வழி மூல மாக!'' என்றாள்.

சிவகாமி, ஏற்கெனவே காஞ்சியி லிருந்து வெளியே போக இரகசியச் சுரங்க வழி இருக்கிறதென்று கேள்விப்பட்ட துண்டு. எனவே, இப்போது கரை கடந்த

ஆவலுடன், ''சுரங்க வழி நிஜமாகவே இருக்கிறதா? உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா?'' என்று கேட்டாள்.

கமலி மீண்டும் இரகசியக் குரலில் கூறினாள்: ''இரைந்து பேசாதேயடி! மாமாவின் யோக சாதனத்தைப் பற்றிச் சொல்கிறேன் என்றேன் அல்லவா? யோகம் என்பதெல்லாம் பொய். தங்கைச்சி! சுத்தப் பொய்! அந்த மண்டபத்திலே சுரங்க வழி இருக்கிறது! அதற்குள்ளேயிருந்து குண்டோதரன் அடிக்கடி வெளி வருவதை நான் பார்த்திருக்கிறேன். சக்கரவர்த்தி கூடச் சில சமயம்....''

''என்ன அக்கா சொல்கிறாய்? குண்டோதரனா?''

''ஆமாமடி தங்கச்சி! ஆமாம்! குண்டோதரன் என்று சக்கரவர்த்தியின் ஒற்றன் ஒருவன் இருக்கிறான். சத்ருக்னன் என்று இன்னொருவன் இருக்கிறான். இரண்டு பேரும் பொல்லாத தடியர்கள்!.... என்னடி யோசிக்கிறாய்?''

''ஒன்றுமில்லை, சொல், அக்கா! அந்தச் சுரங்க வழி உனக்கு எப்படித் தெரிந்தது?''

''அந்த யோக மண்டபத்தின் பக்கம் நான் வரவே கூடாது என்று என் மாமனார் சொல்லியிருந்தார். அதனாலேயே அவருக்குத் தெரியாமல் நான் அடிக்கடி போய்ப் பார்ப்பேன். ஒரு நாள் நான் போய் எட்டிப் பார்த்தபோது, மண்டபத்தின் மத்தியில் இருந்த சிவலிங்கம் அப்பால் நகர்ந்திருந்தது. லிங்கம் இருந்த இடத்தில் ஒரு பெரிய துவாரம் தெரிந்தது. அதற்குள்ளேயிருந்து குண்டோதரன் வெளியே வந்து கொண்டிருந்தான். அப்போது மண்டபத்திற்குள்ளே யார் இருந்தது என்று நினைக்கிறாய்? என் மாமனாரோடு சக்கரவர்த்தியும் நின்று கொண்டிருந்தார்!''

சிவகாமி சற்றுச் சிந்தித்துவிட்டு, ''கமலி அக்கா! எப்படியாவது அந்தச் சுரங்கத்தின் வழியாக எங்களை நீ வெளியே அனுப்பி விட்டால், உனக்குக் கோடி புண்



ணியம் உண்டு. என்றென்றைக்கும் நான் உன் அடிமையாயிருப்பேன்!'' என்றாள்.

''பேச்சைப் பார், பேச்சை! எனக்கு அடிமையாயிருக்கப் போகிறாளாம்! அடி பொல்லாத நீலி! நீ இந்த இராஜ்யத்துக்கே இராணியாகப் போகிறாய்; எனக்கு அடிமையாகி விடுவாயா நீ! வாக்குக் கொடுத்துவிட்டு அப்புறம் திண்டாடாதே!'' என்றாள்.

பிறகு, ''ஆகட்டும், தங்கச்சி கொஞ்சம் பொறுமையாயிரு! அந்த மண்டபத்தின் மத்தியில் ஒரு சிவலிங்கம் இருக்கிறது. அதை இடம் விட்டு நகர்த்தினால் சுரங்க வழி தெரியும். லிங்கத்தை எப்படி இடம் விட்டு நகர்த்துவ தென்பதை இன்றைக்கு அல்லது நாளைக்குள் எப்படியாவது தெரிந்து கொள்கிறேன். ஆனால் நீ இவ்வளவு அவசரப்பட்டு என்ன பிரயோஜனம்? உன் தகப்பனார் உன்னுடன் வருவதற்குச் சம்மதிக்க வேண்டுமே?'' என்று கமலி கவலையுடன் கேட்டாள்.

''என்னைவிட அவர்தான் வெளியே போவதற்கு அதிக அவசரப்படுவார்! அதற்குக் காரணம் இருக்கிறது'' எனறாள் சிவகாமி.

அதே சமயத்தில் வாசற் பக்கமிருந்த ஆயனர் அவர்களின் அண்டையில் வந்து, ''இன்னும் எத்தனை நாளைக்கு இந்தக் கோட்டைக்குள் அடைப்பட்டுக் கிடக்க வேண்டுமோ தெரியவில்லை... சிவகாமி! உனக்குத் தெரியுமா? முன்னொரு நாள் அந்தப் பரஞ்சோதி என்கிற பிள்ளையிடம் நாகநந்தி ஓலையைக் கொடுத்து அனுப்பினாரே, அஜந்தா வர்ண இரகசியத்துக்காக? புலிகேசி மகாராஜாவுக்குத்தான் அந்த ஓலையைக் கொடுத்து அனுப்பி



ளாராம்; அடாடா! வாதாபி மகாராஜா காஞ்சியில் இருக்கும் போதே இதைச் சொல்லியிருந்தால், நான் அந்தச் சளுக்க குலசிரேஷ்டரிடம் கெஞ்சிக் கூத்தாடி அஜந்தா வர்ண இரகசியத்தைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பேனல்லவா?'' என்று புலம்பினார்.

''புலிகேசி மகாராஜாவுக்கு அந்த இரகசியம் தெரிந்திருப்பது என்ன நிச்சயம் அப்பா?'' என்று சிவகாமி குறுக்கிட்டுக் கேட்டாள்.

''கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும், சிவகாமி! புலிகேசியின் இளம் பிராயத்தில் அவர் அஜந்தா மலைக் குகையிலேயே கொஞ்ச காலம் ஒளிந்து கொண்டிருந்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றார் ஆயனர்.

அப்போது கமலியும் சிவகாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டார்கள். ஆயனர் மேற்கண்டவாறு பேசப் பேச அவர்களுக்கு உற்சாகம் அதிகமாகிக் கொண்டிருந்தது.

இருபதாம் அத்தியாயம்
காபாலிகர் குகை

வாதாபிச் சக்கரவர்த்தி புறப்பட்டுச் சென்று மூன்றுநாள் ஆகியும், கோட்டைக் கதவுகள் திறக்கப்படவில்லை.

இதைப் பற்றி நகரில் பல வகை வதந்திகள் உலாவிக் கொண்டிருந்தன. ''ஒப்பந்தப்படி வாதாபிப் படைகள் திரும்பிப் போகவில்லை; மறுபடியும் கோட்டையை நெருங்கி வந்து வளைத்துக் கொண்டிருக்கின்றன!'' என்று சிலர் சொன்னார்கள்.

புலிகேசி வெளியில் போன பிறகு மகேந்திர பல்லவருக்கு ஏதோ ஓலை அனுப்பியிருந்ததாகவும், அதற்கு மறுமொழியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பதாகவும் சிலர் சொன்னார்கள்.

''வாதாபி மகாராஜாவுக்கு மிகவும் வேண்டியவரான யாரோ ஒரு புத்த பிக்ஷுவை மகேந்திர பல்லவர் சிறையில் வைத்திருக்கிறாராம். அவரை உடனே விடுதலை செய்து அனுப்பாவிடில் மீண்டும் யுத்தம் தொடங்குவேன்!'' என்று அந்த ஓலையில் எழுதியிருப்பதாகச் சிலர் சொன்னார்கள்.

''ஆயனரையும் சிவகாமியையும் என்னுடன் அனுப்பி வைக்க வேண்டும். இல்லாவிடில் யுத்தத்துக்கு ஆயத்தமாக வேண்டும்'' என்று எழுதியிருந்ததாக இன்னொரு வதந்தி உலாவியது.

மகேந்திர பல்லவருடைய ஆட்சிக் காலத்தில் காஞ்சி நகரத்து மக்கள் முதன் முதலாக இப்போதுதான் அவருடைய காரியங்களைப் பற்றிக் குறை கூற ஆரம்பித்தார்கள்.

''புலிகேசியைக் காஞ்சிக்குள் வர விட்டதே தவறு!'' என்று சிலர் சொன்னார்கள்.

''அப்படியே நகருக்குள் விட்டாலும் அவனுக்கு என்ன இவ்வளவு உபசாரம்? சத்துரு அரசனிடம் இவ்வளவு தாழ்ந்து போகலாமா?'' என்று சிலர் கேட்டார்கள்.

''அந்த மூர்க்கனுக்கு முன்னால், நமது கலைச்செல்வி சிவகாமியை ஆடச் சொல்லியிருக்க வேண்டியதில்லை; சிவகாமியின் நடனத்தைப் பார்த்து விட்டுத்தான் புலிகேசி தேன் குடித்த நரியாக ஆகிவிட்டான்!'' என்று வேறு சிலர் அபிப்பிராயப்பட்டார்கள்.

அந்த மாதிரியான நகர மாந்தர் பேச்செல்லாம் கமலி மூலமாக வடிகட்டி வந்து ஆயனரின் காதிலேயும் எட்டியது. அதிலெல்லாம் ஒரே ஒரு விஷயந்தான் ஆயனர் மனத்தில் ஆழமாய்ப் பதிந்தது. அதாவது வடக்குக் கோட்டை வாசலுக்குக் கொஞ்ச தூரத்தில் வாதாபிப் படையின் தண்டு இன்னும் இருக்கிறது என்பதுதான்.

''வாதாபி மன்னர் புறப்படுவதற்குள் இந்தக் கோட்டையை விட்டு நாம் வெளியேறி விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அவரை எப்படியும் பார்த்து அஜந்தா வர்ணத்தைப் பற்றிக் கேட்டு விடுவேனே?'' என்று அடிக்கடி ஆயனர் சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு தடவை திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவர் போல், ''நகரிலிருந்து வெளியே போவதற்குச் சுரங்க வழி ஒன்று இருக்க வேண்டும். அது எங்கே இருக்கிறது என்று தெரிந்தால் போய் விடலாம்!'' என்றார்.

இதைக் கேட்ட சிவகாமி கண்களில் மின்வெட்டுடன், ''நிஜந்தானா, அப்பா!

சுரங்க வழி தெரிந்தால் நாம் வெளியே போய் விடலாமா!'' என்று கேட்டாள்.

''போய் விடலாம். நான் கூட அந்தச் சுரங்க வழியில் கொஞ்ச நாள் வேலை செய்திருக்கிறேன். ஆனால் அதற்கு வாசல் எங்கே என்று மட்டும் தெரியாது! அதை எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்று ஆயனர் ஏமாற்றமான குரலில் கூறினார்.

''அப்பா நம் கமலி அக்காவுக்கு அந்தச் சுரங்க வழி தெரியுமாம்!'' என்று சிவகாமி மெல்லிய குரலில் கூறியதும், ஆயனர் பரபரப்புடன் எழுந்து கமலியின் அருகில் வந்து அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு, ''என் கண்ணே குழந்தாய்! உன் தங்கச்சி சொல்வது உண்மைதானா? அப்படியானால் நீ எனக்கு அந்தச் சுரங்க வழியைக் காட்டவேணும். இந்த உதவியை என் ஆயுள் உள்ளவரை மறக்க மாட்டேன்'' என்றார்.

''ஆகட்டும், சித்தப்பா! ஆனால், சமயம் பார்த்துத்தான் உங்களைச் சுரங்க வழிக்கு அழைத்துப் போக வேண்டும். அங்கே பலமான காவல் இருக்கிறது!'' என்றாள் கமலி.

மூன்று தினங்களாக அசுவபாலர் அநேகமாக யோக மண்டபத்திலேயே காலங் கழித்து வந்தார். மண்டபத்திலிருந்து அடிக்கடி மணிச் சப்தமும் கலகலத் தொனியும் பேச்சுக் குரலும் கேட்டுக் கொண்டிருந்தன.

நாலாம் நாள் இரவு ஜாமத்தில் ஆயனர் தூக்கம் பிடிக்காமல் பலகணியின் வழியாக அரண்மனைத் தோட்டத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த போது, நிலா வெளிச்சத்தில் ஓர் அதிசயமான காட்சியைக் கண்டார். தோட்டத்தின் வழியாக நல்ல ஆஜானுபாகுவான ஆகிருதி உடைய ஒருவரை இரண்டு புறத்திலும் இரண்டு பேர் கையைப் பிடித்து நடத்திக் கொண்டு வந்தார்கள். நடுவில் இருந்தவரின் கண்கள் துணியினால் கட்டப்பட்டிருந்ததாகக் காணப்பட்டது.

இன்னும் சிறிது உற்றுப் பார்த்த போது, நடுவில் நடந்து கொண்டிருந்த ஆஜானுபாகுவான உருவம் ஒரு புத்த பிக்ஷுவின் வடிவமாகக் காணப்பட்டது. அந்த உருவம் ஆயனருக்கு நாகநந்தியை நினைவூட்டியது. ஒருவேளை நாகநந்தி தானோ அவர்? ஊர் வதந்தியின்படி இந்தப் புத்த பிக்ஷுவுக்காகத்தான் புலிகேசி இத்தனை நாள் காத்துக்கொண்டிருந்தாரோ? நாகநந்தியை அதற்காகத்தான் சுரங்க வழியாக அனுப்புகிறார்களோ? அப்படியானால் நாகநந்தி போய்ச் சேர்ந்ததும் புலிகேசி புறப்பட்டு விடுவாரல்லவா? - ஆஹா! எப்பேர்ப்பட்ட அருமையான சந்தர்ப்பம் கை நழுவிப் போய்க் கொண்டிருக்கிறது.

நாகநந்திக்கும் புலிகேசிக்கும் உள்ள உருவ ஒற்றுமை ஆயனருடைய மனத்திலும் அப்போது தென்பட்டது. நாகநந்தியடிகள் உண்மையில் யாராயிருக்கலாம்?.... இவ்விதம் பற்பல எண்ணங்களினால் அலைப்புண்ட ஆயனர் அன்றிரவு தூங்கவே இல்லை.

பொழுது புலரும் சமயத்தில் யோக மண்டபத்திலிருந்து வீட்டுக்கு வந்த அசுவபாலர் ஆயனரைப் பார்த்தார். ''என்ன சிற்பியாரே! இரவெல்லாம் நீர் தூங்கவில்லை போலிருக்கிறது!'' என்றார். ''ஆம் ஐயா! தோட்டத்தில் உங்களுடைய யோக மண்டபத்தில் இரவெல்லாம் ஒரே கலகலப்பாயிருந்ததே! என்ன விசேஷம்?'' என்று ஆயனர் கேட்டார்.

அசுவபாலர், ''கலகலப்பாவது, ஒன்றாவது? ஒருவேளை நீங்கள் கனவு கண்டிருப்பீர்கள்'' என்று சொல்லிவிட்டு, ''நண்பரே, ஆனால் ஒன்று உண்மை. நேற்றிரவு யோக சாதனத்தில் நான் ஓர் அபூர்வமான அனுபவத்தை அடைந்தேன். அதை உடனே போய்ச் சக்கரவர்த்தியிடம் சொல்லிவிட்டு வரவேண்டும்!'' என்று கூறி விரைந்து வெளியே சென்றார்.


அவர் போய்ச் சில நிமிஷத்துக்கெல்லாம் கமலி வந்து ஆயனர், சிவகாமி இருவரையும் அவசரப்படுத்தினாள். ஏற்கெனவே முடிவு செய்திருந்தபடி முக்கியமான துணிமணிகளை ஒரு ஓலைப் பெட்டியில் எடுத்து வைத்துக் கொண்டு, எந்த நிமிஷமும் கிளம்புவதற்கு அவர்கள் சித்தமாக

மனைவி : சரியான அழுக்கறாங் கிழங்குன்னா நம்ம பெண்ணைப் பார்க்க வந்த பிள்ளை வீட்டுக்காரங்கதான்!

கணவன் : எப்படிச் சொல்றே?

மனைவி : டிபன் எப்படி இருந்ததுன்னு கேட்டதுக்கே ஊருக்குப் போய் லெட்டர் போடறோம்னு சொல்றாங்களே!

- வி. கி. குமார்





''அண்ணே! நான் எந்தக் கோஷ்டியிலிருக்கிறேன்னே எனக்குக் குழப்ப மாயிருக்கு!''

''ஆரம்பத்துல இதெல்லாம் சகஜம். போகப் போகத்தான் நாம எந்தக் கட்சியிலிருக்கிறோம்ங்கற மாதிரியெல் லாம் குழப்பம் வரும்!''

- ஞா. ஞானமுத்து

இருந்தார்கள். எனவே, உடனே மூவரும் கிளம்பி அரண்மனைத் தோட்டத்திலிருந்த மண்டபத்துக்குள் சென்றார்கள். மண்டபத்தின் மத்தியில் இருந்த சிவலிங்கத்தைக் கமலி லாகவமாக அப்புறம் நகர்த்தினாள். லிங்கம் இருந்த இடத்தில் சுரங்க வழியின் படிக்கட்டுக் காணப்பட்டது.

கமலி ஆயத்தமாக வைத்திருந்த தீபத்தை எடுத்து ஆயனரிடம் கொடுத்து, ''சித்தப்பா, சீக்கிரம்!'' என்றாள். ஆயனர் தீபத்தை வாங்கிக் கொண்டு சுரங்க வழியின் படிக்கட்டில் இறங்கினார்.

சிவகாமி கமலியை ஆர்வத்துடன் கட்டிக் கொண்டாள். இருவருடைய கண்களிலும் கண்ணீர் ததும்பிற்று.

''அக்கா! போய்வருகிறேன்!'' என்று தழுதழுத்த குரலில் கூறினாள் சிவகாமி.

''தங்கச்சி! போய்வா! மறுபடி காஞ்சிக்குத் திரும்பி வரும் போது பல்லவ குமாரரின் பட்ட மகிஷியாகத் திரும்பி வர வேண்டும்!'' என்று கமலி ஆசி கூறினாள்.

''அக்கா! நான் திரும்பி வரும்வரை எனக்காகச் சின்னக் கண்ணனுக்குத் தினமும் ஆயிரம் முத்தம் கொடு!'' என்றாள் சிவகாமி.

கமலி சிரித்துக் கொண்டே, ''அவன் மூச்சு முட்டிச் சாக வேண்டியதுதான்!'' என்றாள்.

சிவகாமி சுரங்கப் படியில் இறங்கிய போது அவளுடைய உள்ளம் பதை பதைத்தது. மார்பு படபட என்று அடித்துக் கொண்டது. ஒளி நிறைந்த குதூகலமான உலகத்திலிருந்து இருளும் ஐயமும் பயங்கரமும் நிறைந்த ஏதோ பாதாள உலகத்துக்குப் போவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

அந்த உணர்ச்சியை மனோதிடத்தினால் போக்கிக் கொண்டு ஆயனரின் பின்னால் நடந்தாள்.

இருளடர்ந்த சுரங்கப் பாதையில் ஆயனரும் சிவகாமியும் ஏறக்குறைய ஒரு முகூர்த்த நேரம் நடந்தார்கள். இவ்வளவு நேரமும் அவர்களுக்குள் அதிகமான பேச்சு ஒன்றும் நடை பெறவில்லை.

அடிக்கடி ஆயனர் நின்று சிவகாமியின் கையைப் பிடித்து ''இனி அதிக தூரம் இராது, அம்மா! சீக்கிரம் வழி முடிந்து விடும்!'' என்று தைரியப்படுத்திக் கொண்டு போனார்.

ஒரு முகூர்த்த நேரத்துக்குப் பிறகு, திடீரென்று வெப்பம் மாறி ஜில்லிப்பு உணர்ச்சி ஏற்பட்டது.

''அம்மா, சிவகாமி! கோட்டைக்கு வெளியே வந்து விட்டோம், அகழியைக் கடக்கிறோம்!'' என்றார். ஒரு கணம் அங்கே நின்று, ''குழந்தாய்! இங்கேதான் நான் வேலை செய்ததாக ஞாபகம் இருக்கிறது. அகழித் தண்ணீர் உள்ளே வராமல் வெகு சாதுரியமாக இங்கே வேலை செய்ய வேண்டியிருந்தது. அதோடு இல்லை. ஏதாவது ஆபத்துக் காலங்களில் இந்தச் சுரங்க வழியை மூடிவிடவும் இங்கேதான் உபாயம் இருக்கிறது. அதோ, பார்த்தாயா? அந்த அடையாளமிட்ட இடத்தில் ஒரு கல்லை இலேசாகப் பெயர்த்தால், அகழி ஜலம் கடகடவென்று உள்ளே புகுந்து விடும். அப்புறம் வெளியிலிருந்தும் உள்ளே போக முடியாது. உள்ளேயிருந்தும் வெளியே போக முடியாது!'' என்றார்.

''நல்ல வேளை! அப்படி ஏதாவது ஏற்படுவதற்கு முன்னால் நாம் வெளியே போய்விடுவோமல்லவா?'' என்றாள் சிவகாமி.

அதற்குப் பிறகு இன்னும் ஒரு முகூர்த்த நேரம் வழி நடந்த பிறகு, மேலேயிருந்து வெளிச்சம் வருவதைக் கண்டார்கள்.

''ஆ! சுரங்க வழி முடிந்துவிட்டது!'' என்றார் ஆயனர்.

இருவரும் படிகள் வழியாக மேலே ஒளிவந்த இடத்தை நோக்கி ஏறிச் சென்றார்கள்.

அவர்கள் ஏறி வந்து நின்ற இடம் ஒரு சின்ன மலைப்பாறையில் குடைந்து அமைக்கப்பட்ட சமணர்களின் குகைக்

கோயில். ஜைன தீர்த்தங்கரர்களின் பெரிய பிரதிமைகள் மூன்று அங்கே காணப் பட்டன. ஆனால் என்ன பயங்கரம்? காபா லிகர்கள் அந்தச் சமணக் குகையை ஆக்கிர மித்து விட்டதாகத் தோன்றியது. எங்கே பார்த்தாலும் மண்டை ஓடுகள் சிதறிக் கிடந்தன.

போதாததற்கு, மூன்று தீர்த்தங்கரர் களின் சிலைகளுக்கு அப்பால் நாலாவது சிலையாகக் கண்ணை மூடிக்கொண்டு ஒரு காபாலிகன் உட்கார்ந்திருந்தான். உடம் பெல்லாம் சாம்பலைப் பூசிக்கொண்டு மண்டை ஓட்டு மாலை அணிந்திருந்த அவ னுடைய தோற்றம் பார்ப்பதற்கு மிகக் கோரமாயிருந்தது.

ஆனால், நல்ல வேளையாக அவன் கண்களை இறுக மூடிக் கொண்டு யோக நிஷ்டையில் உட்கார்ந்திருந்தான்.

ஆயனரும், சிவகாமியும் இரண்டாவது தடவை அவனைப் பார்க்காமல் பாறை யின் படிகள் வழியாக இறங்கி விரைந்து சென்றார்கள்.

கொஞ்ச தூரம் சென்ற பிறகு, ''அப்பா! இதென்ன? சமணர் குகைக் கோவிலில் காபாலிகன் வந்து உட்கார்ந்திருக்கி றானே?'' என்று சிவகாமி கேட்டாள்.

''அம்மா! இந்தப் பாறை ஒரு காலத்தில் சமணப் பள்ளியாக இருந்தது. மகேந்திர பல்லவரிடம் கோபித்துக் கொண்டு சமணர்கள் இந்த நாட்டை விட் டுப் போய்விட்டார்களல்லவா? கோட்டை முற்றுகைக்கு முன்னால் காஞ்சி நகரிலுள்ள காபாலிகர்களையெல்லாம் வெளியில் துரத் தியபோது இந்தக் குகையை அவர்கள் பிடித்துக் கொண்டார்கள் போலிருக்கிறது! அவர்களுக்கு யுத்தம் என்றால் கொண் டாட்டந்தானே! கபாலங்கள் ஏராளமாய்க் கிடைக்குமல்லவா?''

இப்படிப் பேசிக்கொண்டு ஆயனரும், சிவகாமியும் காட்டுப் பிரதேசத்தின் வழியே நடந்து போனார்கள். கொஞ்ச தூரம் போவதற்குள்ளே, அவர்களுக்கு எதிர்ப்புறத்திலிருந்து பலர் கும்பலாக வரும் பெரு முழக்கம் கேட்டது. சில நிமி ஷத்துக்கெல்லாம், ஒரு பெருங் கும்பல் அவர்கள் கண் முன்னால் எதிர்ப்பட்டது. அப்படி வந்தவர்கள் வாதாபிப் படையைச் சேர்ந்த வீரர்கள்தான்! அவர்களுக்கு மத்தி யில் தூக்கிப் பிடிக்கப்பட்டிருந்த வராகக் கொடியிலிருந்து இது தெளிவாகத் தெரிந் தது!

(தொடரும்)

அருள்வாக்கு



'ராமன்' என்றாலே ஆனந்தமாக இருப்பவன் என்று அர்த்தம்; மற்றவர் களுக்கு ஆனந்தத்தைத் தருகிறவன் என்று அர்த்தம். எத்தனை விதமான துக்கங்கள் வந்தாலும், அதனால் மனம் சலனம் அடையாமல் ஆனந்தமாக தர்மத்தையே அநுசரித்துக் கொண்டு ஒருத்தன் இருந் தான் என்றால் அது ஸ்ரீ ராமன்தான். வெளிப் பார்வைக்கு அவன் துக்கப்பட்ட தாகத் தெரிந்தாலும், உள்ளுக்குள்ளே ஆனந்த மாகவே இருந்தான்.

சுக துக்கங்களில் சலனமடையாமல், தான் ஆனந்தமாக இருந்து கொண்டு, மற்றவர்களுக்கும் ஆனந்தத்தை ஊட்டு வதுதான் யோகம். அப்படியிருப்பவனே யோகி. இவ்வாறு மனசு அலையாமல் கட்டிப் போடுவதற்குச் சாமானிய மனிதர் களுக்கான வழி, வேத சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற தர்மங்களை ஒழுக்கத் தோடு, கட்டுப்பாட்டோடு பின்பற்றி வாழ் வதுதான். சொந்த விருப்பு வெறுப்புக்கு இலக்காகாமல் வேதம் விதிக்கிற தர்மப் படி வாழ ஆரம்பித்து விட்டால், தானா கவே மனசின் சஞ்சலம் குறைந்து, அது தெளிய ஆரம்பிக்கும். இந்தத் தெளிவால் மனசு எப்போதும் ஆனந்தமாக இலேசாக இருக்கும். இந்த சித்த சுத்தி மோக்ஷத்தி லேயே கொண்டு சேர்த்து விடும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச் சார்ய சுவாமிகள்.

அருமைநாதனும் எருமை மாடும்

பொன் விழா நாடகப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான நாடகம்

காட்சி - 1

பாத்திரங்கள் : அருமைநாதன், அவருடைய மனைவி பங்கஜம், பால்காரன்.

இடம் : அருமைநாதன் வீடு

பால்காரன் : பால்.... பால்... பால்..

பங்கஜம் : (அடுப்பங்கரையிலிருந்து) என்னங்க... பால்காரன் வந்துட்டான்... போய் வாங்குங்க...

அருமைநாதன் : ம்க்கும்.... (படித்துக் கொண்டிருந்த அன்றைய தினசரியை மடித்து வைத்து விட்டு, உள்ளே சென்று பால் செம்பை எடுத்துக் கொண்டு வெளியே வருகிறார். அதற்குள் பால்காரன் மறுபடியும் கத்துகிறான்) ஏம்பா இப்படிக் கத்துறே... அதான் வர்றேன்ல...

பால் : இப்படிக் கத்தும் போதேதான் நீ அரை மணி நேரம் கழிச்சு வர்றியே... சரி சரி... சொம்பைக் கொண்டா...

அருமை : என்னப்பா.. மரியாதையெல்லாம் கொறைஞ்சிப் போச்சி... திமிரா?

பால் : தோ பாருய்யா... திமிருதிமிருன்னு பேசினே எனக்குக் கெட்ட கோவம் வரும்.. நேத்தி வரைக்கும்தான் நீ ஆபீஸரு... இன்னியோட ரிட்டயராயிட்டே.... இனிமே மரியாதி கிரியாதியெல்லாம் கேட்டு வாங்கப்படாது... (பால் செம்பை நீட்டி) இந்தா... புடி...

அருமை : நீ ஊத்தற தண்ணிப் பாலுக்கு உனக்கு இந்தக் கொழுப்பா...

பால் : (சைக்கிளை வேகமாக ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டு அவரை நோக்கிக் கோபமாக வருகிறான்) யோவ்... இப்ப இன்னான்றே நீ... தண்ணிப் பாலு கிண்ணிப் பாலுன்னு சொன்னே...! கொடலை உருவிப்பிடுவேன் உருவி!

அருமை : அட சரித்தான் போடா... இன்னியோட கணக்குத் தீத்துக்க... நாளையிலிருந்து உன் பால் வேணாம்... நான் வேற பால்காரன்கிட்ட வாங்கிக்கிறேன்...

பால் : எந்தப் பால்காரன்யா என் தெருவுக்குள்ள நொழைஞ்சிப் பால் ஊத்தறவன்... யோவ்... எங்க சங்கத்துல தீர்மானம் போட்டு ஆளுக்கு ஒரு தெருவா பிரிச்சிக்கிட்டோம்... என்னைத் தவிர எவனும் இந்தத் தெருவுக்குள்ள நொழைஞ்சு பால் ஊத்த மாட்டான்...

அருமை : பால்காரன் வரலன்னா நாங்க என்னய்யா செத்தா போயிடுவோம்... ஒரு எருமை மாட்டையே வாங்கிடுவேன்யா...

பால் : அப்படிச் செய்... அப்பத்தான் நீ மனுஷன்.. நாளையிலிருந்து உனக்குப் பால் கெடையாது... எருமை மாட்டை வாங்கி மேய்ச்சி, குளிப்பாட்டி, தீனி போட்டு, சாணி வாரி நீயே சுயமா பால் கறந்துக்க... நீதான் ரிட்டயராயிட்டியே... இனிமே உனக்கு இன்னா வேலை... நல்லா மாடு மேய்க்கலாம்... ஒரு எருமையையே உன்னால சமாளிக்க முடியலை... இன்னொரு எருமை வாங்கி என்ன பண்ணப் போறே... பார்க்கிறேன்... (அருமைநாதனும் காச்சு மூச்சென்று கத்தி விட்டு உள்ளே வந்து அமருகிறார்)

அருமை (தமக்குத் தாமே) : அந்த அயோக்கியப் பய என்ன சொல்லிட்டுப் போகிறான்...? ஒரு எருமையையே என்னால சமாளிக்க முடியலைன்னுட்டுப் போறானே... நம்மகிட்ட ஏது எருமை? (அப்போது 'புஸ் புஸ்' -என்று மூச்சு விட்டவாறு தனது கறுத்த சரீரத்தைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு பங்கஜம் வருவதைப் பார்த்து...) அடப்பாவி...! இவளைத்தான் எருமை மாடுன்னுட்டுப் போறான்...

காட்சி - 2

பாத்திரங்கள் : அருமைநாதன், பங்கஜம்.

இடம் : அருமைநாதன் வீடு

பங்கஜம் : என்னங்க... ரெண்டு நாளா ஓட்டல் காப்பியைக் குடிச்சி குடிச்சி நாக்கு செத்தே போயிட்டுதுங்க...

ஷாஜி கிருஷ்ணா

பாலுக்கு ஏதாவது ஏற்பாடு பண்ணுங்க...

அருமை : என்னை என்ன பண்ணச் சொல்றே பங்கஜம்... அவனைத் தவிர ஒரு பால்காரனும் நம்ம தெருவுக்கு வர மாட்டான்... அவன் கிட்டேயும் இனிமே போக முடியாது.. பேசாம ஒரு எருமை மாடு வாங்கி நாம்பளே கறந்துக்க வேண்டியதுதான்... அதுவரைக்கும் பால் பவுடர் டின் ஏதாவது வாங்கிக்கலாம்...

பங் : என்னது? எருமை மாடு வாங்கப் போறீங்களா?

அருமை : ஆமாம்... அதைத் தவிர வேற வழியில்ல... ஒரு மாட்டுத் தரகனை நாளைக்கு வரச் சொல்லியிருக்கேன்... நல்லதா ஒரு மாடு வாங்கிடுவோம்...

பங் : மாட்டை கீட்டையெல்லாம் என்னால பார்த்துக்க முடியாது...

அருமை : ம்... நானே கவனிச்சிக்கிறேன்... (பால்காரன் சொல்லி விட்டுப் போனது நினைவு வர, பங்கஜத்தை ஒரு மாதிரியாகப் பார்த்து) எனக்குத்தான் ஏற்கெனவே அனுபவமிருக்கே...

(உள்ளூரில் நல்ல மாடு இல்லை என்று அருமைநாதனைக் கும்ப கோணத்துக்கு அழைத்துச் செல்கிறான் தரகன். ஐந்நூறு ரூபாய் பெறும் அடி மாட்டை, சினை மாடு என்று சொல்லி ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு விலை பேசி, அவர் தலையில் கட்டி விட்டு, மாட்டுக்காரனிடம் கணிசமாகவும் இவரிடம் நியாயமாகவும் கமிஷன் பெற்றுக் கொண்டு, மாட்டையும் அவரையும் அப்படியே அனாதரவாய்க் கும்ப கோணத்திலேயே விட்டு விட்டுச் சென்று விடுகிறான் தரகன். இவர் மாட்டைக் கட்டி இழுத்து (!)க் கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்து ஒரு மினி வேனைப் பேசி தன் வீட்டில் கொண்டு வந்து இறக்குகிறார்)

காட்சி - 3

பாத் : அருமைநாதன், பங்கஜம்.

பங் : மாடு என்ன வெலைங்க ஆச்சி?

அருமை : ஸ்ஸ்...அப்பாடா... போய்க் காப்பி கொண்டு வா. எல்லாம் விவரமாய்ச் சொல்றேன்... (ஒரு தாளையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு உட்காருகிறார். கீழ்க்கண்டவாறு கணக்கெழுதுகிறார்) மாடு ரூ 1500; தரகு ரூ 200; வேன் ரூ 550; செக்போஸ்ட் ரூ 100; இதர .



செலவு ரூ 100 - ஆக மொத்தம் ரூ 2450- ஹா... இவ்வளவு ரூபா ஆச்சா?

பங் : இந்தாங்க காப்பி...

அருமை : (உத்திரத்தைப் பார்த்தபடியே சிறிது நேரம் உட்கார்ந்திருக்கிறார். பின்னர் காப்பியை வாங்கி அருந்தி விட்டு, ஈனசுரத்தில்) மாடு செனை மாடாம்... இன்னும் ரெண்டொரு நாள்ல கன்னு போட்டுடுமாம்... வேளைக்கு மூணு லிட்டர் கறக்கு மாம்...

பங் : வெலை எவ்வளவுங்க?

அருமை : எவ்வளவு பெறும்? நீதான் சொல்லேன்...

பங் : பக்கத்து வீட்டு மாமா சொல்றார் - இது ஐந்நூறோ, அறுநூறோதான் பெறுமாம்...

அருமை : (சுதாரித்துக் கொண்டு) அவ்வளவுதான் ஆச்சு... சரி சரி... நான் கடைத் தெருவிற்குப் போய் தீவனம் வாங்கிட்டு வர்றேன்... அப்படியே வைக்கலுக்கும் ஏற்பாடு பண்ணிட்டு வர்றேன்... சட்டையை எடு...

காட்சி - 4

பாத் : அருமைநாதன், கால்நடை மருத்துவர், பங்கஜம்.

அருமை : நேத்தியிலிருந்து இது எதுவும் தீனியே எடுத்துக்கல்ல டாக்டர்... தீவனம், வைக்கோல், கழனித் தண்ணி ஒண்ணுத்தையுமே தொடலை...
(டாக்டர் மாட்டைப் பரிசோதிக்கிறார்)

டாக் : மாட்டுக்கு ஒண்ணுமில்ல... ஆறு மாசம் செனை... கொஞ்சம் வயசான மாடு.. இந்த ஈத்து நாலு அல்லது அஞ்சாக இருக்கும்... பாலும் அவ்வளவா கறக்காது... யாராவது வெலைக்குக் கேட்டாத் தள்ளிடுங்க... இப்போ இஞ்செக்ஷன் போட்டுட்டுப் போறேன்... அப்புறம் தீனி எடுத்துக்கும்...
(டாக்டர் ஃபீஸை வாங்கிக் கொண்டு செல்கிறார். பங்கஜம் உள்ளேயிருந்து வருகிறாள்)

பங் : டாக்டர் என்னங்க சொல்லிட்டுப் போறார்?

அருமை : இன்னும் ரெண்டொரு நாள்ல கன்னு போட்டுடுமாம்... (அந்தத் தரகனை நினைத்துப் பல்லை நறநற வென்று கடிக்கிறார்)

பங் : என்னங்க... என்னங்க... மாடு பல்லைக் கடிக்கும் சப்தம் கேட்குதுங்க... கொஞ்சம் எட்டக்கவே நில்லுங்க...

அருமை : (ஆத்திரம் தலைக்கேறி) போடீ உள்ளாற...

காட்சி -5

பாத் : அருமைநாதன், பங்கஜம்.

(மூன்று நாட்களாக மாடு தீனி எதுவுமே தின்னவில்லை. 'இப்படியே பட்டினியாகக் கிடந்து செத்துப் போய் விடுமோ' என்ற கவலை வந்து விடுகிறது அருமை நாதனுக்கு)

அருமை : (கடவுளிடம் வேண்டுகிறார்) அங்காளம்மா... என் குல தெய்வமே... ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறே... மாட்டை நல்லபடியாக்கும்மா... நான் இந்த மாட்டையும் கூட்டிக் கொண்டு கால்நடையாகவே உன் கோவிலுக்கு வந்து அர்ச்சனை செய்யறேம்மா...

பங் : (கொல்லையிலிருந்து கத்துகிறாள்) என்னங்க... என்னங்க... கோமணா கயித்தை அறுத்துக்கிட்டுச் சந்து வழியா வெளியே ஓடுதுங்க... பிடிங்க... பிடிங்க...
(அருமைநாதன் பரபரப்படைந்தவ ராய், வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வெளியே ஓடுகிறார். அங்கே மாடு, தன் வீட்டுக் காம்பவுண்டு சுவரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டரை நாக்கால் தடவித் தடவிக் கிழித்து ஆனந்த மாய்த் தின்று கொண்டிருப்பதைப் பார்க்கிறார்)

அருமை : ஓஹோ... இதுதான் உன் ஆகாரமா? சரியான முனிஸிபாலிட்டி மாடு.. தலைவிதி... (அன்றிலிருந்து காலை நான்கு மணிக்கே எழுந்து தெருத் தெருவாய்ச் சுற்றி, சுவரில் ஒட்டப்பட்டிருக்கும் போஸ்டர்களை யாருக்கும் தெரியாமல் கிழித்து வந்து மாட்டுக்குக் கொடுக்கலானார்)

காட்சி - 6

பாத் : அருமைநாதன், பங்கஜம்.

(அருமைநாதன் வழக்கம் போல காலை நான்கு மணிவாக்கில் ஒரு சுவரில் புதியதாய் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டியைக் கிழிக்கும் போது எங்கிருந்தோ ஒருவன் ஓடி வந்து அவரைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொள்கிறான்)

அருமை : விடுய்யா கையை...

அந்த ஆள் : திருட்டு ராஸ்கல்...... தெனமும் நீதான் போஸ்டரைத் திருடுறதா...? ஆளப் பார்த்தா பெரிய மனுசனாட்டம் இருக்கிற... ஏன்யா உனக்கு இந்தப் புத்தி? அதுவும் எங்கக் கட்சி போஸ்டராப் பார்த்துத் திருடிஇறு

SRI RAGHAVENDRA.

போறியே... உன்னை யாரு அப்படிச் செய்யச் சொன்னது? எங்க தலைவரு கும்மாங்குத்து குமரு ரொம்ப கோவமாயிருக்காரு... வாய்யாஅவருகிட்ட.... கையும் களவுமாய்ப் பிடிக்கத்தானே ராத்திரி முழுக்கத் தூங்காம இங்க வந்து உட்காந்துட்டேன்... நடய்யா...

அருமை : ஐயா... நான் எனக்காக இதையெல்லாம் கிழிக்கலய்யா... கோமளாவுக்காகத்தான் இதைக் கிழிச்சிட்டுப் போறேன்... இதைத் தவிர வேறெதையும் கோமளா சாப்பிடாதய்யா...

அந்த ஆள் : அது யாருய்யா அது கோமளா...? என்னய்யா உளர்றே...! அந்தக் கடப்பாறை வேட்பாளருதானே உன்னை எங்கக் கட்சி போஸ்டரைக் கிழிக்கச் சொன்னது?

அருமை : (விவகாரம் வேறு மாதிரியாகத் திரும்புவதைக் கண்டு பயந்தவராய், கையிலிருந்த அரை பவுன் மோதிரத்தைக் கழற்றி அவனிடம் கொடுத்து) நான் செஞ்சது தப்புத்தான்... இனிமே இப்படிச் செய்ய மாட்டேன்.. இதை விவகாரமா ஆக்காம தயவுசெஞ்சி என்னை விட்டுட்டுப் போயிடு.... ப்ளீஸ் (கெஞ்சுகிறார்)

(இவரை ஒரு மாதிரியாகப் பார்த்தபடியே அந்த ஆள் அரை பவுன் மோதிரத்துடன் நகருகிறான்)

காட்சி - 7

பாத் : அருமைநாதன், கோமளா, அவளது கணவன்.

(இரண்டு நாள் கழிகிறது. போஸ்டர் இல்லாமல் மாடு மறுபடியும் பட்டினி கிடந்து அன்று காலை கயிற்றை அறுத்துக் கொண்டு எங்கோ ஓடி விடுகிறது. அருமைநாதன் ஊரெல்லாம் தேடுகிறார். 'உங்க மாட்டை அடுத்தத் தெரு கடைசி வீட்டுக் கொல்லையில் பார்த்தேன்' என்று ஒருவர் சொல்ல இவர் அங்கு ஓடுகிறார். அந்த வீட்டின் கொல்லையில்... அந்தி மயங்கி இருட்டும் நேரம். கரிய உருவமான கோமளா இருக்கிறதா இல்லையா என்பதே தெரியவில்லை. ஏதோ நைப்பாசையில் அதன் பேரைச் சொல்லிக் கூப்பிடுகிறார்)

அருமை : கோமளா..... கோமளா..... கோமளா...

அந்த வீட்டுக்காரம்மாள் : (வெளியே வந்து) யாரது?

அருமை : (அந்த அம்மாளை நோக்கி வந்தபடி) கோமளா... என் கோமளா...

வீட்டு : என்னது? (அதிர்ச்சியுற்று நகர்ந்து கொள்கிறாள்) என்னங்க...! வெளியே வாங்களேன்...! யாரோ ஒருத்தன் என் பேரைச் சொல்லிக்கிட்டு நம்ம வீட்டுக் கொல்லையில் நிக்கிறான்...! சீக்கிரம் வாங்க...

வீட்டுக்காரியின் கணவன் : (அவசரமாக வெளியே வந்து அவருடைய சட்டையைப் பிடித்து) யாருடா நீ?

அருமை : (உளறியபடி) என் கோமளா... எருமை மாடு...

கோமளா : பாத்திங்களா... பாத்திங்களா.... என்னை எருமை மாடுங்கறான்.. பாத்துக் கிட்டுச் சும்மா நிக்கிறீங்களே... நாலு சாத்து சாத்துங்க...!

(கோமளாவின் கணவன் அவரைத் தாறுமாறாக அடித்துக் கீழே தள்ளுகிறான். அருமைநாதன் மயக்கமாகிறார்)

காட்சி - 8

பாத் : அருமைநாதன், பங்கஜம்.

(அருமைநாதன் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் கட்டுப் போட்டுக் கொண்டு கட்டிலில் கிடக்கிறார்)

பங் : என்னங்க... நம்ம மாடு நாலு நாளா எங்கெங்கோ சுத்திட்டு, இப்போ சாதுவா வந்து நம்ம வீட்டுக் கொல்லையில நிக்குதுங்க...

அருமை : (அதிர்ச்சியுற்று எழ முயற்சி செய்கிறார். முடியாமல் மீண்டும் படுத்துக் கொள்கிறார்) சனியன்... வந்துட்டுதா.. போய்த் தொலைஞ்சிட்டுதுன்னுல்ல நெனச்சேன்.. மொதல்ல யாரையாவது கூப்பிட்டு அதை இனாமா ஓட்டிகிட்டுப் போகச் சொல்லு... அது முகத்துல இனி நான் முழிக்க மாட்டேன்... முழிக்கவே மாட்டேன்...

(இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக் கொள்கிறார்)



"கடைசியா வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க ஒரு வழி கண்டு பிடிச்சுட்டோம்!"

"பலே! என்னது?"

"இளைஞர்களுக்கு இலவச முகமூடியும், கத்தியும் குடுக்கலாம்னு இருக்கோம்!"

- வேதபுரி எஸ். ரமேஷ்



பொன்
விழா
கவிதைப்
போட்டி -
இரண்டாம்
பரிசு
பெறும்
புதுக்
கவிதை

நன்னீ நாடு கடத்தல்



இன்று எனது திருமணம்
வேருடன் பிடுங்கப்பட்டு
இன்று முதல்
வேறு நிலத்தில்
நடப்படுகிறேன்.

காற்று, வானம், பூமி
எல்லாம் புதிது
தட்ப வெப்பமோ
தலைகீழ்.

மீண்டும் மண்ணுக்குள்
வேர் இறக்கி நிலைப்பதற்கு
எத்தனை அவஸ்தைகளோ?

பிருந்தா சாரதி

நாற்றங்காலில் இருந்து
விளைநிலத்தில் நடுவது
அவசியம் என்று
சொல்கிறார்கள்.

இன்று என் வேர்கள்
நான்கு திசைகளிலும்
ஊடுருவிப் பரவி உள்ளன.

எவ்வளவோ பாறைகளைத்
தகர்த்து முன்னேறி
நீர்ச்சுனைகளின்
திசைகளை அறிந்தேன்.

திடீரென இப்போது
இந்த இடமாற்றம்.
ஏறக்குறைய இது
ஒரு நாடுகடத்தல்.

என் வேர்களின் போராட்டம்
தொடர்கிறது...
மறுபடியும் பாறைகள்...
விஷப்பூச்சிகள்...
புயற்காற்றுகள்...
இருளைக் குடைந்து
மீண்டும் சுனைகளை
அடைவேன்.

பூக்களை நீங்கள்
பறித்துக் கொள்வீர்கள்!

16

கம்ப்யூட்டர் கிராமம்



ஷண்பேகர் நிச்சயம் ராத்திரி மனோஜைப் பார்க்க வருவான் என்று எதிர்பார்த்தே போலீஸ் மறைந்திருந்து காத்திருந்தார்கள். எஸ். பி. வந்து சப்தம் போட்டு விட்டுப் போனார். ஏதோ மனோஜ் ஷண்பேகர் மறைந்திருப்பதற்கு உடந்தையாக இருக்கிற மாதிரி ''உங்க நண்பர் கிட்டே வந்தா சொல்லுங்க. இதனால அவர் மேல சந்தேகம்தான் அதிகமாகுதுன்னு. பேசாம ஸரண்டர் பண்றது நல்லது. குற்றம் செய்யலைன்னா எதுக்குப்பா ஓடி ஒளியற?''

இன்ஸ்பெக்டர் ஷண்முகம், ''அதானே!'' என்றார்.

''ஸார் எனக்கு எதுவும் தெரியாது.''

''உங்ககிட்ட என்ன சொன்னாரு அந்த ஆளு?''

''அந்தப் பொண்ணு செல்வியைக் கூட்டிப் போனதை முதல்ல சொல்லாததற்குத் தன் மேல சந்தேகம் வந்துருமோன்னு பயம்தான் காரணம்னு சொன்னான்.''

''அதை நீங்க நம்பினீங்களா!''

''அவனுக்கு அந்தப் பெண்ணைக் கொல்ல எந்தவிதக் காரணமும் இல்லையே இன்ஸ்பெக்டர்.''

''காரணம் இதுவரைக்கும் இல்லை. விசாரிச்சா காரணம் வெளிய வரும்!'' நீங்க எங்கேயும் ஊரை விட்டுப் போகலை தானே? இல்லை நீங்களும் சைக்கிளை எடுத்திக்கிட்டு...''

''எனக்கு எதும் பிரச்னை இல்லை'' என்றான்.

சைட்டுக்குப் போன போது பகல் வேளையிலேயே மரத்தைப் பார்க்கப் பயமாக இருந்தது. முனீஸ்வரன் மற்றொரு காவு வாங்கி விட்டதாகத்தான் பேசிக் கொண்டார்கள். 'காஷுவல் கூலி ஆட்கள் யாரும் வரவில்லை. நடேச பண்டிதருக்கு இன்னும் பாடி கிடைக்கவில்லை. செருப்பாக்கம் ஆஸ்பத்திரிக்கு அலையாய் அலைகிறார் என்றும் இன்ஸ்பெக்டர் ஷண்முகம் தான் உதவி செய்யப் போவதாகவும் பேசிக் கொண்டார்கள். பம்பாய்க்குத் தொடர்பு கொண்டதில் அவன் உயர் அதிகாரி, ''மனோஜ் என்ன நான் கேள்விப்படுவது? உண்மையா?''

''ஸர் சைட் அருகில் அந்த மரத்தில் ஒரு கொலை நிகழ்ந்து விட்டது.''

''வேர் இஸ் ஷண்பேகர்?''

''ஏன்?''

''இஸ் ஹி இன்வால்வ்ட்?''

''இல்லை என்று நினைக்கிறேன். பயத்தில் தலைமறைவாக இருக்கிறான்.''

''ஹி இஸ் டெர்ரிஃபைடு.''

''தத்! எந்த வேளையில் இந்த ப்ராஜெக்ட்டைத் துவக்கினோம்! இப்பொழுது என்ன! மரத்தை வெட்ட விட மாட்டார்களா?''

''இப்போதைக்கு அந்தப் பிரச்னையை ஒத்திப் போட வேண்டியுள்ளது. எனக்கு லீகல் டிப்பார்ட்மெண்டிலிருந்து யாரையாவது அனுப்ப வேண்டும். இன்ஸ்டலேஷன் உதவிக்கு டெக்னீஷியன் வேண்டும். அனுப்ப வேண்டும். நான் எப் படியும் வேலையைத் தொடர்ந்து செய்ய உத்தேசம். செக்ரட்ரி மூலம் மாநில ஹோம் டிப்பார்ட்மெண்டுக்கு போன் செய்யச் சொல்லி போலீஸ் பந்தோபஸ்து தேவை. லோக்கல் போலீஸ் ஒத்துழைப்பதில்லை. எந்த நேரமும் கிராமத்தவர்கள் கோபம் கொண்டு சைட்டில் எங்களைத் தாக்க வரலாம்.''

''பேசாமல் திரும்பி வந்து விடு!''

''இரண்டரை கோடி ரூபாய் சாதனங்கள் பிரித்துப் போட்டபடி கிடக்கின்றன.

சுஜாதா

திரும்ப 'பாக்' செய்யவே ஒரு மாதம் ஆகும்.''

''என்ன செய்வது பின்?''

''பாதுகாப்பு ஏற்பாடு செய்யுங்கள். மற்றதை நான் கவனித்துக் கொள்கிறேன்.''

''நான் வரட்டுமா?''

''இப்போது வேண்டாம்.''

ஷண்பேகர் தலைமறைவாகச் சென்று மூன்று நாட்களாகி விட்டன. முடிந்தவரை வேலையைத் தொடர்ந்தான். ப்ரமிளா வுக்குப் பம்பாய்க்கு டிக்கெட் வாங்க ஆள் அனுப்பினான். ராத்திரி விளக்கைப் போட்டுக் கொண்டுதான் படுத்தான். ப்ரமிளா டிஸி வீட்டிலேயே சரணாகதி போல இருந்தாள். ஷண்பேகரின் அண்ணன் வீட்டு



விலாசம் கேட்டார்கள் பம்பாய் போலீசில். தகவல் சொல்லித் தேடி கைது செய்வதற்கு. மனோஜுக்கு என்னவோ அவன் அருகாமையில்தான் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று தோன்றியது. போலீஸ் பெங்களூர், சேலம் என்று பல ஊர்களுக்குத் தகவல் தெரிவித்தாலும் பாஷை தெரியாமல் அதிக தூரம் செல்ல மாட்டான் என்று நம்பினான். மேலும் அவன் கையில் காசும் இல்லை. ஒருவேளை ஷண்பேகரைக் கிராமத்தவர்களே... சேச்சே! இருக்காது.

ஒரு வாரம் சுமாராக வேலை நடந்தது. பம்பாயிலிருந்து டெக்னிஷியன் மட்டும் வந்தான். லீகல் டிப்பார்ட்மெண்டிலிருந்து வருகிற மாதம் முதல் வாரத்தில் யாரோ வரப் போவதாகவும் அவன் பெயர் பிரம்மதத் என்றும் விஸாட் செய்தி வந்தது. சென்னையிலிருந்து அன்டென்னாவின் பெடஸ்டலைத் தூக்கிக் கட்டடத்தின் மேல் வைப்பதற்கு மொபைல் கிரேன் வந்தது. அதை இயக்க இரண்டு சர்தார்ஜிகள் வந்திருந்தார்கள்.

அப்போதுதான் அந்த முதல் அதிசயம் நிகழ்ந்தது. ப்ரமிளாவுக்கு மொட்டையாக ஒரு தபால் கார்டு மஞ்சள் நிறத்தில் வந்தது. 'உன் மனசில் உள்ளது நிறைவேற முனீஸ்வரனுக்கு ரூ 101 காணிக்கை செலுத்து'

இது யார் எழுதியிருக்கிறார்கள் என்று சொல்ல இயலவில்லை. தமிழ் கையெழுத்து கிறுக்கலாக இருந்தது. ரூபாய் 1001 என்று போட்டு ஒரு சைபர் அடித்திருந்தது. ப்ரமிளா பிடிவாதமாக ரூபாய் கேட்டாள்.

''உன் மனசில் உள்ளது என்ன நிறைவேற வேண்டும்?''

''டோட்டு திரும்பி வர வேண்டும்!''

''தட்ஸ் அப்ஸர்ட்! டோட்டுவைப் புதைத்தாகி விட்டது! டோட்டு வராது! நான் ரூபாய் கொடுக்கத் தயார். ஆனால் பலன் எதுவும் எதிர்பார்க்காதே. பூசாரி பணம் பிடுங்கி. இந்தக் கடிதம் அவன்தான் எழுதியிருக்கிறான்.''

ப்ரமிளா டிஸியின் மனைவியுடன் சைட்டுக்கு வந்து உண்டியலில் ரூ 101 சேர்த்து விட்டுத்தான் சென்றாள்.

கிரேன் கொண்டு வந்திருந்த உஜாகர் சிங், கர்த்தார் சிங் இருவரும் நடேச பண்டிதரின் வீட்டின் முன் கயிற்றுக் கட்டிலில் தூங்கினார்கள். கர்த்தார் சிங் நிறையப் பேசினான் - பஞ்சாபியும் இந்தியுமாக, உஜாகர் மௌனமாக இருந்தான். அவர்கள் உதவியுடன் பெடஸ்டலை மேலே இறைமை மாக ஏற்றி விட்டார்கள். கிராமத்து சனங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மெல்ல மெல்ல வேலைக்கு வர ஆரம்பித்தார்கள். மனோஜுக்கு வேலை படிப்படியாகச் சூடு பிடித்தாலும் மனத்தின் மூலையில் எதையோ கவனிக்காமல் விட்டு விட்டது போல ஒரு கலக்கம் இருந்து கொண்டே வந்தது. மரத்தை வெட்ட வேண்டுமே என்ற கவலை வேறு வயிற்றின் அடித்தளத்தில் ஸ்திரமாக இருந்தது. இடையே 'ஷண்பேகர் என்ன ஆனான்?' என்கிற கேள்வி வேறு!

ஷண்பேகரைப் பம்பாய் போலீஸ் மூலம் அங்கே தேடியதில் அவன் அங்கே செல்லவில்லை என்பது தெரிந்தது. சுற்று வட்டாரத்தில் ரேடியோ செய்தி கொடுத்துப் பரவலாகத் தேடினார்கள். அவன் போட்டோ கேட்டு ஒரு தடவை ஷண்முகம் வந்திருந்தார். இன்ஸ்டலேஷன் சமயத்தில் வாசு எடுத்திருந்த க்ரூப் போட்டோவில் தேசலாக விழுந்திருந்தான். அதிலிருந்து அடையாளம் கண்டுபிடிப்பது சிரமம் என்றார். மனோஜுக்கு மற்றொரு கடிதம் வந்தது. அதன் விலாசமே வினோதமாக இருந்தது. உயர்திரு மனோஜ், மே/பா முனீஸ்வரன் மரம், வள்ளிக்குப்பம் கிராமம், வயா ஆரம்பாக்கம், செருப்பாக்கம் நெடுஞ்சாலை 610 287 - என்று. அதன் வாசகங்கள் இன்னும் வினோதமாக இருந்தன. 'நடேச பண்டிதர் வீட்டின் பின் கட்டில் தோண்டவும்... முனீஸ்வரன்!'

இதைப் பார்த்துச் சிரிப்புத்தான் வந்தது. இதை யார், அதுவும் பச்சை மசியில் எழுதியிருந்தார்கள் என்பது புரியவில்லை. இதே மாதிரி கடிதம் இரண்டாம் நாளும் வந்தது. கூடவே ஒரு புரியாத படமும் வரைந்திருந்தது.

ப்ரமிளாவுக்கு டிக்கெட் வந்ததும் அவள் புறப்படத் தயாரானாள். பதினைந்து நாட்களில் அவள் புறப்பட டிக்கெட் கிடைத்திருந்தது. ப்ரமிளா மெல்ல மெல்ல டிஸியின் மனைவியுடன் பரிபூரண முனீஸ்வர பக்தையாகி விட்டாள். தலைமயிரில் ஈரம் சொட்ட மஞ்சளும் குங்குமமுமாக அம்மன் போலவே இருந்தாள். இன்னும் பதினைந்து நாள்தானே என்று அவன் வினோதங்களைச் சகித்துக் கொண்டான். ''நேத்து ராத்திரி கனாவில் முனீஸ்வரன் வந்தார்'' என்றாள்.

''அப்படியா, எப்படி இருந்தார் பார்க்க?''

''கருப்பா மீசை வெச்சுண்டு பெரிசாக் குங்குமம் வச்சுண்டு.''

''அதாவது கிராமத்து வாசல்ல இருக்



வந்தவர் : நீங்க நூறு ரூபாய் லஞ்சம் கேட்டதை உங்க மானேஜர்கிட்டே சொல்லட்டுமா?
கிளார்க் : சொல்லிடாதீங்க சார். சொன்னீங்கன்னா அவருக்கும் சேர்த்து நூற்றி அம்பதாத் தர!



கிற அய்யனார் மாதிரி.''

அவள் அவன் கிண்டலைப் பொருட்படுத்தாமல், ''அவர் வந்து என்ன சொன்னார் தெரியுமா? டோட்டு நான் ஊருக்குப் போறதுக்குள்ள திரும்பக் கிடைச்சுரும்னு சொன்னார்.''

''ப்ரமிளா! ஆ! மறுபடி டோட்டு சமாசாரத்தை ஆரம்பிக்காதே.''

''நிச்சயம் வரும்னு நித்யா கூட சொன்னா மனோஜ்.''

ரெண்டு மனைவிகளும் சேர்ந்து பைத்தியம் அடிக்கிறீங்க எங்களை. எனக்கு இருக்கிற டென்ஷன் போறாதுன்னு இப்ப ஏதாவது பலி கோழி கீழின்னு ஆரம்பிக்காதே...''

''தினம் தவறாம சுரத் தலையோட பூசை பண்ணணும்.''

''அதும் கனாவில சொன்னாரா. ஜல தோஷம்தான் வரும்.''

''இல்லை நித்யா சொன்னா.''

நடேச பண்டிதரின் வீட்டுக்குச் சென்ற போது, கர்த்தார் சிங் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தான். ''எங்கே உஜாகர் சிங்! உன் கூட்டாளி?''

''மாலும் நஹி.''

''பண்டிதர் எங்கே?''

''மால் வாங்கி வர அனுப்பியிருக்கிறேன்.''

கட்டிலில் உட்கார்ந்த போது உஜாகர் சிங் ஒரு கடப்பாரை மண் வெட்டியுடன் அவசரமாக வீட்டின் பின்பக்கம் செல்வதைப் பார்த்தான்.

''எங்கே போகிறான்?''

''கிணற்றில் குளிக்க.''

''இந்த வேளையிலா? கடப்பாரை எதற்கு?''

''அண்டென்னா எர்த் அமைக்கத் தோண்டினது!''

மனோஜுக்கு அந்த விளக்கம் சமாதானமாகவில்லை. அன்டென்னா எர்த் ராடு அமைக்க வேண்டியது மனோஜின் வேலை. கர்த்தார் சிங்கும் உஜாகரும் மொபைல் கிரேன் வைத்துப் பெடஸ்டலை நிமிர்த்த வந்தவர்கள். இதற்கும் எர்த் ராடு அமைப்பதற்கும் சம்பந்தமே இல்லை. கர்த்தார் சிங்கை நுட்பமாகக் கேட்க அவனுடைய ஹிந்தி போதவில்லை.

அவனுக்குக் கிடைத்த விநோதமான அஞ்சல் அட்டையை இன்ஸ்பெக்டர் ஷண்முகத்திடம் காட்டத் தீர்மானித்தான். அதன் வாசகத்தை மறுபடி பார்த்தான்.

''நடேச பண்டிதர் வீட்டில் பின் கட்டில் தோண்டவும். முனீஸ்வரன்.'' டிஸியிடம் அதைக் காட்டிய போது, ''இது மாதிரி கடிதங்களை மதிக்காமல் இருப்பது நல்லது. ஏற்கெனவே கிராமம் அதிகக் குழப்பத்தில் இருக்கிறது. இப்போது மொட்டைக் கடுதாசியைப் போட்டு குழப்படி பண்ணாதீர்கள்'' என்றார்.

அந்தக் கடிதத்தை ஏறக்குறைய மறந்து விட்டான். அப்போதுதான் அந்த ஆச்சரியமான சம்பவம் நடந்தது.

ப்ரமிளாவை டிஸியின் வீட்டிலிருந்து தன் அறைக்குக் கூட்டி வந்திருந்தான். மறுநாள் ஊருக்குப் புறப்படப் போகிறாள் என்பதற்குச் சலுகையாக அவள் வரச் சம்மதித்தாள். ராத்திரி ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்த பின்னும் நச்சரித்தபின்னும் ப்ரமிளாவை அணைக்க முயற்சி செய்தான்.

''வேணாம்பா!'' என்றாள்.

''ஏன்?''

''முனீஸ்வரன் கோவிச்சுப்பாரு.''

''நாசமாப் போச்சு. முனீஸ்வரன் சொந்தப் பெண்டாட்டியை அணைக்க அப்ஜெக்‌ஷன் பண்ண மாட்டார் வா!''

''அய்யோ நான் வாக்கு குடுத்திருக்கேன்.''

''என்ன?''

''டோட்டு கிடைக்கிற வரைக்கும் உன்னோட எதும் கெட்ட காரியம் செய்யறதில்லைன்னுட்டு.''

''கம் ஆன் ப்ரமிளா! நீ படிச்ச பொண்ணு. இதெல்லாம் மூடநம்பிக்கை. செத்துப் போனது எதுவுமே திரும்பி வராது. முனீஸ்வரனும் இல்லை தெருப் புழுதியும் இல்லை.''

''அச்சிச்சோ'' என்று அவன் வாயைப் பொத்தினாள். அவள் கையை விலக்கி, கன்னத்தில் முத்தமிட்டான். கண்ணீர் உப்புக் கரித்தது.

''மனோஜ் ப்ளீஸ்!''

''என்ன?''

''கோவிச்சுப்பார் கண்ணா!''

''யு ஆர் நட்ஸ் ஐஸே! ஆல் தி பீபிள் ஆஃப் திஸ் ப்ளீடிங் வில்லேஜ் ஆர் நட்ஸ்!'' என்று இங்கிலீஷில் தொடர்ந்து திட்ட ஆரம்பித்தான். அப்போது அறைக்கு வெளியே ஒரு நாயின் முனகல் கேட்டது. கதவைப் பிராண்டுவதும் கேட்டது... ப்ரமிளா ''வந்தாச்சு! வந்தாச்சு!'' என்று கதவைத் திறந்தாள்.

''டோட்டு!''

(தொடரும்)



விமர்சனங்கள் மேலோட்டமாக இருப்பதாகப் புகார் கடிதம் எழுதி இருப்பவர் கடலூர் இராம. அனந்தன். தவிர்க்க, நம்மோடு பூதக்கண்ணாடியையும் எடுத்துச் சென்றோம். நுணுக்கமாய்த் தகவல் தர முயன்றிருக்கிறோம்.

அமலா, ஐஸ்வர்யா எட்செட்ரா இன்றும் இத்தனை வருடம் கழித்து எப்படி இருப்பார்கள்? இது முன்பே ஓவியர் அரஸ் செய்து காட்டிய ஒரு ஐடியாதான் என்பதை பூதக்கண்ணாடி தெரிவிக்கிறது. எனவே கதைக் கருவில் புதுமை இல்லை; ஆனால் படம் அசல் நெய்யில் தாளிக்கப்பட்ட மசாலா.

தன் ஓவியத்திறனால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க போலீசுக்கு உதவும் ஓவியர் சத்யராஜ். அதே திறமையால் தன் வாழ்க்கையில் ஒரு சிக்கலுக்கும் ஆளாகிறார். காதல், பாசம், சோகம், மோதல், போராட்டம், யுத்தம் நிறைந்த சிக்கல். அதிலிருந்து எப்படி மீண்டு வருகிறார் என்பதுதான் கதையின் வெகு சுருக். திருப்பங்கள் நிறைந்த ஏராள திரைக்கதை. ஆனால் அதில் ஒரு திகில், ஒரு த்ரில் இருக்க வேண்டாமா? பூதக் கண்ணாடி வைத்துத் தேடினாலும் அகப்படவில்லையே!

காணாமல் போன நபர் ஏழு வருடங்களுக்குள் திரும்பாவிட்டால் இறந்ததாகக் கருதப்பட்டு எஸ்டேட் சொத்து ஆசிரமத்துக்குப் போய் விடும். சட்டம். உயில். சரி! சிறுமி சுமார் நாலு அல்லது ஐந்து வயது தோற்றத்தில் காணாமல் போகி

பிரம்மா

நவர், கான்வென்ட் ஊழியையாகக் குறைந்த பட்சம் பதினெட்டு வயதில் கிடைப்பதாக இருந்தாலும் பதின்மூன்று வருடங்கள் ஓடி விடுகிறதே: சொல்லப்படும் காரணம் இடிக்கிறதே. ''காதில் கனகாம்பரம்'' என்கிறது பூதக்கண்ணாடி. ''தான் வரைந்து, தேடிக் கொண்டிருக்கும் குஷ்பூவின் புகைப்படத்தைத் தினசரியில் கண்டதும் ஒ சின்ன அதிர்ச்சியாவது கதாநாயகன் முகத்தி தோன்ற வேண்டாமோ?'' என்று கேட்கிறது.

தமிழ் சினிமாக்களில் முத்தம் சர்வசாதாரண விஷயமாகி விட்டிருக்கிறது என்பதை உணர பூதக் கண்ணாடி தேவையில்லைதான். நினைவில் நிற்கிற முத்தம்: பட முடிவில் தன் காதலர் சத்யராஜுக்கு, மனைவி பானுப்ரியாவின் அனுமதியோடு தரப்படும் முத்தமே. கவிதை!

நூறு புத்த பிட்சுகள் வந்து எடுத்துச் சொன்னாலும் எழுதுபவரோ, கவுண்டமணியோ தன் அதிகப்பிரசங்கித்தனமான காமெடிக்கு இடையிடையே தென்படும் அநாகரிக வார்த்தைகளைத் தவிர்த்துக் கொள்ள மாட்டார்கள் என்பது நிச்சயம். நல்ல ஆரோக்கியமான நகைச்சுவையைத் தேடிய பூதக்கண்ணாடிக்குப் படு ஏமாற்றம் - சத்தியம்.

இசை, பேருதவி : இளையராஜா. இருபத்தி ஏழு நிமிடம், பத்தொன்பது விநாடிகளுக்கு இசை மழை. துள்ளல் நடன அமைப்பு டி. கே. எஸ். பாபு. ஆளுக்குத் தகுந்த நடன அசைவுகளில் கவனிக்க வைத்திருக்கிறார். இவர்களுடன் கவர்ச்சிக்கு குஷ்பூ, நளினத்துக்கு பானுப்ரியா, விறுவிறுப்புக்கு சத்யராஜ், சபாஷ் பெறும் கூட்டமைப்பில் நூறு நாட்களை நடந்தே தொட்டு விடும் தீபாவளி குதிரை.

ஆனால், கம்ப்யூட்டர் வைத்துப் பட்டாசு வெடிப்பது போல இருக்கிறதேயொழிய மனசுக்கு நிறைவில்லை. பூதக் கண்ணாடியில் பட்டாசுப் புகை படிந்ததுதான் மிச்சம்!

- சுந்தர்ஜி

யூனிட் டிரஸ்ட் என்ன செய்கிறது?

'இந்திய தொழில் அபிவிருத்தி வங்கி (IDBI) வழங்கும் பத்திரங்களை எங்கே வாங்குவது?' என்று கேட்டுக் கடிதங்கள் வருகின்றன. நான் ஏற்கெனவே எழுதியது போல், இதற்கெல்லாம் நாளிதழ்களில் அறிவிப்பு வரும். முன்கூட்டியே வாசகர்களை இதற்குத் தயார்ப்படுத்தி வைப்பதுதான் என் நோக்கம். நான் இந்தத் தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பல நிறுவனங்கள், ஏற்கெனவே பங்கு மார்க்கெட்டுக்கு வந்து நாளிதழ்களில் விளம்பரம் செய்தும் விட்டன. LOTUS CHOCOLATE, ATUL PRODUCTS போன்றவை. ஹிந்து, எக்ஸ்பிரஸ் போன்ற ஆங்கில நாளிதழ்களை வாங்க முடியாதவர்கள் கூட, வாசக சாலையில் கவனித்து வந்தால் விவரங்கள் பெறலாம்.

பங்கு மார்க்கெட்டில், 'பிரதம மார்க்கெட்' என்றும் 'துணை மார்க்கெட்' என்றும் உண்டு என்பதை விளக்கி, சில கட்டுரைகள் எழுதினேன். பங்கு மார்க்கெட்டில் சூதாட்ட மனப்பான்மையுடன் நுழைவது ஆபத்தானது எனவும் குறிப்பிட்டேன். பங்கு மார்க்கெட்டில் பங்குகளின் விலை ஏற்ற - இறக்கங்களைச் சரியானபடி கணித்துச் செயல்படக் கூடியவர்கள் வெகு சிலரே. மற்றவர்களுக்கு நஷ்டமாகி விடும் என்ற பயம் இருக்கும். மேலும், சிறிய முதலீட்டாளர்களுக்குப் பெரிய பெரிய நிறுவனங்களில் முதலீடு செய்யும் அளவுக்கு வசதி இருப்பதில்லை. ஐயாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் என்று அனுப்பினால், இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய்க்குப் பங்குகள் கிடைக்கும். அதுவும் குலுக்கல் முறையில் கிடைத்தால்தான் உண்டு. பாக்கிப் பணம் திரும்பி வரும். ஆனால் முதலில் ஐயாயிரம் புரட்டுவதே பலருக்குப் பெரிய காரியமாயிற்றே!

இதையெல்லாம் உத்தேசித்து, சிறிய முதலீட்டாளர்களும் பயமின்றியும் ஏமாற்றமின்றியும் முதலீடு செய்ய உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் பிறந்ததுதான் யூனிட் டிரஸ்ட் என்பது. 1964ல் ஆரம்பிக்கப் பட்டது. யூனிட் டிரஸ்ட் என்ன செய்கிறது? உங்களுக்கு ஒவ்வொன்றும் பத்து ரூபாய் பெறுமானமுள்ள யூனிட்டுகளை வருடம் முழுவதும் சற்றே கூடுதல் விலையில் தருகிறது. இவ்வாறு அது சேகரிக்கும் கோடிக்கணக்கான ரூபாய்களைச் சிறந்த தொழிலகங்களின் பங்குகளில் முதலீடு செய்கிறது. கிடைக்கின்ற லாபத்தில் உங்களுக்கு டிவிடெண்ட் வழங்குகிறது. கடைசியாக வழங்கிய டிவிடெண்ட் 19.5 சதம் என்னும் போது இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவது புரியும்.

நாம் வாங்கிய யூனிட்டுகளை மார்க்கெட்டில் விற்கலாம். சற்றே கூடுதல் விலை கிடைக்கக்கூடும். தேவைப்பட்டால் யூனிட் டிரஸ்டே நிர்ணயித்த விலைக்குத் திரும்பப் பெற்றுக் கொண்டும் நமக்குப் பணம் தரும். பங்கு மார்க்கெட்டில் ஷேர்களின் விலை ஏற்றம் போல் அந்த அளவுக்கு யூனிட் விலை உயராது என்றாலும் இது பத்திரமானது. ஷேர்களை விற்கும் போது பங்கு மார்க்கெட்டில் சில சமயம் நஷ்டம் வருவது உண்டு. இதில் அத்தகைய ஆபத்து இல்லை.

நமக்குத் தொழிலகங்களில் முதலீடு செய்த திருப்தியும் கிடைக்கிறது; அதே



சமயம் நஷ்டம் ஏற்படுமோ என்ற பயம் இல்லை. பெருந்தொகைதான் முதலீடு செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய்க்குக் கூட யூனிட்டுகள் வாங்கலாம். லாபப் பங்கீடும் கணிசமான அளவில் இருக்கிறது.

யூனிட் டிரஸ்ட் அடைந்த வெற்றியைப் பார்த்து விட்டு, அரசு அனுமதி பெற்று, பல்வேறு அரசுடைமையான வங்கிகளும், ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனும் கூட ''மியூச்சுவல் ஃபண்ட்ஸ்'' என்ற பெயரில் இதே போன்ற அமைப்புக்களைத் தோற்றுவித்துள்ளன. என்றாலும் யூனிட் டிரஸ்ட்டே இவற்றுள் இன்றும் தலைசிறந்து விளங்குகிறது. பல லட்சம் சிறிய முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டப்பட்ட அதன் மூலதனம் 20,000 கோடி!

- வி. கோபாலன்

குழந்தை வளர்ப்பு:







"அப்பா! இந்த மீனா என்னை இன்னிக்கு நல்லா அடிச்சுட்டா..."

"இல்லைப்பா... ரகுதான் என் பொம்மையை முதல்ல பிடுங்கினான்..."

ஆபீசிலிருந்து வந்ததும் வராததுமாகக் குழந்தைகள் இப்படிப் புகார் பட்டியல் படித்தால் அப்பாவுடைய 'ரி-ஆக்ஷன்' எப்படியிருக்கும்....?

"சே! இந்த வீட்டிலே நிம்மதியே கிடையாது! மனுஷன் உங்களுக்காக நாள் பூரா உழைச்சுட்டு ஆஞ்சு ஓஞ்சு வர்ற நேரத்துல சித்த அமைதியா இருக்க விடக்கூடாதா? இப்படி எலியும் பூனையுமா சி ண் டை ட ப் பிடிச்சுக்கறீங்களே.... சும்முன்னு போங்க...."

பெரும்பாலான அப்பாக்கள் இப்படித்தான் எரிந்து விழுவார்கள். அப்பாவின் பதில் மூன்று விஷயங்களை உணர்த்துகிறது:

- அப்பா குடும்பத்துக்காகக் கடுமையாக உழைத்து ஓய்ந்து போகிறார்.
- அப்பா, வீட்டில் எப்போதும் அமைதி, ஒழுங்கு நிலவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.
- அப்பாவுக்குக் குழந்தைகளின் பிரச்னை ஒரு கூடுதலான பளு - தேவையற்ற தலைவலி......

குழந்தைகளின் அடி மனத்தில் இந்த விஷயங்கள் பதிந்து போக, அவர்கள் ஒருவிதமான குற்ற உணர்வுக்கும் பயம் கலந்த தயக்கத்துக்கும் உள்ளாகிறார்கள். அப்பாவிடமிருந்து மெல்ல விலகுகிறார்கள்.

வாழ்க்கையின் அன்றாடப் பிரச்னைகளும் பளுவான பொறுப்புகளும் குடும்பத் தலைவனை எந்நேரமும் அழுத்துகின்றன என்பது உண்மைதான். ஆனால் அந்தப் பிரச்னைகள் காரணமாக அவர் தம் குழந்தைகளின் உலகத்துக்குள் நுழைய அவகாசம் இல்லை என்று ஒதுங்கினால் அவருக்கு நிச்சயமாக அமைதியான, நிறைவான முதுமைப் பருவம் அமையாது....



பணத்தை முதலீடு செய்வதில் எவ்வளவு கவனம் செலுத்துகின்றனர் அப்பாக்கள். அந்த முதலீடு பிற்காலத்தில் பொருளாதார ரீதியில் லாபம் தரும் என்பதால் தானே? அதே போல் குழந்தைகளுடன் செலவிடும் நேரத்தையும் செலுத்தும் கவனத்தையும் ஒரு முதலீடாகக் கருதி, ஆத்மார்த்தமான சிரத்தையுடன் செயல்படுங்கள். நீங்கள் ஓய்வு பெறும் காலத்தில் பண முதலீடு ஈட்டித் தரும் பலனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு மதிப்

அப்பாவுக்கும்



புள்ளதான மன நிறைவை, அமைதியை இந்த முதலீடு உங்களுக்குப் பெற்றுத் தரும்.

''குழந்தைக்குச் சொத்து சேர்த்து வைக்கலைன்னாலும் எப்படியோ கஷ்டப்பட்டு நல்லா படிக்க வைச்சுட்டேன்'' என்று கூறுவார் உண்டு. லட்சக் கணக்கில் பணம் செலவழித்துக் குழந்தைகளுக்குக் கல்வி அறிவை நீங்கள் புகட்டலாம். ஆனால் அவர்களுடைய உலகத்துக்குள் நுழைந்து, ஈடுபாடு காட்டி, நற்பண்புகளை உணர்த்தும் முன்னுதாரணமாக நீங்கள் திகழாவிட்டால், புத்திசாலிகளாக, வளரும் குழந்தைகள் பண்பாளர்களாக விளங்குவார்களா என்பது சந்தேகம்தான்.

'அந்த விஷயங்களையெல்லாம் கவனித்துக் கொள்ளத்தான் அம்மா இருக்கிறாளே, அவள் பொறுப்பு அது' என்று அப்பாக்கள் ஒதுங்கி விட முடியாது. மூன்று வயது வரையில் வேண்டுமானால் அப்பாவின் ஈடுபாடுமிக்க கவனிப்பு இன்றி அம்மாவின் அரவணைப்பில் ஒரு குழந்தை வளர முடியும். அதற்காக அப்பருவத்தில் அப்பாவின் கவனம் அவசியமில்லை என்று கொள்ளலாகாது. ஆனால் அடுத்து வரும் பருவமே மிக முக்கியமானது. அந்தக் கட்டத்தில் குழந்தைகளுக்கு உலகக் காட்சிகளை உணர்த்தக் கூடிய ஜன்னலாக விளங்குபவர் அப்பாதான்.

எந்த வகையில் தகப்பனார் குழந்தைகள் பேரில் கவனம் செலுத்தலாம்? முதல் படியாக, வீட்டுக்குத் திரும்பும் போது ஆபீஸ் கவலைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, சிரித்த முகத்துடன் திரும்பலாம். அலுவலக வேலைகளை சீரியஸாக -கடமையாக - எண்ணிச் செய்வதுபோல் இப்படி சந்தோஷமாக வீடு திரும்புவதையும் கடமையாக எண்ணப் பழகிக் கொள்ள வேண்டும்.

குழந்தைகளைப் பார்த்ததும் 'பரீட்சை நன்றாக எழுதினாயா? ஹோம் ஒர்க் செய்தாயா?' என்று கேட்கத் தவறாத அப்பாக்கள் 'இன்னிக்கு நீ எவ்வளவு ரன்கள் எடுத்தே?' 'பேச்சுப் போட்டிக்கு பேர் குடுத்தியா?' என்ற கேள்விகளையும் அவசியம் கேட்க வேண்டும்.

அப்பாவின் கட்டுப்பாடு அவசியத் தேவையாக வலியுறுத்தப்படுகிறது. ஒழுக்கம் வளர்க்கும் பொறுப்பு அவருடையது. இந்தப் பொறுப்பை மிக சீரியஸாக எடுத்துக் கொண்டு சட்டங்கள் போடுவதை விட, சமயத்துக்குத் தகுந்தபடி அவற்றைத் தளர்த்துவதே புத்திசாலித்தனம்.

உதாரணமாக, குழந்தை படிப்பதற்கு அப்பா உதவுகிறார். பத்து வார்த்தைகளுள் ஏழு வார்த்தைகளை மனனம் செய்த பிள்ளை, எட்டாவது வார்த்தையைப் படிக்கும் போது வெளியே நண்பர்கள் விளையாடும் சப்தம் கேட்கிறது. இந்தத் தருணத்தில் பெரும்பாலான அப்பாக்கள் 'இன்னும் மூன்றே வார்த்தைதான், முடித்து விட்டு விளையாடப் போ' என்றுதான் சொல்வார்கள். இதற்குப் பதிலாக 'இன்னும் மூன்று வார்த்தைகள்தான் பாக்கி, போய்க் கொஞ்ச நேரம் விளையாடிட்டு வந்து முடிச்சுடு' என்று சொன்னால் மனம் நிறைந்த சந்தோஷத்துடன் அன்றைய பாடத்தைத் திரும்பி வந்து முடித்து விடுவான். அடுத்த முறை

பொறுப்பு



அடுத்த இதழில் :



- ஒரு சூப்பர் அலசல்!

அவனைப் பாடம் படிக்க அழைத்தால் உற்சாகத்துடன் வருவான்.

இன்றைக்கு உங்கள் பிள்ளை பத்து வார்த்தைகள் மனனம் செய்ய வேண்டும் என்பது உங்கள் இலக்கா? அல்லது படிப்பில் ஆர்வம் உள்ளவனாக அவன் மலர வேண்டும் என்பது உங்கள் இலக்கா....? யோசித்தால் எந்தத் தந்தையுமே இரண்டாவது இலக்கைத்தான் தேர்ந்தெடுப்பார்.

பல முக்கியமான முடிவுகளை எடுக்கும் பொறுப்பு அப்பாவினுடையதாகக் கருதப்படுகிறது.

''அப்பா! பக்கத்து வீட்டு மாமாவுடன் பீச்சுக்குப் போகட்டா?''

இது போன்ற தருணங்களில் படிப்பிலிருந்து கவனம் திரும்புவதை மட்டுமே கருத்தில் கொள்ளாமல் குழந்தைகளின் ஈடுபாடுகளை ஊக்குவியுங்கள். பக்கத்து வீட்டு மனிதர்களுக்கு அதிகப்படி பொறுப் பாயிற்றே, என்று தயங்குவதற்குப் பதில், ''மாமாவுக்கு உதவியாயிரு. அவங்க வீட்டு ரமேஷ் தம்பியையும் சமர்த்தா ஜாக்கிரதையா பார்த்துக்கோ'' என்று கூறி அனுப்பினால் அவனுடைய அனுபவ எல்லைகள் விரிவடையும். பலதரப்பட்ட மனிதர்களுடன் பழக, வெவ்வேறு நிலைக்களன்களை எதிர்கொள்ள அவன் பழகிக் கொள்வான்.

முடிவுகள் எடுப்பதில் குழந்தைகளின் கருத்துக்கும் இடம் கொடுக்கும் அப்பாக்கள் அபூர்வம்.

உறவினர் ஒருவரைப் பார்க்கப் போக வேண்டும் என்று நீங்கள் சொல்ல, குழந்தை வர மறுத்து, 'பீச்சுக்குத்தான் போக வேண்டும்' என்கிறது. உடனே 'அதெல்லாம் முடியாது நீ எங்களுடன் வந்தே ஆகணும்' என்று கட்டாயப் படுத்தாமல், 'உன்னை வீட்டில் தனியாக விட்டுப் போக முடியாதே! என்ன செய்யலாம்?' என்று குழந்தையிடமே யோசனை கேளுங்கள். நீங்களும் யோசியுங்கள். அத்தைப்பாட்டி வீட்டுக்குப் போகும் வழியில் உள்ள நண்பனின் வீட்டில் குழந்தையை விட்டுச் செல்லலாம். அங்கே விளையாடத் துணை இருப்பதால் குழந்தைக்கும் சுவாரஸ்யம் பிறக்கும்.

இவ்வாறு விட்டுக் கொடுப்பதால், குழந்தையின் ஒத்துழைப்பு உங்களுக்கு எப்போதும் கிடைக்கும். அவன் கருத்துக்கு மதிப்பு அளிக்கப்பட்டுள்ளதை உணர்ந்து, அவனும் உங்கள் கருத்துக்கு, மற்றவர் கருத்துக்கு மதிப்பு அளிக்க ஆரம்பிப்பான்.

குழந்தைகளிடம் பணம் கொடுப்பதா, கூடாதா? இது ஒரு பெரிய பிரச்னை. குழந்தையின் வயதுக்கும் நமது சக்திக்கும் ஏற்ப அளவாகக் கொடுத்து கணக்கு வைத்துக் கொள்ளச் சொல்லி சரி பார்க்கலாம். பொறுப்பு வளரும். பணம் கொடுத்து வாங்கக்கூடிய பொருட்களை விட, பண்புகள் அதிக மதிப்புள்ளவை என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டியிருக்கிறது. நல்ல காரியங்களுக்கு மகிழ்ச்சியுடன் பொருள் உதவி செய்து வழி காட்டலாம். குழந்தையின் பள்ளியில் ஏதோ ஒரு காரியத்துக்கு நிதி கேட்டால், வேண்டா வெறுப்புடன் கொடுப்பதற்குப் பதில், பள்ளியின் நடவடிக்கையில் மெய்யான அக்கறை வெளிப்படுத்தி விசாரித்துக் கொடுத்தால் குழந்தைக்குப் பெருமையாக இருக்கும்.

இதே ஆர்வத்தையும் அக்கறையையும் அவன் நண்பர்கள் விஷயத்திலும் காட்டுங்கள் : ''இன்னிக்கு உன் ஃப்ரெண்ட் கணேஷ் போலிங் பாத்தேன். சூப்பர்!'' என்று பாராட்டுவதன் மூலம் குழந்தையின் உலகில் பங்கேற்க நீங்கள் விருப்பத்துடன் முன் வருவதை அவன் உணர்வான்.

பெண் குழந்தைகளிடம் வேறுபட்ட முறையில் நடந்து கொள்ள வேண்டுமா என்று பல அப்பாக்கள் குழம்புவதுண்டு. அவளுடைய இயல்பான பெண்மைப் பண்புகளைப் பாராட்டி ஊக்குவிக்கத் தவறக் கூடாது. அதே நேரத்தில் கூச்சத்தை உதறி வெளியுலகைத் தன்னம்பிக்கையுடன் சந்திக்கத் தேவையான மனோபலத்தை

அவளுக்கு அளிக்கக் கூடியவர் தந்தைதான். வேலைக்குப் போகும் தாயாக இருந்தால் அவளிடமிருந்தே மகள் இந்தத் தன்னம்பிக்கையை ஓரளவு பெற்று விட முடியும். ஆனால் அப்படி இல்லாத பட்சத்தில் தந்தையின் பொறுப்பே அதிகமாகிறது. தன் அலுவலகத்தைப் பற்றி மகளிடம் பேசுவது, அலுவலக வட்டார நண்பர்களிடம் அவளை அறிமுகப் ப டு த் து வ து போன்றவை உதவும்.

குடும்பத்தலைவியும் வே லை க் கு ப் போவது சகஜமாக உள்ள இந்நாளில், கணவன் மனைவியிடையே வீட்டுப் பொறுப்பு, கு ழ ந் தை வளர்ப்பதில் பொறுப்பு ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்வதில் வாக்குவாதங்களும் மனத் தாங்கல்களும் அதிகரித்து வருகின்றன. இதனால் குழந்தைகளே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். போராட்டம் நிறைந்த சூழ்நிலை பாதுகாப்பற்ற உணர்வினைத் தர, குழந்தைகள் தன்னம்பிக்கை இழக்கக் கூடும். இதில் மிகுந்த எச்சரிக்கை தேவை. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டால் குழந்தைகளும் அதே பண்புகளைப் பெறுவார்கள்.

வாரம் முழுதும் உழைத்த களைப்புத் தீர, ஞாயிற்றுக் கிழமைகளில் 'அப்பாடா!' என்று படுத்து விடாதீர்கள்! காற்றுப் போன பலூனாகச் சுருங்கிப் போவார்கள் குழந்தைகள். அந்த நாட்களை வித்தியாசமான பொழுது போக்குகளுக்கும் 'ஹாபி' போன்ற ஈடுபாடுகளுக்கும் ஒதுக்கினால், அதில் மனைவி குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டால் உங்களுக்கும் புத்துணர்ச்சி உண்டாகும்; குழந்தைகளுக்கும் உற்சாகம் ஏற்படும். எல்லோரும் சேர்ந்து வெளியே போகும்போது, நீங்கள் குழந்தைகளுக்குப் பல விஷயங்களைச் சுட்டிக் காட்டுவதுடன், அவர்கள், ''அப்பா, அதோ பாரேன்'' என்று சுட்டிக் காட்டுவதையும் பார்த்து ரசித்து மகிழுங்கள். இத்தகைய சந்தர்ப்பங்கள் நெருக்கமான பந்தத்தை வளர்க்கும். பதினேழு, பதினெட்டு வயதில் குழந்தைகள் நம்மிடமிருந்து விலகி அந்நியமாகிவிட்டார்களோ என்ற அச்சம் ஏற்படாமல் இருக்க இது அஸ்திவாரம்.

குழந்தைப் பருவம் ஓர் அற்புதமான, குதூகலமான அனுபவம். அது ரம்மியமாக, என்றும் நினைவில் நிற்கும்படி செய்வதே குழந்தை வளர்ப்பின் ரகசியம். இதை வெ ற் றி க ர மா க நிறைவேற்ற வேண்டுமானால், 'வளரும் மரத்தைச் சுற்றி போடப்பட்ட ஒரு வேலிதான் நாம்' என்று தந்தை உணர வேண்டும். அந்த வேலி, பாதுகாப்புக்காகப் போடப்பட்டதுதான்; வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி, திசை திருப்புவதற்கு அல்ல.

- டாக்டர் சி. ஆர். சந்திரசேகர்

தொகுப்பு : சீதா ரவி

அட்டையில்: ரூபன், குழந்தை சங்கமி

வண்ணப்படம் : யோகா



சிவாஜியின் 'அவுட்'டுச் சிரிப்பும் ராம்நாத்தின் அட்டகாசச் சிரிப்பும்!

சிவாஜியின் பதில் என்ன? அதைத் தெரிந்து கொள்ள நீங்கள் ஏழு நாட்கள் காத்திருந்தீர்கள். நாங்களோ ஏழு விநாடிகள்தான் காத்திருந்திருப்போம். ஆனால் அந்த ஏழு விநாடிகளும் ஏழு யுகங்களாகத்தான் தோன்றின. அப்புறமாவது பதில் வந்ததா என்றால் அதுதான் இல்லை!

இலேசான ஒரு புன்னகை. இமைகள் மூடித் திறக்க மேலும் கீழுமாக ஒரு தலையசைப்பு!

சிவாஜியின் அனுமதி கிடைத்து விட்டது!

அடுத்து பத்மினியிடம் போனோம். சிவாஜி ஸார் வீட்டில் நடந்ததையெல்லாம் சொன்னோம். உடனே அவரும் நடிக்க ஒப்புக் கொண்டு விளம்பரத்தில் பெயர் போடவும் அனுமதி அளித்தார்.

பிரகாஷ் ராவ் இயக்கிய தெலுங்குப் படங்களில் சாவித்திரி நடித்திருக்கிறார். அவரைச் சம்மதிக்க வைக்கும் பொறுப்பைப் பிரகாஷ் ராவே ஏற்றுக் கொண்டு வெற்றி பெற்றார்.

'அட்வான்ஸை முதலில் கொடுத்தால்தான் ஆயிற்று' என்று சிவாஜி, பத்மினி, சாவித்திரி ஆகிய அனைவருமே கண்டிஷன் போட்டிருக்கலாம். அதில் யாரும் குற்றம் குறை கண்டுபிடிக்க முடியாது. ஆனால் பெருந்தன்மையோடு நடந்து கொண்டார்கள். 'பிறரையும் வாழ வைக்க வேண்டும்; திறமைகளை ஊக்குவிக்க வேண்டும்' என்ற கருத்து கொண்டிருந்தார்கள். இதனால்தான் நானும் என்னைப் போலவே வேறு பலரும் திரைப்படத் துறையில் முன்னுக்கு வர முடிந்தது.

நாளிதழ்களில் அமரதீபம் படத்தின் அறிவிப்பு முழுப்பக்க விளம்பரங்களாக வெளிவந்தன. ஃபைனான்சியர்கள் முதலீடு செய்யப் போட்டி போட்டுக் கொண்டு முன்வந்தார்கள். பட வேலைகள் மளமளவென்று நடந்தன.

கமால் கோஷ் மிகப் பிரபலமான காமிராமேன். ஏகப்பட்ட கிராக்கி அவருக்கு. ரொம்ப பிஸியான அவர், பெரிய கம்பெனிகளுக்கு முன்னுரிமை தந்து, எங்களை 'டீலி'ல் விட்டு விடுவார். ''ஐயோ, அப்புறம் கால்ஷீட் கிடைக்காதே! உங்களை விட சிவாஜி பிஸி ஆச்சே!'' என்று புலம்பினால், ''என் அஸிஸ்டெண்ட்டை அனுப்புகிறேன்'' என்பார்.

வேறு வழியின்றி நாங்களும் தலையாட்டி விட்டு அஸிஸ்டண்ட்டை வைத்துப் படப்பிடிப்பு நடத்துவோம். அவர்தான் வின்ஸெண்ட். ஆரம்பத்தில் அவரிடம் எனக்கு ஒரு எதிர்ப்புணர்வு இருந்தது நிஜம். 'என்ன, கமால்கோஷ் அனுப்பி வைத்த அஸிஸ்டெண்ட்தானே' என்ற ஒரு அலட்சியமும் கொஞ்சம் கோபமும் கலந்த எதிர்ப்புணர்வு. ஆனால் சீக்கிரமே அந்த எதிர்ப்புணர்வு இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது. வந்ததும் வராததுமாகச் சுறுசுறுப்புடன் செயல்படத் தொடங்குவது மட்டுமல்ல; ஒரு காட்சியை நான் எப்படி எதிர்பார்க்கிறேனோ அதற்கு ஒரு படி மேலாகவே செய்து முடிப்பார். இதெல்லாம் என்னிடம் மதிப்பைப் பெற்றன. வின்ஸெண்ட் எடுத்த காட்சிகளை 'ரஷ்' போட்டுப் பார்த்த போது அந்த மதிப்பு மேலும் பெருகியது. கமால்கோஷ் வர முடியாத தினங்களில் வின்ஸெண்டுக்குக் கார் அனுப்புவது என்ற நிலை மாறி, நேரடியாகவே வின்ஸெண்டுக்குக் கார் அனுப்புவது என்ற கட்டம் வெகு சீக்கிரம் வந்து விட்டது! படம் முடியும் போது பாதிக்கு மேல் வின்ஸெண்ட் எடுத்த காட்சிகள்தான்.

கமால்கோஷுக்கு நாங்கள் பேசிய ரேட்டைக் கொடுத்து விட்டோம். அவரும் தமது அஸிஸ்டெண்டுக்குச் சம்பளம் தந்து விட்டார். என்றாலும் எனக்கு மனசு கேட்கவில்லை. கமால்கோஷுக்குப் பேசிய தொகை தவிர, நேரிடையாகவும் வின்செண்ட்டுக்கு ஒரு தொகை கொடுத்தோம். இந்தத் தொகையைப் பெறுவதற்கு முன்

டைரக்டர் ஸ்ரீதர்

பாகவே வின்ஸெண்ட், ஸ்ரீதர் யூனிட்டில் ஒருவராகி விட்டார் என்றால் மிகையல்ல. அந்த அளவுக்கு எங்களுடன் ஒத்துழைத் தார்.

அமரதீபம் மூலம் ஸ்ரீதர் யூனிட்டில் இணைந்த இன்னொருவர் ஸ்டில் ஃபோட் டோகிராஃபர் திருச்சி கே. அருணாசலம். பிற்காலத்தில் அனா ருனா என்ற சுருக்க மான பெயரில் மிகப் பிரபலமடைந்த இவரைப் பற்றி விவரமாகப் பிறகு கூறு கிறேன்.

அமரதீபத்தின் மாபெரும் வெற்றி யைத் தொடர்ந்து, 'அடுத்து என்ன படம் பண்ணுவது?' என்ற கேள்வி எழுந்தது. ''இந்த வெற்றி மக்கள் மத்தியிலும் விநியோகஸ்தர் இடையிலும் பெரிய எதிர்

☛ சிவாஜி



பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் நமது அடுத்த படம் பிரும்மாண்ட தயாரிப் பாக இருக்க வேண்டும்'' என்றார் கிருஷ்ண மூர்த்தி.

தி டீ ரெ ன் று ஓர் எண்ணம் : ''ஸ்ரீ வள்ளியை எடுத்தால் என்ன?''

''வள்ளி பாத்திரத்துக்கு வைஜயந்தி மாலா'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

''சிவாஜியை முருகனாகப் போட லாம்'' என்றேன் நான்.

''நாரதர் வேடத்துக்கு டி. ஆர். மகா லிங்கம்'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

அவ்வளவுதான். உடனே கிளம்பி விட்டோம் சிவாஜி வீட்டுக்கு! ''ஜி. ராம நாதன் இசை'' என்று போகும் வழியில் தீர்மானித்தோம்!

எங்களை வரவேற்ற சிவாஜியின் புன் முறுவல் விஷயத்தைக் கேட்டதும் அதிர் வேட்டுச் சிரிப்பாக மாறியது! எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

''ராமண்ணா சாரும் இதே கதையைத் தான் எடுக்கறார். அவரும் வேலன் பாத்திரத்துக்கு என்னையும் நாரதராக டி. ஆர். மகாலிங்கத்தையும்தான் புக் பண்ணி யிருக்கிறார். வள்ளி விஷயத்தில்தான் கொஞ்சம் மாற்றம். வைஜயந்தி இல்லை; பத்மினி'' என்று தமது சிரிப்பின் கார ணத்தை விளக்கினார் சிவாஜி.

ஏமாற்றத்துடன் திரும்பிய நாங்கள், மறுபடி யோசிக்க ஆரம்பித்தோம். ஒரு பொறி தட்டியது. சிறுவனாக இருந்த போதே 'அலெக்ஸாண்டர் டூமா' எழுதிய 'மேன் இன் தி அயர்ன் மாஸ்க்' படித் திருந்தேன். எனக்கு ரொம்பப் பிடித்த கதை என்பதோடு, பிரும்மாண்ட தயாரிப்புக்கு ஏற்ற சப்ஜெக்ட்.

''அதை ஏற்கெனவே மாடர்ன் தியேட் டர்ஸில் உத்தமபுத்திரன் என்ற தலைப்பில் பி. யூ. சின்னப்பாவை வைத்து எடுத்துட் டாங்களே'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

''அது வெளியாகிப் பதினைந்து வரு

☛ பத்மினி, சாவித்திரி





''பிறரையும் வாழ வைக்க வேண்டும்''

ஷங்களுக்கு மேல் ஆகி விட்டது. இன் றைய ரசனைக்கு ஏற்ப தேவையான மாற் றங்களுடன் விறுவிறுப்பாக எடுக்கலாம். இரட்டை வேடத்தில் சிவாஜி நடிக்கலாம்'' என்றேன்.

பார்ட்னர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ''ராம்நாத் டைரக்ஷனில் படம் உருவாக வேண்டும்'' என்றும் சொன்னேன்.

உடனே கிளம்பி விட்டோம் ராம்நாத் வீட்டுக்கு. நாங்கள் விவரித்துச் சொன் னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட ராம்நாத் முடிவில், சிவாஜியின் அதிர்வேட்டுச் சிரிப்பையும் தூக்கி அடிப் பது போல் ஒரு அட்டகாசச் சிரிப்பு சிரித் தார்! எங்களைப் பிரமிக்கச் செய்த இந்தச் சிரிப்பின் காரணத்தை அறிய நீங்கள் ஒரு வாரம் காத்திருக்கத்தான் வேண்டும்!

நீங்கள் கேட்டவை - தராசு

ராஜாராமைப் பதவியிலிருந்து நீக்கிய ஜெ. தைரியசாலிதானே?

● கே. நாராயணன், திருநெல்வேலி.

? **பாக் பந்து விச்சாளர் அக்குவிப் ஜாவேதின் பந்துகளால் பாதிக்கப்பட்ட இந்திய அணி இனி என்ன செய்ய வேண்டும்?**

! நம் அணிக்கும் ஒரு அக்குவிப்பை உரு வாக்க வேண்டும்.

● ஜான் சாமுவேல், பம்பாய்.

? **இந்திய கிரிக்கெட் அணியின் மதிப்பு உயரும் நாள் எப்போது?**

! வெல்லும் போது உயரும்; தோற்கும் போது தாழும். முதல் மூன்று மேட்சுகளை வென்றது இன்று மறந்து போகும். கோப் பையைக் கோட்டை விட்டதுதான் நினை வில் நிற்கும். இல்லாவிட்டால் ஸ்ரீகாந்தை யும் வெங்சர்க்காரையும் திரும்ப அழைத் திருப்பார்களா?

● சுபாஷிணி, திருவெண்ணெய்நல்லூர்.

? **துறவிக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் உண்டா?**

! ஏன் இல்லை. முன்பும் உண்டு இன்றும் உண்டு. ஆனால் ஒரு வித்தியாசம். முன் பெல்லாம் ரிஷிகளின் பேச்சைக் கேட்டு நடந்து அரசர்கள் புகழ்பெற்றார்கள். இன்று தெய்வ மனிதர்கள் என்று தங்களை வர் ணித்துக் கொள்ளும் போர்வழிகள் பேச்சைக் கேட்டு அரசியல்வாதிகள் வீழ்ச்சி அடை கிறார்கள். சந்திராசாமியை இலக்காக்கி தற் போது ஸி. பி. ஐ. ரெய்டு நடத்தி, பல தில்லுமுல்லுகளை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது என்றால், அவரை வணங்கிய தலைவர்கள் நமது மதிப்பில் தாழ்ந்துதானே போகிறார்கள்!

● எஸ். நாரம்புநாதன், கரண்டை.

? **ஜெயலலிதாவின் தற்போதைய அரசியல் எதிரி யார்? கருணாநிதியா? மூப்பனாரா? நரசிம்மராவா?**

! மூவரும் இல்லை. 'ஜெ'யேதான்!

● லீலா இராம், தக்கலை.

? **உலகை உலுக்கும் தற்போதைய பிரச்னை?**

! கடத்தல்தான். ஆள் கடத்தல், போதை மருந்து கடத்தல்.

● ரமேஷ் பாபு, சேலம்.

? **'ஆதி சங்கரர்' என்று ராஜீவை நரசிம்ம ராவ் சொல்லியிருக்கிறாரே?**

! ஜெயலலிதாவை 'ஜான்ஸி ராணி' என்று கூறலாம் எனில், ராஜீவை 'ஆதி சங்கரர்' என்று வர்ணிக்கலாம்தான். ஆனால் நாட் டின் பிரதமர் இப்படியெல்லாம் பேசுவது தான் அபத்தமாகவும் வருத்தமாகவ,ம் இருக்கிறது.

● சி. பி. குயில் குமார், காரைக்குடி.

? **அமைச்சர் ராஜாராமைப் பதவியிலிருந்து நீக்கிய ஜெயலலிதா தைரியசாலிதானே?**

! ராஜாராமும் தைரியசாலிதான். இது வரை பதவியில் இருந்ததே அதை நிரூபிக் கும்!

● மோகனப்பிரபா, கள்ளியம்புதூர்.

? **அயோத்தி ராமர் என்னதான் ஆவார்?**

! அவரை 'அரசியல் ராமர்' ஆக்கி விட் டார்கள்.

● கே. ரமேஷ்ராம், செங்குன்றம்.

? **சிறைக் கைதிகளைத் திரைப்படங்கள் மூலம் சீர்திருத்த முடியுமா?**

! திரைப்படங்களின் பாதிப்பால் சிறைக்கு வந்தவர்கள் பலர் இருக்க, நீங்கள் என்ன, கதையைத் திருப்பிப் போடுகிறீர்கள்!

● கடுவை மகரந்தன், திருவாரூர்.

? **ஜெயலலிதா கேட்டதால்தான் நரசிம்ம ராவ் பாம் ஆயில் கொடுத்தார் என் கிறார்களே?**

! ஆயில்களில் உயர்ந்தது இனி பாம் ஆயில்தான். ஒரு முதல்வர் கேட்க ஒரு பிரதமர் அனுப்பி வைக்கும் பாக்கியம் வேறு எந்த எண்ணெய்க்காவது கிடைத் திருக்கிறதா? ''எங்க பக்கமும் அதைக் கொஞ்சம் அனுப்பி வையுங்க'' என்று கிராமப்புற மக்கள் கேட்பது முதல்வர் காதில் விழுந்தால் சரி.

● சி. பழனிச்சாமி, கொங்கணாபுரம்.

☛ பிரதமரா பேசுவது ?



☛ ஆதி சங்கரர்?





☛ எதிரி யார்?



☛ பெரியசாமிதான்!



☛ மீண்டும்...



☛ ...அழைப்பு!

? தி. மு. க. வுக்கு அடுத்த தேர்தலில் என்ன குழந்தை?

! கருத்தரிக்கட்டும், முதலில்!

● அனுராதா, ஈரோடு.

? இந்த ஆண்டு தீபாவளி எப்படி இருந்தது?

! ''காசு இல்லை'', ''பணம் இல்லை'', ''விலைவாசி உயர்வு'' என்று பேச்சு அடிபட்டது. ஆனால் ஜவுளிக் கடைகளில் கூட்டம் திமிலோகப்பட்டது. பட்டாசுச் சத்தம் (குறிப்பாக தௌஸண்ட் வாலா) செவிப் பறையைக் கிழித்தது. 'ஆசியா வாழ் ஆதிவாசி ஒருவன், உப்புக்குப் பதில் உணவில் ஸால்ட் பீட்டர் என்ற தாது உப்பைப் பயன்படுத்த, அது கை தவறுதலாக அடுப்பு நெருப்பில் விழ, வெடிச் சத்தம் எழ, பட்டாசு பிறந்தது'' என்ற புதிய செய்தி கிடைத்தது. சொன்னவர், ரசாயனப் பேராசிரியர் ஏ. என். எஸ். மூர்த்தி, ஐ.ஐ.டி., டில்லி.

● எம். சந்திரசேகர், மேட்டு மகாதானபுரம் ❑

? போயஸ் தோட்டத்துத் தொலைக்காட்சியில் எரிபொருள் சிக்கனம் பற்றிய செய்திப் படம் காட்டப்பட்டதா?

! எல்லா டீவிக்களிலும் ஒரே மாதிரிதான் படங்கள் காட்டப்படுகின்றன. பார்க்கப்படுகிறதா என்பதுதான் சந்தேகம்!

● பாலசுப்பிரமணியன், செங்குன்றம்.

? 'தன்னை வெற்றி பெறச் செய்தால் தனது தொகுதியைத் துபாய் ஆக மாற்றிக் காட்டுவேன்' என்று கூறி வெற்றி பெற்ற மணிசங்கர அய்யர் தற்போது தமது தொகுதி மக்களைத் துபாய்க்குக் கொண்டு செல்ல முயற்சி செய்கிறாரா?

! ராஜீவ் இருந்திருந்தால், வெற்றி பெற்றிருந்தால், ஆட்சி அமைத்திருந்தால், மணி மந்திரியாகியிருப்பார். மாயூரத்தைத் துபாய் ஆக்க முடியாவிட்டாலும் கொஞ்சமேனும் முன்னேற்றியிருப்பார். இப்போது எல்லா நம்பிக்கையும் போச்சு அந்தத் தொகுதி மக்களுக்கு. அய்யர் மறுபடி இண்டல் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்.

● ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.

? சமீபத்தில் தங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய செய்தி?

! இந்தியாவில் அதற்குப் பஞ்சமே கிடையாது. முதல் தடவையாக இப்போது சி.பி.ஐ., தனது அதிகாரி ஒருவரையே இலக்காக்கி ரெய்டுகள் நடத்தி, நாலு கோடி ரூபாய் சொத்துக்களை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது! ஓ. பி. சர்மா என்ற இவரது இல்லங்கள், மற்றும் இவரது உறவினர்களின் வீடுகள் மொத்தம் பத்தொன்பதில் ரெய்டுகள் நடந்தன! வங்கி லாக்கர்கள் பல உடைக்கப்பட்டதில் 11 லட்சம் பணமும் மூன்று கிலோ தங்க நகைகளும் கிடைத்தன! பெரிய வேடிக்கை என்னவென்றால் ஓ. பி. சர்மா வீர தீரச் செயல்களுக்காக ஜனாதிபதி பதக்கம் பெற்றவர்! பத்து லட்சம் லஞ்சம் பெறும்போது கண்ணி வைத்துப் பிடிக்கப்பட்டார்! வேலியே பயிரை மேய்வதற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் கிடைக்குமா?

☛ தில்லுமுல்லு!



☛ துபாயாக மாற்றுவாரா?



❑ ரூ 25 பரிசு பெறுபவர்:
எம். சந்திரசேகர்,
மேட்டு மகாதானபுரம் (அஞ்சல்)
குளித்தலை (வட்டம்) 639 105

3

திரும்பித் தெருவுக்குப் போய் விடலாமா என்று மீரா ஒரு வினாடி யோசித்தாள். தெருவில் எத்தனை நேரம் நிற்க முடியும்? பக்கத்தில் நந்தினியின் வீடுதான் அவள் செல்லக்கூடிய வீடு. நந்தினியின் அம்மாவைச் சந்திப்பதை விட மீனாட்சியின் அம்மாவை எதிர்கொள்வது மேல் என்று தோன்றிற்று. எதையாவது சொல்லிக் கழண்டு கொள்ள வேணும் என்று துரிதமாக யோசித்தபடி அவள் வரவேற்பறைக்குள் நுழைந்து அங்கு உட்கார்ந்திருப்பவர் பக்கமே திரும்பாமல் கிடு கிடுவென்று மாடிப்படிகளில் ஏற ஆரம்பித்தாள்.

''மீரா!'' - அம்மா கூப்பிடவும் திரும்ப வேண்டியதாயிற்று.

''ஸாரிம்மா நான் பார்க்கல்லே!'' என்று மீனாட்சியின் அம்மாவைப் பார்த்துப் புன்னகைத்து ''ஹல்லோ ஆன்ட்டி!'' என்றாள். ''மீனாட்சி வரல்லியா?''

அந்தம்மாளின் முகம் குழம்பிப் போனதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அம்மா சங்கடத்துடன் மீராவிடம், ''இங்க வர்றதாச் சொல்லிட்டுக் காலையிலே வீட்டை விட்டுப் பத்து மணிக்கே மீனாட்சி போயிட்டாளாம்'' என்றாள்.

மீனாட்சியை மனசுக்குள் திட்டியபடி மீரா சுலபமாகச் சிரித்தாள்.

''வழியிலே யார் வீட்டிலேயாவது நுழைஞ்சிருப்பா. யாராவது பேசக் கிடைச்சாங்கன்னா விட மாட்டா. என்னை மறந்தே போயிருப்பா. தன்னாலே சாயங்காலம் வீட்டுக்கு வந்து சேருவா.''

மீனாட்சியின் அம்மா, மிஸஸ் செல்லப்பனின் முகத்தில் சற்று இளக்கம் தெரிந்தது. டான்ஸ் வகுப்பில் இவளைப் பற்றி நந்தினி சொன்னது மீராவுக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஒரு புதிய சுவாரஸ்யத்துடன் அவளைப் பார்க்கும் போது அமெரிக்க பாணியில் 'வாவ்' என்று தனக்குள் சொல்லத் தோன்றிற்று. உடம்பு 'சிக்' கென்று இருந்தது மட்டுமல்ல, உடை அணிந்திருந்த விதம் கவர்ச்சியாக இருந்தது. புருவங்கள் அழகாக 'ட்வீஸ்' செய்யப்பட்டிருந்தன. நோஞ்சான் நந்தினியின் அம்மாவும் ஒரு நோஞ்சான். பொறாமையினாலேயே இவளைப் பற்றி அப்படிச் சொல்கிறாளோ என்னவோ.

''இன்னும் ரொம்ப விவரம் தெரியாத பொண்ணா, இருக்கா அவ'' என்றாள் மிஸஸ் செல்லப்பன். ''எனக்கும் நேரமே கிடைக்க மாட்டேங்குது.''

''வேலைக்குப் போறீங்களா?'' என்றாள் அம்மா.

''ஆமாம்மா. ரெடிமேட் டிரெஸ் கடை வெச்சிருக்கேன் பனகல் பார்க்லே.... தெரியாது?''

பதிலை எதிர்பார்க்காமல் அவள் சுறுசுறுப்பாகத் தன் கைப் பையைத் திறந்து ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து அம்மாவிடம் நீட்டுவதைப் பார்த்து, மீரா ''ஸீ யூ ஆன்ட்டி!'' என்று கையசைத்தாள். ''கவலைப்படாதீங்க மீனாட்சியைப் பத்தி. தன்னாலே வந்து சேருவா, நீங்க ஏன் தேடறீங்க?''

''தேடல்லே. இந்தப் பக்கமா வந்தேன். இருந்தாள்னா அழைச்சிட்டுப் போகலாமேன்னு வந்தேன். நா கிளம்பறேன்.''

'மீனாட்சி க்ளாஸிலே எப்படி இருக்கா, யார் அவளுடைய சிநேகிதிங்க' என்றெல்லாம் நல்ல வேளையாக மிஸஸ் செல்லப்பன் கேட்கவில்லை. வெளியில் இருந்த காரில் ஏறி அவள் கிளம்பும் வரை காத்திருந்து மீரா இரண்டே எட்டில் கீழே இறங்கினாள்.

''அந்த ஆன்ட்டியை எதுக்காக நான் வர வரைக்கும் உட்கார்த்தி வெச்சே?'' என்றாள் அம்மாவிடம்.

'ட்வீஸ்' செய்யப்படாத தன் புருவங்களை அம்மா வியப்புடன் உயர்த்தினாள்.

''உன்னைப் பார்த்துட்டுத்தான் போகணும்னு உட்கார்ந்திருக்கிறவளை நான் எப்படிப் போங்கன்னு சொல்றது? என்ன விஷயம்?''

''ஒன்னா, எனக்குப் பொய் சொல்ல வேண்டி வந்தது. ஐ ஹேட் இட்!''


''ஏன், எதுக்குப் பொய் சொன்னே?'' என்றாள் அம்மா அதிர்ந்து. இந்த வீட்டில் பொய் சொல்வது கொலை குற்றத்துக்குச் சமானம்.

''என்ன செய்யட்டும்? காலையிலே மீனாட்சி போன் பண்ணினா. எங்கேயோ போறாளாம். 'அம்மாகிட்ட உன் வீட்டுக்கு வர்றதா சொல்லப் போறேன், என்னைக் காட்டிக் குடுத்துடாதே'ன்னா.''

அம்மாவின் மூளை துரிதமாக இயங்குவது யோசனை நிறைந்த அவளது பார்வையில் தெரிந்தது.

''நீ ஏன் எங்கிட்ட இதைப் பத்திச்

காதலெனும்



சொல்லல்லே?''

''நான் சொல்ல நினைச்ச போது நீ உன் க்ரேட் ஃப்ரெண்டோட பெரிய டய லாக்லே இருந்தே.''

''யாரது க்ரேட் ஃப்ரெண்ட்?''

''கறிகாய்க்காரன் பொன்னுசாமி.''

மீனாட்சியைப் பற்றின கவலையையும் மீறி அம்மா சிரித்தாள். பிறகு முகத்தை நேராக வைத்துக் கொண்டு கேட்டாள்.

''அந்தப் பொண்ணு எங்கே போயிருக் குன்னு தெரியுமா?''

''எங்கே போயிருக்கான்னு தெரியாது. ஆனா ஒரு பையனோடு போயிருக்கான்னு தெரியும்.''

அம்மா கண்களை அகல விரித்தாள். ஆனால் சாதாரணமாகச் சொன்னாள். ''வீட்டிலே சொல்லாம ஏன் போறா?''

''அதான் எனக்குப் புரியல்லே.'' என்றாள் மீரா கோபத்துடன், ''அது சரி யான லூஸ். எல்லாத்துக்கும் பொய் சொல் லும். வீட்டுக்குத் தெரியாம சுத்தறது பெரிய அட்வெஞ்ச்சர்னு நினைக்கிறா போலிருக்கு. பாய் ஃப்ரெண்டோடப் போறேன்னு ஏன் சொல்லக் கூடாது? அவ அம்மாவுக்கே பாய் ஃப்ரெண்ட் இருக் கலாம்!''

அம்மாவின் அதரங்களில் லேசாகப் புன் னகை விரிய ஆரம்பித்தது. சட்டென்று

வானவில்

ஞாபகம் வந்தது போல சுருங்கிற்று.

''இந்த மாதிரி உளர்றதை வீட்டுக் குள்ளே மட்டும் வெச்சுக்கோ!'' என்றாள் லேசான அதட்டலாக.

''ஏன் இருக்கக் கூடாதா?'' என்றாள் மீரா விடாப்பிடியாக. ''நீ கூட நந்தினி அம்மா மாதிரி ஆயிண்டு வர்றே.''

அவள் அம்மாவின் பதிலுக்குக் காத் திராமல் மாடிப் படிகளைத் தாவி ஏறித் தன் அறைக்குச் சென்றாள். செருப்பைக் கழற்றி கவனமாக அதன் இடத்தில் வைத்து விட்டு, தொம்மென்று படுக்கையில் எகிறி விழுந்த போது உற்சாகமாச் சிரிப்பு வந்தது.

திங்கட்கிழமை மீனாட்சியை ஸ்கூலில் பார்த்ததும் முதல் வேலையாகச் சொல்ல வேண்டும் - உன் தில்லுமுல்லு வேலை களை உன்னோடு வெச்சுக்கோ என்னையும் இதில் இழுக்காதே. என்னாலே உனக்காகப் பொய் சொல்ல முடியாது.

சட்டென்று, டான்ஸ் கிளாஸில் பார்க் கும் கமலாவின் நினைவு வந்தது. அவள் மீனாட்சியை விட வயதில் பெரியவள். அற்புதமாக டான்ஸ் ஆடுவாள். அசைவு களில் ஒரு சின்னத் தொய்வு இருக்காது. பளிச்சென்று கம்பீரமாக இருப்பாள். அள வாகப் பேசுவாள். அச்சுப்பிச்சு மீனாட் சிக்கும் அவளுக்கும் சம்பந்தமே இல்லை. யூனிவர்ஸிட்டியில் படிப்பவள். அவளும் வீட்டுக்குச் சொல்லாமல் என்னவோ செய் கிறாள். காட்! ஏன் இப்படிச் செய்கி றார்கள்? இவர்களுக்கெல்லாம் ஏதோ ப்ராப்ளம் இருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

''மீரா!'' என்று அம்மா கீழிருந்து குரல் கொடுத்தாள். ''மத்தியானம் பாட்டு கிளாஸ் இருக்கு மறந்துடாதே!''

''மறக்கல்லே!'' என்று மீரா படுக் கையிலிருந்தபடியே பதில் சொன்னாள்.

''அப்பா லஞ்சுக்கு வர்றதுக்குள்ளே ப்ராக்டிஸ் பண்ணி முடிச்சுடு.''

''ஓகே!'' என்ற போது அப்பாவின் ஞாபகத்தில் சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்தது. மணி பன்னிரண்டு. அப்பா ஒரு மணிக்கு வந்து விடுவார், இன்று சனிக் கிழமை என்பதால்.

இப்படித்தான் ஒரு ச னி க் கி ழ மை அப்பா வரும் சமயத்தில் அவள் புதிதாக வாங்கிய சுருதிப் பெட்டியுடன் உட்கார்ந்து ''வர வீணா ம்ருது பாணி'' என்று தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தாள். அப்பா வுக்கு அன்று சாப்பாடே உள்ளே இறங்க வில்லை. ''இவளுக்குப் பாட்டுக் கத்துக் கொடுக்க வே ண் டி ய து அவசியமா சுஜாதா?'' என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார் அன்று முழு வதும். ''அவளை ஏன் சிரமப்படுத்தறே?''

பாட்டு ட் டி யூ ஷ ன் நிறுத்தப்பட வில்லை. ஆனால் அப்பா வருவதற்கு முன் ப்ராக்டிஸ் பண்ணி முடித்து விடுகிறபடி அம்மா கவனித்துக் கொண்டாள். அதனால் மீராவுக்கு ஏதும் பிரச்னையாயிருக்க வில்லை. பாட்டுக் கிளாசுக்குப் போவது உற்சாகமாக இருந்தது. அப்பாவின் ஏமாற் றத்தை நினைத்துச் சிரிப்பு வந்தது. பாடி னால் எம்.எஸ். மாதிரி பாட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரோ...?

''அப்படியெல்லாம் அசட்டுத்தனமா நான் எதிர்பார்க்கல்லே'' என்றார் அவளைப் பெற்றவர். ''அட்லீஸ்ட் அபஸ் வரம் இல்லாம பாட முயற்சி பண்ணு.''

அதற்கும் பெரிசாகச் சிரிப்பு வந்தது.

சத்தியத்துக்குக் கட்டுப்பட்டது போல அவள் எழுந்து அரைமணி நேரம் பாட்டுப் பயிற்சி செய்தாள் இடையில் மஹேஷ் 'நான் படிக்கணும்' என்று அவள் அறைக் கதவை ஓங்கி அறைந்து சாத்தி விட்டுப் போனதையும் லட்சியம் செய்யாமல்.

அன்று மதிய உணவிற்கு அப்பா சாப் பிட வரவில்லை. வேறு எங்கோ போவ தாக டெலிபோன் செய்தார். அவருக்காகக் காத்திருந்த மூவரும் சுரத்தில்லாமல் டீ.வி. நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்தபடி சாப்பிட் டார்கள்.

''அம்மா அத்தைப் பாட்டி தாத்தாவை இங்கே வரச் சொல்லு!'' என்றான் மஹேஷ் திடீரென்று.

''என்னடா, திடீர்னு?'' எ ன் றா ள் அம்மா.


''போரடிக்கிறது!'' எ ன் று மஹேஷ் சிணுங்கினான். பாட்டி தாத்தா வந்தா ஜாலி. நிறைய கதை சொல்லுவா.''

''கதை இல்லேன்னாலும் கனவாவது

''என்ன சார் இது, இந்தத் 'தலைவர்' சிலை படுத்தமாதிரி இருக்கு...?''

''அதுவா, அவர் மத்தவங்க கால்ல விழுந்தே.... அரசியலிலே பெரிய ஆளா வந்தாராம்!''

- ஆர்.வசந்தகுமார்



''அமைச்சரவையிலேர்ந்து அந்த மூத்த அமைச்சரை எதுக்காக நீக்கிட்டாங்களாம்?''

''ஜனாதிபதி நம்ம ஊருக்கு வந்தப்போ, முதல்வரை மட்டும் விசாரிக்காமே... அந்த அமைச்சரையும் பார்த்து எப்படியிருக்கீங்கன்னு விசாரிச்சுட்டாராம்!''

- ப. விஜயபாலன்



இருக்கும். உனக்கு என்னிக்காவது அத்தனை சுவாரஸ்யமா கனா வருதா?'' என்றாள் மீரா அம்மாவிடம்.

அப்பா லஞ்ச்சுக்கு வராமல் அம்மாவுடைய ஹாஸ்ய ரசனை குறைந்திருந்தது. அவள் பேச்சைக் கவனிக்காதவள் போல் பேசினாள்.

''பாட்டி தாத்தா இப்ப இங்கே வர மாட்டா. பம்பாய்க்குப் போயிருக்கா.''

''பம்பாயிலே யாரு இருக்கிறது?''

''பாட்டியுடைய பிள்ளை.''

''யாரது?'' என்றாள் மீரா வியப்புடன். ''நான் பார்த்திருக்கேனா?''

''நானே பார்த்ததில்லே'' என்றாள் அம்மா.

''ஏன்?''

''எனக்கும் உங்க அப்பாவுக்கும் கல்யாணம் ஆகும்போதே அவர் வீட்டை விட்டுத் தனியா போயிட்டார்.''

''ஏன்?''

''பாட்டி தாத்தாவுக்கு இஷ்டமில்லாத ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துண்டார்.''

''அவர் இஷ்டப்பட்டுதானே செய்துண்டார்?''

''ஆமாம். ஆனா அவ வேற ஜாதிப் பொண்ணுன்னு பாட்டி தாத்தா சம்மதம் கொடுக்கல்லே.''

''அம்மா, வாட் இஸ் ஜாதி?'' என்ற மஹேஷை மீரா எரிச்சலுடன் பார்த்து, ''அதைப் பத்தி அவனுக்கு அப்புறமாச் சொல்லு'' என்றாள் அம்மாவிடம். ''இப்ப எதுக்கு பாட்டியும் தாத்தாவும் பம்பாய்க்குப் போயிருக்கா? பிள்ளைகிட்ட சமாதானமாயிட்டதா?''

''ஆயிட்டதுன்னுதான் தோணறது'' என்றாள் அம்மா பட்டுக் கொள்ளாமல்.

''நீ என்னவோ மறைக்கிற மாதிரி இருக்கு எனக்கு.''

''எனக்கே சரியாத் தெரியாத போது என்னத்தைச் சொல்ல முடியும்?'' என்றாள் அம்மா. ''வம்புக்கு நிக்காதே, படிப்பு வேலையை முடிச்சுட்டுப் பாட்டுக் கிளாசுக்குப் போ.''

''இது ஒண்ணும் வம்பு இல்லே!'' என்று சொல்லியபடி மீரா எழுந்தாள். இப்போது அம்மாவிடம் விவரம் கேட்கவும் நேரமில்லை.

ஹோம்வொர்க் செய்யும் போது இடையிடையில் பாட்டியின் முகம் நோட்புக்கின் நடுவில் நின்றது, பழைய இந்திய சினிமாக் காட்சி மாதிரி. பாட்டி தனக்கு ஒரு பிள்ளை இருப்பதாகத் தவறிக் கூடச் சொன்னதில்லை. பாட்டியும் தாத்தாவும் ஒருத்தரைச் சார்ந்து மற்றவர் இருப்பதைப் பார்க்கும் போது குழந்தைகள் இல்லாததால் தான் அப்படி இருக்கிறார்கள் என்று அவள் நினைத்திருக்கிறாள். இப்பொழுது அதற்கு வேறு காரணம் இருப்பதாகத் தோன்றிற்று. வியப்பாக இருந்தது. வேறு ஜாதிப் பெண் என்பதால் இஷ்டப்படவில்லை என்பதைத் தாத்தா பாட்டியின் சுவாபாவிக உற்சாகத்துடன் சம்பந்தப்படுத்திப் பார்ப்பது கஷ்டமாக இருந்தது. அவர்களால் எப்படி அப்படிப்பட்ட காரணத்துக்காகப் பெற்ற பிள்ளையை நிராகரிக்க முடிந்தது? இந்தியாவுக்கு வந்த பின் இப்படிப்பட்ட மனித முரண்பாடுகளை அவள் கண்டிருந்தாலும், அன்பே உருவான அத்தைப் பாட்டியும் தாத்தாவும் அப்படி நடந்து கொண்டார்கள் என்பதைக் கேட்டு மனத்தில் அதிர்வு ஏற்பட்டது. பாட்டியின் பிள்ளை எப்படி இருப்பார் என்று யோசனை செய்வது சுவாரஸ்யமாக இருந்தது. கதாநாயக புருஷனாக இருந்திருக்க வேண்டும். ஒரு பெண்ணுக்காக சாம்ராஜ்யத்தைத் துறந்த எட்வர்ட் மன்னர் மாதிரி. ஆனால் அந்த எட்வர்டின் முகத்தை போட்டோவில் பார்க்கும் போது கதாநாயகன் போல் தோன்றவில்லை. ஏதோ சோகம் தெரிந்தது. அவசரப்பட்டு முடியைத் துறந்தது தேவையில்லை என்று நினைத்தது போல -

பிள்ளையோடு இப்போது சமாதானமாகி விட்டது என்றால் எப்படி ஆயிற்று? அம்மா தனக்கே தெரியாது என்கிறாள். நம்ப முடியவில்லை. பின்னால் அவளே சொல்வாள் என்று நினைத்தபடி மீரா பாட்டு வகுப்புக்குக் கிளம்பினாள். கீழே அம்மா மஹேஷுக்கு ஜாதி அமைப்பைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)

வேதாகமக் கல்லூரி தேவையா?

ஆட்களை அடையாளம் காட்ட இன்று பயன்படுவன, விரல் ரேகை, மச்சங்கள், பச்சை குத்திக் கொள்வது முதலியன. தீ விபத்து அல்லது யுத்தம் போன்ற சந்தர்ப்பங்களில் இவையும் அழிந்து போக வாய்ப்புண்டு. ஆளை அடையாளம் காண முடியாமல் போகிறது. இந்த பிரச்னைக்கு ஒரு புதிய வழி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார் டாக்டர் பரமேச்வரன் - பல் மருத்துவக் கல்லூரி பேராசிரியர்.

சரித்திர காலத்துக்கு முற்பட்ட அகழ்வாராய்ச்சியில் கூட பற்கள் மட்டுமே சிதைவுறாமல் பத்திரமாக உள்ளன. உடல் வளர்ச்சியின் போது இங்கு கால்ஷியம் சத்து கூடுவதே காரணம். எனவே சிறிய பிளாஸ்டிக் அல்லது ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் தகட்டில் அடையாள எண்ணைப் பொறித்து, மேல் வரிசைப் பல்லின் உட்புறம் பதித்து விடலாம். பிறகு தேவைப்பட்டால் இன்னார் என்று அடையாளம் காண்பது எளிது. இதற்கு 'டெண்டி கார்ட்' என்று பெயராம். சாப்பிடும் போதோ பல் துலக்கும்போதோ உறுத்தலே இராதாம்!

• • •

ரவீந்திரநாத் தாகூர் காலமாகி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. இதனால் ஒரு பிரச்னை! காப்பிரைட் சட்டப்படி ஓர் எழுத்தாளரின் படைப்புக்கள் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு தேச உடைமை ஆகிவிடும். அதாவது தாகூரின் படைப்புக்களை யார் வேணுமானாலும் பிரசுரித்துக் கொள்ளலாம். ராயல்டி கிடையாது! இதனால் விசுவபாரதி பல்கலைக் கழகத்துக்கு ஏகப்பட்ட நஷ்டம் ஏற்படும் என்பதால் பயந்து போய் அவர்கள் ஜோதி பாசுவை அணுக, அவரும் கவலைப்பட்டு இதைத் தடுக்க சட்டம் நிறைவேற்றலாமா என்று யோசிக்கிறாராம்.

''கூடாது; இப்படி தாகூருக்குச் செய்தால் மற்றவர்களும் கேட்பார்கள். மோசமான முன்னுதாரணம் ஆகும்'' என்பது மறுதரப்பு வாதம்.

வேதம் புதிது திரைப்படத்துக்குக் கதை வசனம் எழுதிய கண்ணன், தாகூரின் படைப்புக்கள் நாட்டுடமையாக வேண்டும் என்று விசுவபாரதிக்கு எழுதிப் பார்த்தார். பதில் இல்லை. வழக்குத் தொடுத்தார். 'கண்ணனுக்குப் பல்கலைக் கழகம் நவம்பர் 30க்குள் பதில் சொல்லியாக வேண்டும்'' என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது!

• • •

வி. எஸ். ராகவனின் டீவி தொடர் வேதவாக்கு பார்த்தவர்களுக்கு அதற்காக ஒரு பாராட்டு விழா சென்னையில் நடந்தது என்பது புதிய செய்தியாக இருக்கலாம். அப்போது பேசிய டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் சொன்னார் : ''போலந்து பேராசிரியர் ஒருவர் சாமவேதத்தை மியூஸிகல் நோட்ஸ் போட்டுப் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். அவர்களுக்கு இருக்கும் அக்கறை நமக்கு இல்லையே!''

''வேதாகமக் கல்லூரி ஆரம்பிக்கப் போவதாக முதல்வர் சொல்கிறார். அரசு இந்தக் கல்லூரி நிறுவுவது தேவையில்லாதது. ஏற்கெனவே எத்தனையோ வேத பாட சாலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு மான்யம் அளித்தாலே போதுமே?'' என்று கூறியவர் சோ.

☛ கண்ணன்



☛ வி. எஸ். ராகவன்



தொகுப்பு : எஸ். வி. என்.

எழுபத்தைந்து வயதான இளம் வங்கி

எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், மாவட்டத் தலைநகர்கூட அல்லாத ஒரு சின்னஞ்சிறு ஊரில், வெங்கட்ராம செட்டியார் என்பவரும், ஆதிகிருஷ்ண செட்டியார் என்பவரும் சேர்ந்து, வங்கி ஒன்றைத் தொடங்கினார்கள்.

பெயர் : கரூர் வைசியா பாங்க்.

போர்க் காலம்; பொருளாதார ரீதியாக, அப்படியொன்றும் ஊக்கம் இல்லாத சமயம். ஆனால் வியாபாரிகளின் நலன் கருதி இவர்கள் இருவரும் துணிச்சலுடன் வங்கித் தொழிலைத் தொடங்கியது; மிகுந்த பாராட்டுக்கு உள்ளாகியது.

''வெங்கட்ராம செட்டியாரும், ஆதி இருஷ்ண செட்டியாரும் அன்றைக்கு ஊன்றிய விதை, இன்று ஒரு பெரிய விருட்சமாக வளர்ந்து பவள விழாக் கொண்டாடும் தகுதியை அடைய, அவர்களுக்குப் பின்னால் வந்தவர்கள் ஒவ்வொருவரும் கார

☛ பவழ விழா வைபவத்தில் பாஸ்கரன் உரை



ணம்!'' என்கிறார் வங்கியின் தலைவர் திரு பாஸ்கரன்.

''என்னுடைய வருத்தம் எல்லாம், வங்கிகள் வெளியிடும் பாலன்ஸ் ஷீட்டை யாரும் ஊன்றிப் பார்ப்பதே இல்லை என்பதுதான். அரசுடைமையாக்கப்பட்ட வங்கிதானே? பணம் பத்திரமாக இருக்கும் என்று மட்டுமே நினைக்கிறார்கள். வங்கிகளின் செயல்பாட்டையும் மக்கள் கவனிக்க வேண்டும். பாலன்ஸ் ஷீட் படிக்கத் தெரியாத சராசரிகளை விட்டுவிடுங்கள்; விஷயம் தெரிந்தவர்கள் கூட பார்ப்பதில்லையே, பார்த்துப் பொது ஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதில்லையே?''

சேவை மனப்பான்மை என்பது மற்றொரு அம்சம். வாடிக்கையாளர் யார் என்று முகம் தெரியாமலே, ஓர் இயந்திரத்தனத்துடன் இங்கு காரியங்கள் நடப்பதில்லை. மனிதர்களிடம் பேசும்போது, ஒரு நட்புறவு இருப்பதை உணர்ந்து அனுபவிக்கலாம். ''எங்களைப் போன்ற தனியார் துறை வங்கிகளில் சிவப்பு நாடா முறை அதிகம் இல்லை. அதுவும், வணிகர்கள் பெருமளவில் கணக்குகள் வைத்துக் கொள்ள ஒரு காரணம்!'' என்கிறார் பாஸ்கரன்.

''கிராமப்புறங்களில் உங்கள் வங்கிகள் ஏதாவது....?'' என்று கேள்வியைத் தொடங்கும் போதே, ''எங்கள் கிளைகள் 65 சதவிகிதம் கிராமப்புறப் பகுதிகளில் தான் இருக்கின்றன!'' என்கிறார்.

இன்று தமிழ்நாட்டைப் பொறுத்த வரை, தனியார் துறை வங்கிகளில் இரண்டாவது பெரிய வங்கி கரூர் வைசியா பாங்க். (டெபாசிட் தொகை : 340 கோடி, 160 கிளைகள்.)

மன்மோஹன் சிங், குமாரமங்கலம் முதலியவர்களை அழைத்து அமர்க்களமாகப் பவழ விழா கொண்டாடிய கரூர் வைசியா வங்கி என்றும் இளமையுடன் விளங்க புதிய சிந்தனைகளுடன் செயல்படுகிறது.


மத்தியதர வகுப்பினரும் பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டும் இக் காலத்தில், அவர்களுக்கான ஆலோசனை மையம் ஒன்றைத் தொடங்க இருப்பதாகச் சொல்கிறார் பாஸ்கரன். ''அவ்வப்போது தகவல்கள் அடங்கிய செய்திக் கடிதம் மூலம் பொது மக்களுக்கு விவரங்கள் தர முடியும். இதற்கான, பயிற்சி பெற்ற,அநுபவம் உள்ள நபர்கள் ஆராய்ச்சி மையத்தில் பணியாற்றுவார்கள்!'' என்று கூறும் பாஸ்கரன், 'கல்கி'யில் தற்போது வெளியாகி வரும் பங்கு மார்க்கெட் பற்றிய கட்டுரைகளைப் பெரிதும் பாராட்டிப் பேசுகிறார்.

- சாருகேசி

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

உங்கள் ஃபர்னிச்சரை பாலிஷ் செய்யும் நேரமா –

அதை டச்வுட் செய்யுங்கள்.



ஃபர்னிச்சருக்கு பேசத் தெரியாது. அதனால் என்ன? ஒரு முறை பார்த்தாலே, எத்தனை பாலிஷ் அவசியம் எத்தனை தேவையில்லை என்பது புரிந்துவிடும். மேலும் அழகான ஃபர்னிச்சர் உயிரற்றுக் கிடந்தால், அதன் மதிப்புதான் என்ன? அதனால் அடுத்த முறை உங்கள் இல்லத்தை பெயிண்ட் செய்யும்போது ஃபர்னிச்சருக்கும் அவசியம் பாலிஷ் செய்யுங்கள் - டச்வுட் உபயோகித்து.

டச்வுட் உபயோகிப்பது மிகவும் எளிதானது. இதற்காக ஒரு பாலிஷ் செய்பவரை அழைக்கத் தேவையில்லை. உங்கள் பெயிண்டரே இதை பிரஷ்ஷினால் பூச முடியும்.

தெரியுமா? டச்வுட் பூசப்பட்ட ஃபர்னிச்சர் பல வருடங்களுக்கு புதியதுபோல் பொலிவுடன் இருக்கும்! ஏனென்றால் டச்வுட்-ல் பாலியூரித்தேன் உள்ளது. அது ஃபர்னிச்சரை வலுவடையச் செய்வதுடன், கறைகள், புள்ளிகள் மற்றும் கீறல்களிலிருந்து பாதுகாக்கிறது. அதனால் ஃபர்னிச்சர் மீது சூடான தேநீர் விழுந்தாலோ அல்லது ஃப்ளவர் வாஸ் உராய்ந்தாலோ, நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

டச்வுட் க்ளாஸி ஃபினிஷின் பளபளப்பு எங்கிருந்தாலும் அறிய முடியும். ஆனால் நீங்கள் பளபளக்கும் ஃபினிஷை விரும்பாவிட்டால் உபயோகியுங்கள் டச்வுட் மேட் ஃபினிஷ். இனி டச்வுட் உங்களுடையது. நீங்கள் விரும்பினால் மேட் மற்றும் க்ளாஸி ஃபினிஷ்களை கலந்து உங்களுக்கு பிடித்த அளவு பளபளப்பை ஃபர்னிச்சரில் உண்டாக்கலாம். அதனால் ஃபர்னிச்சரின் தேவையை உணர்ந்து இப்பொழுதே அதன் நன்மைக்காக கொண்டு வாருங்கள் டச்வுட்.

உங்கள் பெயிண்டரைப் பூசச் செய்யுங்கள்



ஃபர்னிச்சருக்கு புத்துயிர் ஊட்டிடும், எழிலுடன்

தயவு செய்து, டச்வுட் இன் பல ஆண்டு காலம் நிலைக்கும் அழகினைப் பற்றிய இலவச சிறு புத்தகத்தை அனுப்பவும். K5

பெயர்: ____________________

முகவரி: ____________________

டச்வுட் இன் முகவரி: **ஏஷியன் பெயிண்ட்ஸ்**
டச்வுட் பிரிவு, த.பெ. எண். 11701 பம்பாய்-400 021.

இதயத்திற்கு இதமானது

திருமதி ஷீலா பால், BSc., D.N.D., உணவியல் வல்லுநர் கூறுகிறார்.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

"நல்லெண்ணெய் இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கின்றது ஆகவே தான் நமது முன்னோர்கள் அதை "நல்ல எண்ணெய்" (தமிழ்) "மஞ்ச்சி நூனு" (தெலுங்கு) என்று அழைத்தனர். இது உடல் ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பானது என்பதால் தான் தென்னிந்தியர்கள் சமையல் எண்ணெய்யாகப் பயன்படுத்துகின்றனர்."

Sheila Paul



Mrs. Sheila Paul B.Sc.,
Diploma in Nutrition & Dietetic
Senior Dietition
Madras



இதயம் நல்லெண்ணெய் தயாரிப்பில் தரத்தில் சிறந்த எள் மட்டுமே உபயோகிக்கப்படுகின்றது. பிஞ்சு எள் மற்றும் பொக்கு முழுவதுமாக நீக்கப்படுகின்றது. ஆகவே இதயம் நல்லெண்ணெய் பொங்குவதில்லை. பூரி, வடை, பஜ்ஜி எது வேண்டுமானாலும் தயார் செய்யலாம்.



இதய
நல்லெண்ணெ

இதயம் சுகமாக்கும் எதையும் சுவையாக்கும்

SILVER SPOON